P. 3850.

# தமிழகப்
# பழங்குடி மக்கள்

பதிப்பாசிரியர்

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்,**
M. A., Ph. D. (Kerala), Ph. D. (Ind. U. S. A.)
பேராசிரியர்,
மொழியியல்துறை, அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

**மொழியியல் துறை**
**ஆராய்ச்சி மாணவர் வெளியீடு-1**
**1972**

முதற் பதிப்பு பிப்ரவரி 1972

உரிமை :

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

விலை ரூ. 2-70

சிவகாமி அச்சகம், அண்ணாமலைநகர்

# உள்ளுறை


பதிப்புரை

டாக்டர் ச. அகத்தியலிங்கம்
M.A., Ph.D. (Kerala); Ph.D. (Ind U. S. A.) i

1. எருக்கலவாரு

டாக்டர் கோ. சீனுவாசவர்மா
M.A., Ph.D., Dip. in Sanskrit 1

2. கோத்தர்கள்

கோ. சுப்பையா M.A., Dip. in Telugu 15

3. கசவர்கள்

வே. சிதம்பரநாதன் M.A. 31

4. தோடர்கள்

சு. சக்திவேல் M.A., M.A. 47

5. இருளர்

ஆர். பெரியாழ்வார் M.A., Dip. in Telugu 73

6. காணிக்காரன்

இரா. பாலகிருஷ்ணன் M.A. 101

# பதிப்புரை

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்**
M.A., Ph.D. (Kerala), Ph.D. (Ind. U.S.A.)

வேறு பல துறைகளோடு ஒப்பிடும்பொழுது மொழியியல் புதியதொரு துறையாகவே இன்றும் உளது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே இத்துறைக்குரிய கருவைக் காண முடியும் என்றாலும் அண்மைக் காலத்தில்தான் அது தனியொரு துறையாக - அறிவியல் கண்கொண்டு ஆராயும்துறையாக மலர்ந்தது என்பதை அறிவோம். தொல்காப்பியனும் பாணினியும் பிளேட்டோவும் அவர்தம் மாணவர் அரிஸ்டாட்டிலும் மொழியியல் வினாக்கள் பலவற்றை எழுப்பியிருப்பினும் பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில்தான் இது தனியொரு துறையாக வடிவெடுக்கத் தொடங்கியது.

மொழியியலின்கண் பல்வேறு கூறுகளைக் காணலாம். ஒரு மொழியின் அமைப்பு எவ்வாறு உள்ளது, அதன் இலக்கணக்கூறுகள் எவ்வாறு உள்ளன, அதன் தொடரியல் எவ்வாறு உள்ளது என்பன போன்றவற்றை ஆராய்வதும் அறுதியிடுவதும் மொழியியல் அறிஞனின் தொழில். இதுபோன்றே மொழியின் உருவத்திற்கும் அது கூறும் பொருளுக்கும் இடையே ஏதாவது தொடர்பு உள்ளதா என்பதை ஆராய்வதும் மொழியியலின் ஒரு கூறுதான். இதனை மொழியியலாளர் மட்டுமல்லாமல் சில தத்துவ ஆராய்ச்சி அறிஞர்களும் ஆராய்ந்து வந்துள்ளனர்.

இதுபோன்ற மொழியியல் அறிஞர்கள் பலர் மொழியை அடிப்படையாக வைத்து மனிதவரலாறு, சமூகவாழ்வு போன்றவற்றை ஆராய்வதும் உண்டு. மனிதனுடைய சமூக பழக்கவழக்கங்களில் மொழி பேசும் பண்பும் ஒன்று. ஒரு மொழியில் காணப்படும் சொற்கள், அதன் கண் காணப்படும் அமைப்புமுறை போன்றவை அம்மொழி பேசுவோனுடைய வாழ்வையும் வரலாற்றையும் சமூகக் கோப்பையும் பிரதிபலித்து நிற்பது உண்டு. காட்டில் வாழும் மனிதனுடைய மொழியில் காட்டு மரங்கள், விலங்கு கள், காய்கள், கனிகள் போன்றவற்றைக் குறிக்கும் பல வேறு சொற்களைக் காணமுடியும். இதுபோன்றே நாட்டில் வேளாண்மைத் தொழிலில் ஈடுப்பட்டிருப்போரின் பேச்சில் வேளாண்மைக்கு வேண்டிய கருவிகள், பல்வேறு நெல் வகைகள் போன்றவற்றைக் குறிக்கும் சொற்கள் ஏராள மாகக் காணப்படும். ஏற்றத்தாழ்வுகள் பலவற்றைக் கொண்ட சமுதாயத்தினரின் பேச்சு, அவற்றைக்காட்டும் மொழி நிலைகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். இத் தகைய நிலையை உள்ளத்தில் கொண்டு மொழியை அடிப் படையாக வைத்து மனிதனின் சமுதாயத்தை ஆராய் கின்றனர் சில சமூக மொழியியல் அறிஞர்கள். மொழியைப் பற்றிய அறிவால் மொழியின் அமைப்பையும் ஆக்கத்தை யும் ஆராய்வது மொழியியல் அறிஞனின்(Linguist) தொழில். மொழியை மையமாக வைத்து மனிதனின் வரலாற்றை ஆராய்வது மானிடவியல் அறிஞனின (Anthropologist) தொழில்: இதுபோன்றே மொழியின் துணைகொண்டு சமூகத்தின் தன்மைபற்றி ஆராய்வது சமூக மொழி யியல் அறிஞனின் (Sociolinguist) தொழில். இத்தகைய ஆராய்ச்சித் துறைகளை முறையே மொழியியல் (Linguistics), மானிட மொழியியல் (Anthropogical Linguistics) சமூக மொழியியல் (Socio Linguistics) என அழைப்பர். 19-ஆம்

நூற்றாண்டில் சமூகவியல் என்ற புதியதொரு துறை வளராத நிலையில், பிந்திய இரண்டையும் இணைத்து 'Ethnological Philology' அல்லது 'Linguistic Ethnology' என்று அழைத்துவந்தனர்.

மொழியியல் மொழியைப் பற்றிய அறிவினை மட்டுமின்றி அம்மொழியினைப் பேசும் மக்களின் பண்பையும் பண்பாட்டையும் அறிவதற்குத் துணை புரிவதாகவும் உள்ளமை கண்கூடு. குறிப்பாக வரலாறு அற்ற மக்களின் வாழ்க்கையும், வாழ்க்கை வளர்ச்சியையும் அறிய அது மிகத்துணை புரியும்.

திராவிட மொழியைப் பொறுத்தமட்டில் இருபத்து மூன்றுக்கும்[1] அதிகமான மொழிகள் உள்ளன என்பதும் அவற்றுள் பல பழங்குடி மக்களால் பேசப்படுவன என்பதும் நாம் அறிந்த உண்மை. இந்திய நாட்டில் மட்டுமின்றி பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளிலும் இம்மொழிகள் வழக்கில் உள்ளன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, குடகு ஆகிய மொழிகளைத் தவிர பிற மொழிகள் அனைத்தும் திருந்தாத மொழிகள். அவற்றுள் பல

---

1 திராவிட மொழிகள்

| தென் திராவிட மொழிகள். | நடுத் திராவிட மொழிகள். | வட திராவிட மொழிகள். |
|---|---|---|
| 1. தமிழ் | 1. தெலுங்கு | 1. குருக் |
| 2. மலையாளம் | 2. கோண்டி | 2. மால்தோ |
| 3. கன்னடம் | 3. கோயா | 3. பிராஹுயி |
| 4. கோத்தா | 4. கொண்டா | |
| 5. தோடா | 5. பெங்கோ | |
| 6. துளு | 6. மண்டா | |
| 7. குடகு | 7. கூயி | |
| 8. கொரகா | 8. கூவி | |
| | 9. கோலாமி | |
| | 10. நாயக்கி | |
| | 11. பர்ஜி | |
| | 12. கதபா | |

பழங்குடி மக்களால் பேசப்படுவன. திராவிட இனத்தின் வரலாறும் வாழ்வும் நாகரிகமும் நன்கு அறியப்பட வேண்டு மானால் இப் பழங்குடி மக்களது வாழ்வும் வரலாறும் பழக்க வழக்கங்களும் நன்குத் தெரிதல் வேண்டும்.

நாகரிகத்தில் சிறந்து விளங்கும் மக்களைப் போன்றே பழங்குடி மக்களும் தங்களுக்கெனத் தனியொரு பாரம் பரியத்தையும், பழக்கவழக்கங்களையும் கொண்டு வாழ் கின்றனர். இவர்களின் பல பழக்கவழக்கங்கள் நாகரிக மடைந்த மக்களின் கண்களுக்கு அருவருப்பையும் ஆச்சரி யத்தையும் விளைவிக்கலாம். ஆனால், இவர்களும் சில துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். எஸ்கிமோ என்று அழைக்கப்பெறும் பழங்குடி மக்கள் பனி படர்ந்த பிர தேசங்களில் வாழுகின்ற முறை நமக்கு வியப்பைத் தரு வதாக அமைந்துள்ளது. தாங்க முடியாத குளிரிலிருந்து தங் களைப் பாதுகாத்துக்கொள்ளுகிற முறை நாகரிக மக்களின் அறிவைக் கூட வியப்புறச் செய்யும் வகையில் உள்ளது. இதுபோன்றே அடர்ந்த ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் மக்கள் தங்கள் வாழ்வினை அமைத்துக் கொள்ளுகிறமுறை வியத்தகு தன்மையில் உள்ளது எனக்கூறிச் சென்றுள் ளனர் பல மானிடவியல் அறிஞர்கள்.

இத்தகைய நிலையைப் பழங்குடி மக்களின் வாழ்வில் பல துறைகளில் காணலாம். இலக்கியத்திலும் அதனோடு ஒட்டிய பல துறைகளிலும் அவர்களின் சிந்தனைச் சிறப்பைக் காணமுடியும். இவர்களிடையே வாழும் பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள், கவிதைகள், கதைகள் போன்றவற்றில் பழங்குடி மக்களின் கற்பனையையும் மனப் பக்குவத்தையும் காணலாம். நாகரிகம் பெற்றவர்கள் என்று கருதப்படும் மக்களிடையே வழங்கும் பல நம்பிக் கைகள் பழங்குடி மக்களிடையேயும் உள்ளன.

கதிரவன் பல குதிரைகள் பூட்டிய தேரில் பவனி வருகிறன் என்பது தமிழ் மக்களிடையே காணப்படும் ஐதீகம். இது தமிழ் இலக்கியங்களிலும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளமை தமிழ் இலக்கியம் படிப்பார்க்கு நன்குத் தெரியும். இதே ஐதீகத்தை ஒரிஸ்ஸா, வங்காளம் போன்ற மாநிலங்களில் வாழும் பழங்குடி மக்களிடையேயும் காண்கிறோம். சூரியனையும் சந்திரனையும் படைத்தான் கடவுள் என்றும் வானவீதியில் பவனி வந்த சூரியன் களைப்படைந்து கடவுளிடம் முறையிட்டான் என்றும், அவனுடைய களைப்பை நீக்க ஐந்து குதிரைகள் பூட்டிய தேர் ஒன்றை கடவுள் வழங்கினுர் என்றும் கூறுகிறது இக்கதை. இது போன்ற கருத்துக்களைப் பல பழங்குடி மக்களிடையே காணமுடியும்.

பழங்குடி மக்களிடையே வாழும் இலக்கியங்கள் ஏட்டில் ஏருதவைதான் - எழுத்தில் வராதவைதான். எனினும் பரம்பரை பரம்பரையாக அவர்கள் நாவிலே வாழும் இவ்விலக்கியங்களில் சிறந்த உத்திகளையும் இலக்கியப் பாணிகளையும் காணமுடியும்.

இந்திய நாட்டு இலக்கிய வகைகளில் தூது என்பது ஒன்று. தமிழில் காணப்படும் தொண்ணூற்ருறு பிரபந்தங்களில் இது ஒன்ருகும். இத்தகைய இலக்கிய வகைகளை பாரத நாடு முழுவதும் காணலாம். சங்ககாலம் முதல் இன்று வரையிலுள்ள புலவர்களில்பலர் இவ்வகை இலக்கியத்தில் தங்கள் கவித்துவத்தைக் காட்டியுள்ளனர். மேகத்தைத் தூதாக விட்டு மேகவிடு தூது என்ற பேரிலக்கியத்தைச் சமைத்தான் காளிதாசன். தமிழைத் தூது விட்ட கவிஞனையும், நெஞ்சைத் தூதுவிட்ட கவிஞனையும் பெற்றெடுத்தது தமிழ்.

ஆனால், இலக்கியம் காணாத, எழுத்துருவத்தை எண்ணிக்கூடப் பார்க்க முடியாத தோடா மொழியின்கண் காணப்படும் கவிதையொன்று கிளிகளைத் தூது விடும் நிலையில் நெஞ்சைத் தொட்டு நிற்கக்காணலாம். கணவரைப் பிரிந்து நோயால் வாடி வதங்கிக் கிடக்கும் பெண்ணொருத்தி தன்னுடைய கணவர்களுக்கு (பல கணவர்களை மணந்து கொள்ளும் முறை (polyandry) தோடர்களிடையே வழக்கில் உள்ளது) கிளியைத் தூது விடுவதாக வரும் பாடல் நயமிக்குத் தோன்றுகிறது.

சின்னஞ் சிறுகிளியே
    செம்பவள வாய்க்கிளியே !
தங்க நிறங்கொண்டு
    தவழ்ந்து வருங்கிளியே !
வெள்ளி நிறங்கொண்டு
    வேகமாய் வருங்கிளியே !
பறந்து செல்லாயோ
    பக்கத்து வீடெல்லாம்
சென்று சேராயோ
    சேணெடுந் தூரமெல்லாம்

என்று கிளியைத் தூது விடுகிறாள். கட்டிலிலே படுத்துக் கிடக்கும் அவள் மனக் கண்ணிலே தன் கணவர்களுடன் தான் கழித்த நாட்களும் உல்லாசமாக ஆடி ஓடிய இடங்களும் நினைவுக்கு வருகின்றன. கிளியிடம் கூறுகிறாள்.

குவிந்தோ மலைதனில்
    குந்திநான் இருந்தேன்
அம்மலை அழகெல்லாம்
    அன்றுநான் கண்டுநின்றேன்

படகர்தம் கோயிலையே
பார்த்துத்தான் நான்நின்றேன்
எத்தியோடி கோயில்தன்னை
என்றும்நான் கண்டுநின்றேன்
பறந்துசெல்லாயோ அங்குப்
பாய்ந்துநீ சேராயோ
சென்றுநீ செப்பாயோ
என்சோகக் கதைதன்னை

என்றெல்லாம் கூறித் தன் கணவர் தேனுடு மந்தில் உள்ளனர், அவர்களிடம் சென்று தன் சேதியைச் சொல் என்று கூறி அழுகின்றுள்.

தேனேடு மந்தெல்லாம் என்
கால்தோய்ந்த இடமெல்லாம்
பறந்து செல்லாயோ
பாய்ந்துநீ சேராயோ
தேனேடு மந்தை நீ
பார்த்துத்தான் வாராயோ
தேடி அவரைக் கண்டு
என்சோகந்தான் சொல்லாயோ
தோடர் இடம்சென்று
சொல்லாயோ என் சோகந்தன்னை
சின்னஞ்சிறு கிளியே
செம்பவள வாய்க்கிளியே !
தங்க நிறங்கொண்டு
தவழ்ந்து வருங்கிளியே !
வெள்ளி நிறங்கொண்டு
வேகமாய் வருங்கிளியே!
பறந்து செல்லாயோ அங்குப்
பாய்ந்துநீ சேராயோ
சின்னஞ் சிறுகிளியே
செம்பவள வாய்க்கிளியே !

எனக் கூறி நிற்கும் இத் தோடர்மொழிக் கவிதை இலக்கியம் காணாத நிலையிலும் எழுச்சி மிக்கு நிற்கிறது. பழங்குடி மக்களின் கவிதையாக்கும் திறனுக்கும் ஆற்றலுக்கும் அரண்கட்டி நிற்கிறது.

இந்திய நாடு மிகப் பழமையான நாடு. பல நூற்றாண்டுகட்கு முன்னே தனக்கென ஒரு வாழ்வையும் வரலாற்றையும் அமைத்துக் கொண்டதுடன் தனியொரு பாரம்பரியத்தையும் கொண்டிருந்த பெருமையுடையது. நாகரிகத்தில் சிறந்துவிளங்கும் நகர மக்களையும், நாகரிகமே இன்னதென அறியாத எத்தனையோ மலைவாழ் பழங்குடி மக்களையும் கொண்டுள்ளது. இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே உலக அரங்கில் நின்று நிலவும் இலக்கிய இலக்கணங்களையும், கற்பனைக் காவியங்களையும், காதல் இலக்கியங்களையும், கவிதைச் செல்வங்களையும், பக்திப் பாடல்களையும் பெற்றெடுத்த சமுதாயங்களை மட்டுமின்றி, எழுத்து இலக்கியத்தை எண்ணிக்கூடப் பார்க்க முடியாத பாமர மக்களையும், பழங்குடி மக்களையும் கொண்டுள்ளது.

இன்று இந்திய நாட்டில் ஏறத்தாழ மூன்று கோடிக்கும் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்களை 427 இனங்களாகப் பகுக்கின்றனர். இவ்வினங்களில் சில ஒருசில மக்களையே கொண்டுள்ளன. இன்னும் சில பல ஆயிரம் மக்களைக் கொண்டவை. அந்தமானிய மொழி பேசுபவராக பதினெண்மரே உள்ளனர். இது போன்றே மத்தியப் பிரதேசத்தில் அகாரியா மொழி பேசும் மக்களாக 98 பேரே உள்ளனர். ஆனல், கோண்டி (1,384,321), குருக் (1,141,804), சந்தாலி (3,247,058) போன்ற மொழியினைப் பேசுபவராக பல ஆயிரம் மக்கள் உள்ளனர்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 23 பழங்குடியினர் வாழ்வதாக 1961 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணிப்பு கூறுகிறது. இவ்வினங்களைச் சார்ந்த மக்களின் தொகை 1,60,595. இவர்கள் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றனர்[2]. நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே பத்துக்கு மேற்பட்ட பழங்குடி மக்களினங்கள் உள்ளன. இவர்களுள் இருளர், தோடர், குறும்பர், கோத்தர், பனியர், காட்டுநாயக்கர், முள்ளுக் குறும்பர், கசவர், பெட்ட குறும்பர் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இன்று இவ்வினங்களைச் சார்ந்தோராக 12,303 உள்ளனர்.

| | |
|---|---|
| இருளர்கள் | 4052 |
| தோடர்கள் | 706 |
| குறும்பர் | 1174 |
| கோத்தர் | 832 |
| பனியர் | 4777 |
| காட்டுநாயக்கர் | 552 |

---

2

| | | |
|---|---|---|
| செங்கல்பட்டு | ... | எருக்கலா, கொரகா, இருளர், காட்டு நாயக்கர் |
| வட ஆற்காடு | ... | குறும்பர், பளியர், மலையாளி, கொண்டாரெட்டி, கொறவர் |
| தென் ஆற்காடு | ... | குறிச்சன், பளியர், இருளர் |
| சேலம் | ... | சோளகர், ஆதியன், கொரகா, காடர், மலையாளி, கொறவர் |
| கோயம்புத்தூர் | ... | குறும்பர், மலாசர், முதுவர், புலையர், காடர், சோளகர், இருளர், ஊராளி |
| தஞ்சாவூர் | ... | குறிச்சன், புலையர் |
| திருச்சி | ... | குறும்பர், பளியர், மலையாளி |
| மதுரை | ... | முதுவர், பளியர், புலையர் |
| இராமநாதபுரம் | ... | பளியர் |
| திருநெல்வேலி | ... | குறிச்சன், பளியர், புளியர், காணிக்காரன், மலை அரையன் |
| கன்னியாகுமரி | ... | காணிக்காரன், மலபண்டாரம், மலக்குறவன், பளியர் |
| நீலகிரி | ... | தோடர், கோத்தர், இருளர், கசவர், பனியர், காட்டு நாயக்கர், முள்ளுக் குறும்பர், ஜேனு குறும்பர், பெட்ட குறும்பர் |

| | |
|---|---|
| முள்ளுக் குறும்பர் | 769 |
| கசவர் | 391 |
| பெட்ட குறும்பர் | 161 |

பழங்குடி மக்களை அவர்கள்பேசும் மொழி, அவர்கள் பின்பற்றும் சமயம், வாழ்க்கைக்கு வேண்டியவற்றை ஈட்டிக்கொள்கின்ற முறை போன்றவற்றை அடிப்படை யாக வைத்து வகைப்படுத்துவர். சில பழங்குடி மக்கள் வேட்டையாடுதல், காய்கனி சேகரித்தல், மீன் பிடித்தல், தேன் சேகரித்தல் போன்ற தொழில் மூலம் தங்கள் வாழ்வுக்கு வழிதேடிக்கொண்டு இருக்கின்றனர். இவர்கள் பிற மக்களுடன் எந்தவிதத்தொடர்பும் கொள்வதில்லை. வாணிபம், பண்டமாற்று போன்றவை இவர்களுக்குத் தெரியாதவைகளாகும். இதனல் இவர்களுடைய மொழியைப்பற்றிப் பிறரோ அல்லது பிறர் மொழியைப்பற்றி இவர்களோ தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படுவதில்லை. அந்தமானில் வாழும் ஜாரவா (Jarawa) மக்கள் இவ்வகையில் அடங்குவர்.

இன்னும் சில பழங்குடி மக்கள் எளிய முறையில் விவசாயம் செய்து வருவர். திரிபுரா, மணிப்பூர், நாகாலாந்து, ஒரிஸ்ஸா, மத்தியபிரதேசம் போன்ற இடங்களில் வாழும் பலவேறு மக்களை இப்பிரிவின்கண் அடக்கலாம். காடு கொன்று மேடுகளைத் தூர்த்து விவசாயம் செய்வர். இவர்கள் ஒருவகை மண்வெட்டி, சிறிய சிறிய ஈட்டிகள் போன்ற எளியகருவிகளைப் பயன்படுத்துகின்றனரே யன்றி கலப்பை போன்ற கருவிகளை இன்னும் பயன்படுத்தத் தொடங்கவில்லை.

வேறுசில பழங்குடி மக்கள் ஓரளவிற்கு முன்னேறிய வாழ்க்கை நடத்தி வருவதைக் காணலாம். இவர்கள் திருந்தியமுறையில் விவசாயம் செய்வதுடன் கன்றுகாலிகளை

வளர்த்தல் தோட்டங்கள் வளர்த்துப் பயிரிடுதல் போன்ற பலவேறு தொழில்களில் ஈடுபடுவர். இதனால் இவர்களைச் சுற்றி உறையும் மக்களுடன் பல்லாற்றானும் தொடர்பு கொண்டு வாழ்வர். எனவே, அம்மக்களின் மொழிக்கும் இவர்களின் மொழிக்குமிடையே ஏற்படும் தொடர்பு காரணமாகப் பலவேறு சொற்கள் இப்பழங்குடி மக்களின் மொழியில் வந்து கலந்துறவாடும். நீலகிரியில் வாழும் பழங்குடி மக்களை இவ்வகையில் சேர்க்கலாம்.

நீலகிரி பழங்குடிமக்கள் அனைவரும் திராவிடமொழிகளைத் தங்கள் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். தோடர்கள் பேசும் தோடாமொழியும் கோத்தர்கள் பேசும் கோத்தா மொழியும் தனிமொழிகளாகக் கருதப்படுகின்றன. ஆனால், இருளர்கள் பேசும் இருளமொழி தமிழ்மொழியின் கிளைமொழியா (dialect) அல்லது தனியொரு மொழியா என்ற ஐயம் மொழியியல் அறிஞர்களுக்கிடையே உண்டு. இருளமொழியைப்பற்றி ஆராய்ந்த டிப்ளாத்[3] என்பவர் இது தமிழின் கிளைமொழி (dialect) எனக் கூறுகிறார். ஆனால், கமில் சுவலபில்[4] இது ஒரு தனிமொழியென்றும் தமிழிலிருந்து வேறுபட்டது என்றும் கூறுகிறார். இம்மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் பெரியாழ்வாரின் ஆராய்ச்சியின் முடிவின்போது இதில் தெளிவு ஏற்படும். குறும்பர்கள் பேசும் மொழியில் கன்னட மொழியின் சாயலையும் தமிழ் மொழியின் கலப்பையும் காணமுடிகிறது. அதனால் இதனைக் கன்னடம் அல்லது தமிழ்மொழியின்

---

3. Diffloth G. F. **The Irula language, a close relative of Tamil**, University of California, Ph. D. Dissertation, 1968.
4. Zvelebil, K. "Irula Vowels", **Indo - Iranian Journal**, Vol xii, No. 2, pp. 113–114. 1971.

கிளைமொழி எனக்கருதுவர்.[5] பனியர்கள் மொழி தமிழும் மலையாளமும் கலந்த கலப்பாகக் காணப்படுகின்றது. இதுபோன்றேகாட்டு நாயக்கர் பேசும் மொழியும் மலையாள-தமிழ் கலவையாகவே தோன்றுகிறது. கசவர்கள் பேசும் மொழிகன்னடமொழியின் கிளைமொழி என அம்மொழியைப் பற்றி ஆராயும் சிதம்பரநாதன் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். (பக்கம். 36).

பெட்ட குறும்பர்கள் பேசும் மொழி பெட்ட குறும்பா என்றழைக்கப்படுகிறது. இவர்களது மொழி தனியொரு மொழியாகக் கருதப்படவேண்டிய நிலையில் உள்ளது. எனினும் இம்மொழியைப்பற்றி தெளிவான ஒரு ஆராய்ச்சியே இவ்வினுவிற்கு முடிவான விடையைத்தரும்.

இம் மொழிகளைப்பற்றி மொழியியல் அறிஞர்கள் நன்ருக அறிந்திருப்பினும் இவைபற்றி அண்மைக்காலம் வரையிலும் விரிவான ஆராய்ச்சி ஏற்படவில்லை. தோடா மக்களைப் பற்றி மானிடவியல் அறிஞர்களும் சமூகவியல் அறிஞர்களும் விரிவாக ஆராய்ந்துள்ளனர். எனினும் இம் மொழியின் விரிவான இலக்கணம் எதுவும் இதுவரையிலும் தோன்றவில்லை. பேராசிரியர் எமனோ அவர்கள் இம் மொழி பற்றிய கட்டுரைகளை ஆங்காங்கே எழுதியுள்ளார். கோத்தா மொழியைப்பற்றிய குறிப்பு ஒருசில காணப்படினும் திருந்திய முழு இலக்கணம் எதுவும் இன்னும் உருவாகவில்லை. இதுபோன்றே பிற மொழிகளும் உள்ளன. இந்நிலையில் அண்ணுமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை இம் மொழிகளைப்பற்றி ஆராய்வதில் அக்கறை கொண்டு தனியொரு பகுதியாக இவ்வாராச்சியை

---

5. Emeneau, M. B. "The Non-literary Dravidian languages" **Current Trends in Linguistics,** Vol.v, p. 342, 1969.

அமைத்து இம்மொழிகளின் விரிவான இலக்கணங்களை எழுதும் பணியை மேற்கொண்டுள்ளது. சுப்பையா, சக்திவேல், பெரியாழ்வார், சிதம்பரநாதன், ஜெயபால், பரிபூரண தேவதாஸ் போன்ற இளைஞர்கள் இப்பணியில் ஆழ்ந்துள்ளனர்.

பழங்குடி மக்களால் பேசப்படினும் இலக்கியம் எதுவும் இல்லாமல் இருப்பினும் இம்மொழிகள் திராவிடமொழியியல் படிப்புக்கு மிகவும் இன்றியமையாதனவாகும். நாகரிகம் வாய்ந்த மக்களால் பேசப்படும் மொழிகள் பிறமொழிகளின் செல்வாக்குக்கு ஆட்படுபவை. பிறமொழிச் சொற்களும் இலக்கணக் கூறுகளும் இம் மொழிகளில் புகுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். இந்நிலையில் பழங்குடி மக்களால் பேசப்படும் மொழிகள் ஓரின மொழியின் ஒப்பியல் ஆராய்ச்சிக்கும் வரலாற்று ஆராய்ச்சிக்கும் மிகப் பயனுடையதாக இருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

மேலும் தோடா, கோத்தா போன்ற மொழிகளில் பரம்பரை பரம்பரையாக வாய் வழி வரும் பாடல்கள் ஏராளமாக உள்ளன. இப்பாடல்களைத் திரட்டி ஆராயின் திராவிடமொழிகளின் கவிதை வளம்பற்றி அறிவதற்கு இவை மிகவும் துணைபுரிவனவாக அமையும். இதுபோன்றே இம்மொழிகளில் காணப்படும் விடுகதைகள், பழமொழிகள் போன்றவை நம்நாட்டுப் பழமையான பழக்க வழக்கங்களையும் பண்புகளையும் படம்பிடித்துக் காட்டுவனவாக இருக்கும். இந்நிலையில் இம்மொழிகளைப்பற்றிய ஆராய்ச்சி மிகப் பயனுள்ளதாக அமையும்.

தமிழ்நாட்டில் காணப்பெறும் கிளை மொழிகளும் நன்கு ஆராய்வதற்கு உரியன. கிளைமொழிகளைப்பற்றிய ஆராய்ச்சியின் பயனை மொழியியல் உலகம் நன்கு உணரும்.

பரந்துபட்ட ஒரு நிலப்பகுதியின்கண் பேசப்படும் எந்த மொழியிலும் கிளைமொழிகள் காணப்படுவது இயற்கை. அதிலும் நெடுங்கால வாழ்வும் வரலாறும் கொண்ட தமிழ் மொழியில் பண்டைக்கால முதற்கொண்டே பல்வேறு கிளைமொழிகள் இருந்துள்ளன என்பதைப் பலரும் உணர்வர் சங்ககால மொழியிலும் இந்நிலை உண்டு.[6] இதுபோன்றே கல்வெட்டுத் தமிழிலும் பல கிளைமொழிகள் உண்டு.[7] பல்வேறு சாதிகளையும் பிரிவுகளையும் கொண்டுள்ள இன்றைய தமிழ்நாட்டில் வாழும் மக்களிடையேயும் பல்வேறு கிளை மொழிகளைக் (dialects) காணலாம்.

பல கிளைமொழிகள் சாதாரண மக்களின் பேச்சுமொழி யாக உள்ளன. இலக்கிய மொழியை ஆராய்வதைப் போலவே சாதாரண பேச்சு மொழியையும் ஆராய்தல் வேண்டும். ஒருமொழியின் வளமும் வேகமும் இலக்கியங்களில் மட்டுமின்றி பேச்சு மொழியிலும் காணக்கிடக்கின்றன. தமிழ்நாட்டில் காணப்படுகிற பேச்சு மொழிகளில் உள்ள சொல்வளம் அனைத்தும் இலக்கியமொழியில் ஊடுருவி இடம்பெறும் போது தமிழ் இலக்கியமொழி எல்லையற்ற சொல்வளம் பெற்று நிற்கும். குறிப்பிட்ட ஒரு வகுப்பினரால் அல்லது ஒரு பகுதியினரால் பேசப்படும் பேச்சுமொழி குறிப்பிட்ட ஒரு பண்பில் வனப்பும் வளமும் பெற்று நிற்கக்காணலாம். கூடை பின்னும் குறவர்கள் பேசும் தமிழ் பெட்டி, கூடைபோன்ற பொருள்களைக் குறிக்கும் சொற்கள் பலவற்றைக் கொண்டு விளங்கும். மீனவர்கள் பேசும் பேச்சுமொழி கட்டுமரம், படகு, மீன் போன்றவற்றைக் குறிக்கும் சொற்களை அதிகமாகக்

---

6. Shanmugam, S. V. 'சங்க இலக்கிய மொழி அமைப்பு' ஆராய்ச்சி 2. 332-33 (1970)
7. Shanmugam, S. V. 'The Dialects in the inscriptional Tamil' *Orbis* 20. 90-98 (1971)

கொண்டு நிற்கும். இவையனைத்தையும் திரட்டி இலக்கிய மொழியில் ஏற்றித் தமிழ்மொழியை வளப்படுத்துவது மொழியியல் அறிஞனின் கடமையாகும்.

இதுபோன்றே இன்றைய இலக்கியத் தமிழில் காண முடியாத சில பழமையான தமிழ் இலக்கணக் கூறுகளைச் சில பேச்சு மொழிகளில் காணமுடியும். குகரம் ஆறும் வேற்றுமைப்பொருளில் வருகிறது என்பதைத் தொல்காப்பியம் கூறிச்செல்லும். இந்நிலை இன்றைய இலக்கியத் தமிழில் இல்லையாயினும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பேசப்படும் பேச்சுத்தமிழில் இதனைக் காணலாம்.

இந்நிலையில் பேச்சுத்தமிழ் ஆராய்ச்சியின் இன்றியமையாமை நன்கு விளங்கும். இதனால்தான் கன்னியாகுமரி முதல் சென்னைவரையிலும் காணப்படுகிற கிளைமொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை. பல பேச்சு மொழிகளில் ஒன்றாக உள்ளது கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் காணிக்காரர்கள் பேசும் தமிழ்.

மொழிகளைப்பற்றி ஆராய்கின்ற மாணவர்கள் அம்மொழிகளைப் பேசும் மக்களின் வாழ்க்கை முறையினையும் சார்புநிலையில் சேகரித்தனர். அது அவர்களின் முழுவேலையன்று எனினும் இச்செய்திகளைச் சேகரிப்பதில் அவர்கள் காட்டிய ஆர்வம் பாராட்டுதற்குரியது. பழங்குடிமக்களின் பலவேறு பழக்கவழக்கங்களும் பண்புகளும் வாழ்க்கை முறையும் அவர்களுக்கு ஒருவித வியப்பையும் புதுவகை அறிவையும் தந்து நிற்கக்கண்டனர். இதுபோன்றே காணிக்காரர்கள் வாழ்வும், வாழ்வுமுறையும் எருக்கலவாரு என்ற பழங்குடி மக்களின் பண்பும் பழக்கமும் புதுநிலையில் தோன்றின. தோடர்களிடையே காணப்படும்

கவிதைகள் கவர்ந்து நின்றன ஒருவரை. கோத்தர்களின் காதல் மணம் கவர்ந்து நின்றது மற்றொரு மாணவரை. கசவர்களின் பொங்கல் விழாவினையும் திருமணத்தினையும் கண்டு வியந்து நின்றார் இன்னொரு மாணவர். இருளர்களின் பூப்பு விழாவும் திருமண விழாவும் புதிய செய்திகளைத்தந்து நின்றன மற்றொருமாணவருக்கு. இதுபோன்றே எருக்கல வாரு என்றழைக்கப்படும் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையும் ஊர்விட்டு ஊர் சென்று உறையும்போது அவர்கள் சூழலுக்கேற்பத் தங்களைப் பக்குவப் படுத்துமுறையும் கவர்ந்து நின்றன இன்னொரு ஆராய்ச்சியாளரை. காணிக்காரர்களின் வாழ்விலே தோய்ந்துவிட்டார் மற்றொரு ஆராச்சியாளர். இந்நிலையில் ''யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்'' என்ற பெருநோக்கத்தால் அவற்றையெல்லாம் தொகுத்து நூலாக அளிக்க முன்வந்தனர். நூல் சிறியதாயினும் நோக்கம் பெரிது. இம்முயற்சியில் ஈடுபட்ட இவர்களுக்கு எனது வாழ்த்தும் பாராட்டும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் ஆராய்ச்சி மாணவர்களின் முதல் முயற்சியாக வரும் இந்நூல் வாழையடி வாழையாக வேறுபல நூல்களையும் கண்டுவாழ, தமிழுலகம் வரவேற்கும் என நம்புகிறேன்.

# 1. எருக்கலவாரு

டாக்டர் கோ. சீனுவாசவர்மா

குறிஞ்சிநில மக்களைக் குன்றில் வாழ்கின்றவர் என்ற பொருள் படும்படி குன்றவன் (குறவன்) என்று வழங்குவது தமிழ் மரபு. குறப்பெண் குறத்தி ஆவாள். இச்சொற்கள் இன்று நாகரீகம் குறைந்த, அழுக்கடைந்த மேனியுடைய, குறைந்த ஆடையினையுடைய எல்லா மக்களையும் குறிக்கின்றன. ஏளனமாக ஒருவனைக் குறிப்பிடும் பொழுது 'கொறப்பயல்' என்று திட்டுவது வழக்கில் காணப்படுகிறது.

உப்புக்குறவர், கறிவேப்பில்லைக்குறவர், கேப்மாரிக் குறவர் (காப்பு மாற்றும் குறவர், காப்பு-விலங்கு) பச்சை குத்திக் குறவர், குஞ்சுக்குறவர், காதுகுத்திக்குறவர், கூடை முறம் கட்டும் குறவர், ஊர்க்குறவர், அம்பிகொத்திக் குறவர், பஞ்சரம் கட்டிக் குறவர் எனப் பத்தொன்பதுக்கும் மேற்பட்ட பிரிவினர்கள் குறவர் இனத்தில் உண்டு என அறிகிறோம். வாழும் இடத்தைக் கொண்டும், பச்சை மலைக் குறவர், அழகர் மலைக்குறவர், பவழமலைக்குறவர் எனவும் பெயர் பெற்றுள்ளனர்.

இவர்களில் தமிழ்நாட்டில் வாழும் குறவர்இனத்தில் கூடை முறம் கட்டியும், பச்சை குத்தியும், குறிசொல்லியும், வாழுகின்ற கூட்டத்தினருடன், பன்றிமேய்க்கும் இனத்தவரையும் பழங்குடிமக்கள் எனக் கருத இடமுண்டு. ஏனெனில் இந்தியாவில் பிறமொழி பேசும் அயல் மாநிலங்களிலிருந்து இங்கு வந்து குடியேறி வாழும் நரிக்குறவர்

களும் (குருவிக்காரன்) குறவர் என்ற பெயரில் அழைக்கப் படுகின்றனர். அவர்கள் பேசும் மொழியாகிய 'வாக்ரி-போலி' வடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது ஆகும். மேலும் அவர்களுடைய பழக்கவழக்கங்கள், பண்பாடு, விழி அமைப்பு முதலியன வேறுபட்டுள்ளன.

இந்நாட்டின் பழங்குடி மக்களாகவும் குறவர் என்ற பெயரிலும் அறியப்படுகிற மக்களைப்பற்றி இங்கு விரிவாகக் காண்போம்.

> **"கூடெ மொறம் கட்டலியோ அம்மே"**
> **"பச்சை குத்தலியோ அம்மே"**
> **"குறி ஜோஸ்யம் பார்க்கலையோ அம்மே"**
> **"மொறேரெ மொறேரே மொறே"**

என்று கூவிக்கொண்டு செல்லுகின்ற மக்களைப் பார்த்தால் அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொழிலை மட்டும் செய்கின்ற வர்களாகத் தோன்றுகிறது. அவர்கள் பேச்சு கொச்சை யாக இருந்தாலும் தொழில் திறனில் அவர்களுக்கிணை யாருமில்லை.

தமிழ் நாட்டில் அறுவடைக் காலத்தில் ஆந்திரநாட்டி லிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து தொம்பை (குதிர்), கூடை, கூண்டு, மயில்புட்டி, தட்டு போன்ற சாமான்களை முடைந்து விற்பனை செய்யும் மக்கள் யார் என்ற எண்ணம் எழுவது இயல்பு. தமிழ் நாட்டிலும் கசங்கு, மூங்கில் பிளாச்சு முதலியவற்றால் கூடையும், முறமும் முறையே பின்னி விற்கும் குறவர்களும் ஒரே இனத்தவரா என்ற கேள்வியும் உடன் எழுகிறது.

இம்மக்களைப் பற்றியும், மொழியைப் பற்றியும் ஓரளவு அறிந்து கொண்டால் ஐயங்கள் நீங்குமல்லவா?

தெலுங்குமொழி வழங்கும் ஆந்திர மாநிலத்தில் ஏறக் குறைய எழுபத்தி ஐயாயிரம் மக்கள் 'எருக்கலவாரு' 'எருக்குலவாரு' என்ற பெயரில் பழங்குடி மக்கள் பட்டிய லில் இடம் பெற்றுள்ளனர். எருக்கு என்றால் அறிதல் என்ற பொருள். தெலுங்கு மொழியில் மேலும் எருக்குலப் பெண்கள் குறிசொல்ல தெருவில் செல்லும்பொழுது 'எருக்கோ அம்மா, எருக்கு' என்று கூறுவர். இங்ஙனம் இம்மக்கள் கூறுவதால் தெலுங்குமொழி பேசும் மக்கள் இவர்களை 'எருக்குலவாரு' என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் அம்மக்கள் தம்மைத்தாமே 'குர்று' இனத்தவர் என்றும் 'குர்று வாத்த நங்க குலவாத்த' (குறு வார்த்தை எங்கள் குல வார்த்தை) என்று தம் மொழியினையும் குறிப் பிடுகின்றனர். 'குர்று/குறு என்பது குறவர் என்பதின் குறை வடிவம் ஆகும். குறு மக்கள் ஆறு பெரும் பிரிவின ராகத் தொழில் முறையால் பிரித்தறியப்படுகின்றனர். முச்சுகுறு, ஓரங்குறு, நாடுதிரிகிறகுறு, தப்பலாயகுறு, குஞ்சுகுறு என்ற பெரும் பிரிவில் சிறுசிறு கோத்திரங் களுக்குக் கிளைகள் உள்ளன.

'எருக்குலவாரு' மக்கள் உடல் அமைப்பாலும், உடை, பழக்கவழக்கங்களாலும், மொழியாலும் திராவிடர் இனத் தைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதி. ஆடவரும் பெண் டிரும் கறுப்பு நிறத்தவர்கள். ஆணின் தலைமுடி சுருண் டும், பரட்டைத்தலையாகவும்; உடல் வழுவழுப்பாகவும் அமைந்துள்ளன. கண், புருவ அமைப்பு, கருவிழி அமைப்பு, உதடு முதலியன திராவிட இனத்தவருக்கே உரிய அடிப்படையில் அமைந்துள்ளன. ஆடவர்கள் தலையைச் சுற்றி தலைப்பாகையும், இடுப்பில் அறைஞாணும், நீர்ச்சீலையும், இடையில் சுற்றுக்கட்டு அல்லது கீழ்ப்பாய்ச்சி யும், முட்டிக்கு மேலே இருக்கும்படி பருத்தியால் ஆன

ஆடையினை அணிந்துள்ளனர். பெண்கள் சேலையைக் கீழ்ப் பாய்ச்சிக் கட்டி, முந்தானையை இடதுபக்கம் மாராப்பாக அணிந்திருப்பார்கள். இளம் பெண்கள் மாத்திரம் ரவிக்கை அணியும் பழக்கம் அண்மைக் காலத்தில் தோன்றியுள்ளது. வெள்ளி (அ) ஈயத்தால் ஆன காப்புகளையும், வங்கிகளையும் அணிந்துள்ளனர். தலைமுடியைச் சீவி கொண்டை (அ) கோடாலி முடிச்சு போட்டுக் கொள்ளுவது பொதுவான வழக்கம். நன்கு சுமை சுமப்பதாலும், பேணி பாதுகாக் காததாலும், தலைமுடி பரட்டையாகவும், சிக்குப் படிந்தும், குட்டையாகவும் காணப்படுகிறது.

உணவு அரிசி, கம்பு, கேழ்வரகு, சோளம் மற்றும் தினைவகைகளை அதிகமாக உண்ணும் பழக்கமுடையவர் கள். பன்றியிறைச்சியும் கேழ்வரகுக் களியும் நிறைய உண்கின்றனர். இறைச்சி, மீன், கருவாடு போன்ற 'கவிச்சி'யும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சைவ உணவினைப் புரட்டாசி மாதம் சனிக்கிழமைகளில் மட்டும் 'பெருமாள்' வழிபாட்டினர் கைக்கொண்டுள்ளனர். காய்கறி, கிழங்கு வகைகள், பால், முட்டை போன்றன உணவில் மிகக் குறைந்த அளவே உள்ளன. குழந்தை தாய்ப்பாலையே மட்டும் குடித்து வளருகின்றது. உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதச் சத்து இறைச்சியிலி ருந்தே கிடைக்கிறது. இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்லும்பொழுது கீரை வகைகளையும் உட்கொள்ளும் வாய்ப்பு கிட்டுகிறது. இப்பழக்கம் 'குறு' இனத்தவர் அனைவருக்கும் பொதுவானது. அவரவர் தொழிலுக் கேற்ப சிற்சில மாறுபாடுகள் காணலாம். அதனை அவ்வப் பிரிவினரைப் பற்றிக் காணும்பொழுது விரிவாக அறிய முடியும்.

முச்சுக்குறு: குறிசொல்லுவதைத் தொழிலாகக் கொண்ட குறவர்கள் முதல் பிரிவினர். அவர்களை 'முச்சுக்குறு' என்றழைப்பர். குறிசொல்ல ஒரு சிறிய கோல், முறம், கூடை, சோழிகள் இவற்றுடன் புறப்பட்டுச் சென்று, குறிகேட்க விரும்புவோர் தரும் நெல் (அ) அரிசியை முறத்தில் பரப்பி அதன்மீது சோழியைப் பரப்பி, அவை கிடக்கும் நிலையினையும், தான் வழிபடும் தெய்வத்தையும் மனதில் நினைத்து குறிசொல்லத் தொடங்குவர். கேட்போரின் மனநிலைக்கேற்ப, தத்தம் திறமையினாலும், குறி கூறி பணமும், உணவும் பெறுவார்கள். குறிசொல்வது போன்றே பச்சை குத்தும் தொழிலிலும் இப்பெண்கள் வல்லவர்கள். நம் நாட்டில் பச்சை குத்தி அழகுபடுத்திக் கொள்ளும் வழக்கம் தொன்றுதொட்டே இருந்து வருகிறது. இப்பழக்கம் மேலைநாடுகளிலும், ஜப்பான் போன்ற கீழை நாட்டிலும் பரவிய நிலையில் அவர்களும் இன்று பல வண்ணங்களில் பச்சைகுத்திக் கொள்ளுகின்றனர்.

பச்சை குத்த ஒருவித மை தயாரித்து அதனை உடலில் பூசி, ஊசியினால், விரும்பும் வடிவத்தைக் குத்துகின்றனர். அதன் வழியே மை தோலின் அடியில் சென்று ஒருவித பசுமை நிறத்தைத் தருகிறது. ஆனால் பச்சை குத்தும் பொழுது ஏற்படுகிற வலியும், குத்திய சிறிது நேரத்தில் அவ்விடம் வீங்கி வலியையும் வேதனையையும் தரும். ஆதலால் மழைக்காலத்தில் பச்சைகுத்துவதை விரும்புவதில்லை. பலவித உருவங்கள், பறவைகள், விலங்குகள், கோலம், தம்பெயர் அல்லது தாம் விரும்புகின்றவரின் பெயர் முதலியவற்றை உடம்பின் பல பாகங்களிலும் பச்சை குத்திக் கொள்ளுகின்றனர். பச்சைபுட்டிக்காரி என்றும் சிலவிடங்களில் வழங்குகின்றனர்.

முச்சுக்குறு இனத்தைச்சேர்ந்த ஒவ்வொரு பெண்ணும், தன் தாயிடமிருந்து குறிசொல்லும் முறையையும், பச்சைகுத்த மை தயாரிக்கும் முறை, கோலங்கள் வரையும் முறை முதலியவற்றை கற்கிருள். அது இரகசியமாகக் காப்பாற்றப்படுகிறது. மற்ற பிரிவினரைக் காட்டிலும் தாம் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் முச்சுக்குறுவினருக்கு உண்டு.

ஓரங்குறு: ஒரே ஊரில் நிலைத்து வாழ்கின்ற குறவர்கள் ஓரங்குறு ஆவர். சிறுசிறு குடிசைகளில் வாழ்கின்றனர். பன்றி, கோழி வளர்த்தல், ஊருக்குக் காவல் பணி புரிதல், ஓய்வு நேரங்களில் ஈச்சம் கசங்கு கூடை முடைதல், ஓலைப்பாய் பின்னுதல் போன்ற தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். பயிர்த்தொழில் செய்வோருக்குப் பன்றியின் கழிவனை உரம் சேர்த்துக் கொடுப்பதும் வருவாயினைத் தருகிறது. மூன்ரும் பிரிவினரான ''நாடு திரிகிற குறு'' வெளியூர்கட்குச் செல்லும்பொழுது அவர்களின் உடைமைகளைப் பாதுகாத்துத் தரும் பொறுப்பினையும் இவர்கள் ஏற்றுக் கொள்வர். ஈடாக தானியங்களைப் பெற்றுக் கொள்ளுவார்கள்.

மற்ற நான்கு பிரிவினரைச் காட்டிலும் பொருளாதாரத் துறையில் உயர்ந்துள்ளனர். பொன், வெள்ளி நகைகளை அணிவதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஆடவர்கள் காதில் ''கடுக்கன்'' அணிவது குறிப்பிடத்தக்கதாகும்.

நாடு திரிகிற குறு: வாழும் ஊரைவிட்டு அடிக்கடி வெளியூர் சென்று கூடை, காதி, தட்டு, குதிர் முதலியன முடைந்து விற்று வாழ்வதால் இப் பிரிவினரை நாடுதிரிகின்ற குறவர்கள் என்று ஒதுக்கிவிட்டனர். அவர்தம் வாழ்வு ஒரு போராட்டமாகவே அமைந்துள்ளது. தொழி

லுக்கு மூலப்பொருளான கசங்கு, ஈச்சமரத்தின் கழிகளாகும். காடுகளைக் குத்தகைக்கு எடுத்து ஈச்சமரச் சோலைகளையும் மட்டைகளையும் தனித்தனியாக அறுத்து எடுத்துக் கசங்கு உண்டாக்குகின்றனர். அக்கசங்கினைச் சிறிது சிறிதாகப் பிளந்து ஈர்க்குகளைப் பதப்படுத்தி கட்டுக்கட்டாகச் சேமிக்கின்றனர். முட்களை உடைய ஈச்சமரத்திலிருந்து கசங்கு அறுக்க ஒருவிதமான முன்வளைந்த நீண்ட கைப்பிடியுடைய கத்தி உதவுகிறது. அதனைக் ''கொறவன் கத்தி'' என்று வழங்குகின்றனர். இதனை ஆடவர்கள் இடுப்பில் உள்ள அரைஞாணில் செருகி வைத்திருப்பார்கள்.

தொலைவில் உள்ள ஊர்கட்குச் செல்லும் பொழுது ஒரு கூட்டமாகவே செல்கின்றனர். கசங்குக் கட்டுகளை லாரி அல்லது ரயில் மூலமாக ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பி விட்டு, பின்னர் அங்கு சென்று அதனைப் பெற்று தொழில் செய்கின்றனர். ஆடவர்களே பெரும்பாலும் குதிர் (காதி) முடைகின்றனர். பொழுது புலரும் முன்னரே அதனைத் தலையில் சுமந்து சென்று அருகில் உள்ள சிற்றூர்களில் 7 முதல் 10 ரூபாய் வரை விற்கின்றனர். அதன்மூலம் வருகிற வருவாயுடன், புட்டி, தட்டு முடைந்து விற்கின்ற பெண்டிர் வருமானமும் அவர்கள் அன்றாட வாழ்க்கைக்குக் காட்டுக் குத்தகைக்கும் போதுமானதாக உள்ளது. செல்வத்தைச் சேமிக்க முடியாத நிலையில் முன்னேற்றமடையாத மக்களாகவே உள்ளனர். மீண்டும் தம் சொந்த ஊருக்குத் தை, மாசி, மாதங்களில் திரும்புகின்றனர். இடைப்பட்ட நாட்களில் நாடோடி வாழ்க்கையாகக் குழந்தை குட்டிகளுடன், ஒரு கூடையில் சமைப்பதற்கான மண்சட்டி, அலுமினியத் தட்டுகளுடன் தேவையைச் சுருக்கிக் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்கின்றனர்.

**தப்பலாயக்குறு:** ''தப்பை'' என்ற சொல் எருக்குல மொழியில் மூங்கிலைக் குறிக்கும். மூங்கிலைப் பிளந்து

அதனுல் முறம், தாங்கல், தட்டி முடைகின்ற குறவர்களே தப்பலாயக்குறு என்ற பிரிவினர். தாழை மரத்தின் விழுதினைப் பிளந்து அதனுல் கூடை முறம் கட்டும் குறவர்களும், இவர்களும் ஈச்சங்கோலைப் பயன்படுத்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காட்டில் மூங்கில் வெட்டலாமேயன்றி, அங்கு அதனைப் பிளந்து செப்பனிடுதல் கூடாது. ஏனெனில் மூங்கிற்சிம்புகள் எளிதில் தீப்பிடிக்கும் தன்மையன. காட்டிற்குச் செல்லும் பொழுது "தீ" என்று சொல்லக்கூடாதென ஒரு பழக்கம் இவர்களிடையே காணப்படுகிறது. அது கேடுவிளைவிக்கும் என்பது நம்பிக்கை. ஊர்ச் சந்தைகளில், தாம் முடைந்த முறம் அல்லது சுளகுகளைக் கழுதைகளின் மீது கட்டுக் கட்டாகக்கொண்டு வந்து விற்பனை செய்வர். அதில் செம்மண் சாயம் பூசி பொலிவுடன் விற்கின்றனர். முன்னர்ப் பயிர்த்தொழில் செய்வோரும், கிராம மக்களும் ஒருங்கே மூங்கிலாலான முறத்தை ஏராளமாக வாங்கினர். இப்பொழுது இருப்பு முறம் இவர்களின் வருமானத்தைக் குறைத்துவிட்டது. மேலும் காகிதம் செய்ய மூங்கில் பயன்படுவதால் ஆலை முதலாளிகளுடன் போட்டியிட்டு இவர்களால் வாங்க முடிவதில்லை.

குஞ்சுகுறு என்ற பிரிவினர் பனை ஈர்க்கில் கத்தாழை நார் முதலியவற்ருல் புருசு (brush) குஞ்சம், துடைப்பம் செய்வதில் வல்லவர்கள். இவர்கள் செய்யும் பொருள்களுக்கேற்ப குஞ்சுகுறு (குஞ்சம் செய்பவன்), உத்லவாடு (உறி செய்பவன்) கோத்ல வாடு (குரங்காட்டுபவன்) என அழைக்கப்படுகின்றனர். இவர்களைத் தனித்தனிப் பிரிவாக எண்ண இயலவில்லை.

எருக்குல மக்களின் திருமணமுறை இந்தியப் பழங்குடி மக்களின் திருமண நிகழ்ச்சிகளில் உள்ள குடிப்பழக்கத்

தையும், பெண் விலைபேசல் போன்ற வழக்கங்களையும் சமுதாயத்தில் பெண்ணுக்கு உயர்ந்த இடம் தரப்பட வில்லை என்பதையும் காட்டுகிறது. ஒருவன் ஒருத்தி என்ற மரபில் கணவன் மனைவியராக வாழ்கின்றனர். பலதார மணம் இன்றியமையாத சூழ்நிலையிலேயே விரும்பப்படு கிறது. இரண்டாம் மனைவியாக வருபவள் பெரும்பாலும் மூத்தாளின் தங்கையாகவோ அல்லது உறவுப் பெண்ணாக வோதான் இருப்பாள். பெற்றோரால் உறுதிசெய்யப்படு கின்ற திருமணம் பெண் பூப்பெய்துவதற்கு முன்னரும் கூட நிகழலாம். அவர் தம் மொழியில் திருமணத்தைக் குறிக்க இருக்கும் சொல் ''சேர்த்துக் கொள்ளுதல்'' (சேர்ந்துகொம்) ஆகும். ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து வாழ்தலேயன்றி, அடிமையல்ல என்பது விளங் கும். கணவன் மனைவி இருவருமே பொருள் ஈட்டும் முயற்சியுடையர் என்ற சமுதாய அமைப்பைக் காட்டுகிற தல்லவா?

மாப்பிள்ளை வீட்டாரே திருமணம் பேசி, செலவு செய்து பெண் கொள்ளுதல் வேண்டும். பெண் பேசி உறுதிசெய்யும் முறை மிகவும் சுவையானது. மாப்பிள்ளை யின் தந்தை பெண்ணின் பெற்றோரை அணுகிப் பெண் கேட்டு இசைவு பெறுதல் வேண்டும். அவர் தம் உறவி னரை அழைத்து அவர்கள் முன்னிலையில் பெண்ணுக்குச் சேரவேண்டிய பரிசத் தொகை (ஓலி) வெற்றிலை பாக்கு முதலியவற்றை மாப்பிள்ளையின் தந்தையிடமிருந்து பெற்றுக்கொள்ளுவார். பின்னர் அனைவரையும் மாப்பிள்ளை யின் தந்தை ''கள்'' வழங்கி மகிழ்விக்க வேண்டும். அப்பொழுது வயதில் முதிர்ந்தவருக்கே கள் மொந்தை தந்து, கள் கொடுப்பதின் காரணத்தைக் கேட்க வேண்டும். அம்முதியவர், தன் முன்னிலையில் இன்னார் மகளை, தங்கள் மகனுடன் சேர்ந்துகொள்ள உறுதியளித்துள்ளார் என்பதை

அறிவேன்; அதற்காகவே இந்த கள்ளை எனக்குக் கொடுக்கின்றீர்கள் என்று கூறிவிட்டு குடிப்பார். இது போன்று குழுமியுள்ள அனைவரும் ஒவ்வொருவராகக் கூறி கள்ளுண்டு மகிழ்வர். திருமணம் மாப்பிள்ளையின் வீட்டில் நிகழும். கறுப்புப் பாசி மணியுடன் பொன்னுலான "பொட்டு" ஒன்றினையும் தாலியாக மணமகன், பெண்ணின் கழுத்தில் கட்டுவான். மணப்பெண் சிறுமியாக இருந்தால், தாய் மாமன் தோளில் தூக்கிக் கொண்டு வந்து மணமகன் வீட்டில் விட வேண்டும். அதற்கு நான்கு மாடா (ஒருமாடா இரண்டு ரூபாய்க்குச் சமம்) அன்பளிப்பாக மாப்பிள்ளை தருதல் வேண்டும். விருந்துச் சாப்பாட்டுடன் விருந்தினர் திரும்புவர்.

**தெய்வ வழிபாடு :**

சிறு தெய்வ வழிபாட்டினர் என்று கருதப்பட்ட போதிலும் இவர்கள் வாழ்கின்ற நாட்டின் பெரும்பான்மை யோருக்கு ஏற்ப ஆந்திரத்தில் உள்ள ஏழுமலையானையும் வணங்குகின்றனர்.

போலேரம்மா, முனீசுவரடு ஆகிய இரண்டு தெய்வங்களின் வழிபாடு குறிப்பிடத்தக்க முறையில் உள்ளது. சேவல் கோழி அல்லது பன்றி பலியிடல் (பறிபோடு சேதி) இவர்களின் விசேஷ வழிபாடுகளாகும். சங்கராந்திப் பண்டிகை, யுகாதிப் பண்டிகை ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் புத்தாடை உடுத்தி, கூடியிருந்து களிக்கின்றனர். உயிர்ப்பலியிட்டு, ஊன் உண்டு வாழும் எருக்குலவர்களும் புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் பெருமாளுக்கு விரதமிருந்து பொங்கலிட்டுத் தேங்காய் பழத்துடன் கற்பூரம் ஏற்றி வழிபடுவது கவனிக்கத்தக்கது. பேய், பிசாசுகள், மறுபிறப்பு ஆகியவற்றிலும் இறந்தவரின் ஆவி அங்கேயே

சிலகாலம் வசிக்கும் என்பதிலும் நம்பிக்கை கொண்டுள்ளனர். வெளியூருக்குப் புறப்படும் பொழுது நாய், தலையை ஆட்டுதலுடன் மண்ணைக் காலால் புரண்டுதலும் தீமை விளைவிக்கும் என எண்ணுகின்றனர்.

**எருக்குலவர் மொழி :**

எருக்குலவர் திராவிடர் என முன்பு கண்டோமல்லவா. இனி அவர்தம் மொழியைப்பற்றி ஓரளவு தெரிந்து கொள்ளுவோம். மக்கட்தொகை கணக்கெடுப்பினரின் கருத்துப்படி ''எருக்குலமொழி'' தமிழின் ஒரு பேச்சு வழக்காகும். ஆனால் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவருக்கும், தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவருக்கும் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இது தனித்தியங்குகிறது.

ஒலியன் அமைப்பிலும், இலக்கண அமைப்பிலும் தமிழ், தெலுங்கு இரண்டு மொழிகளினின்றும் வேறுபட்டுள்ளது. உயிர் ஒலியன்கள்-குறில், நெடில், மூக்கொலியுடைய உயிர்; மெய்யொலிகள்-குரல் அசைவுடைய வல்லொலிகள் முதலியன சிறப்பு அம்சங்களாகும். மேலும் ழகரத்திற்கு ஒப்பாக குரல் அசைவுடைய ககரம் (g) வருகிறது. தெலுங்கில் (ḍ) டகரம் வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

| தமிழ் | எருக்குல மொழி |
|---|---|
| ஏழு | ஓகு |
| எழுநூறு | ஓகொந்த |
| பொழுது | பொகுது |

தெலுங்கில் உள்ள வெடிப்போசை மெய்யொலியன்கள் (aspirated Phonemes) எருக்குல மொழியில் இல்லை.

**இலக்கண வேறுபாடுகள்**

ஒலிவடிவில் தெலுங்கினின்று நெடுந்தூரம் விலகியுள்ளது போலவே, தமிழின் இலக்கண அமைப்பினின்றும் எருக்குலமொழி வேறுபட்டுள்ளது.

எ. "ஈ ஊர்க்கோரு ஈசங்கோலு இல்ல"

த. இந்த ஊரில் ஈச்சங்கோல் இல்லை

எ. "ஆ(ம்) வ்லிகேரு போயி ஈசங்கோலு அர்த்னு வாராஃகு"

த. ஆடவர்கள் போய் ஈச்சங்கோல் அறுத்துக்கொண்டு வருகின்றார்கள்.

எ. "நானு உண்ட்டிகானு காதி செச்சு(ம்)"

த. நான் ஒருவனே குதிர் செய்கிறேன்.

எ. "பாய்கோக போய் தண்ணி சேத்துகொண்டு வா"

த. கிணற்றுக்குப்போய் தண்ணீர் சேந்திக்கொண்டு வா.

எ. "நாக்கு அரவ(ம்) தெலிமது"

த. எனக்குத் தமிழ் தெரியாது.

எ. "இட்டி இக்ர குறு நிங்களுக்கு அந்தா ஆகும்"

த. இங்கே இருக்கிற குறவர்கள் உங்களுக்கு என்ன முறை யாகும்.

(எ. எருக்குலமொழி, த. தமிழ்மொழி)

மேலே குறிப்பிட்ட வாக்கியங்களில் வேற்றுமை உருபுகளையும், வினையீறுகளையும் ஒப்பிட்டு நோக்கினால் வேறுபாடுகள் நன்கு விளங்கும்.

| எ. மொழி | த. மொழி |
|---|---|
| ஊர்க்கோரு | ஊர்-இல் |
| வாராஃகு | வருகிருர்கள் |
| உண்ட்டிகானு | ஒருவன்-ஏ |
| பாய்-கோக | கிணறு-க்கு |
| நாக்கு | எனக்கு |
| தெலிமது | தெரியாது |
| நிங்களுக்கு | உங்களுக்கு |
| அந்தா | என்ன/எந்த |

எண்கள்:

| | | | |
|---|---|---|---|
| உண்டு | 1 | ஆறு | 6 |
| ரொண்டு | 2 | ஓகு | 7 |
| மூடு | 3 | ஒட்டு | 8 |
| நாலு | 4 | ஓம்பெது | 9 |
| அஞ்சு | 5 | பொத்து | 10 |
| | | இர்தி | 20 |

சொல்லாக்கத்திலும் கூட எருக்குலமொழி தனக்கென ஒரு அமைப்பைப் பெற்றுள்ளதால் அதனைத் தனியொரு மொழி என்று கூறலாம். தமிழில் ''இருபது'' (20) இரண்டு பத்து என்ற இரண்டு உருபன்களின் மாற்று உருபன்களான இரு, பது என முறையே அடுத்து வருகிறது. இங்கு இர்-தி என்ற உருபன்சேர்ந்து இர்தி என்ருகும்பொழுது மாற்ருெலியனின் வடிவம் மாறுபட்டிருக்கின்றது. மேலும் ஏழு, எட்டுக்கு இணையான சொற்களின் முதலில் ஒகர மாகி மாறி வருவது ஒலியனின் மாற்றங்களையும் காட்டு கிறது. எருக்கலமொழியின் கூறுகளை ஆழ்ந்து ஆராய் வோருக்கு, திராவிடமொழியில் தென் பிரிவு மொழிகளான தமிழ், மலையாளம் ஆகியவற்றுடன் உள்ள ஒப்புமையும், வேறுபாடும் நன்கு விளங்கும்.

# 2. கோத்தர்கள்

கோ. சுப்பையா, M.A.

மனிதன் தான் வாழுமிடத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலைக் கேற்ப தன் வாழ்க்கையினையும், பண்பாட்டு வளர்ச்சி (Cultural development) யினையும் அமைத்து கொள்கிறான். அவன், வேறு இடத்தில் வாழும் மனிதனின் வாழ்க்கை முறை, பண்பாட்டு வளர்ச்சி சமுதாய அமைப்பு, முதலிய வற்றில் நின்று மாறுபட்டு நிற்கிறான். என்றாலும் சமுதாய அடிப்படைக் கூறுகளில் (Social Basic setups) ஒற்றுமை கொண்டுள்ளதை, பல்வேறு சமுதாய அமைப்புக்களை ஒப்பிநோக்கி ஆராய்ந்தால், நம்மால் உணரமுடிகிறது.

இன்றைய அறிவுலக வளர்ச்சியின் துணைகொண்டு முன்னேறி வரும்போது, மனித சமுதாயப் பண்பாட்டுக் கூறுகள் எனக்கூறப் பெறுபவைகளில் பெரும்பாலனவை களைப் பழங்குடி மக்கள் பல இனத்தவரிடையே காணப் படுவதை நாம் உணரலாம். இதனை மனதில்கொண்டு, மலைகளின் எழிலரசியான நீலகிரி மலைத்தொடரில் வாழும் பல பழங்குடி இனத்தவர்களில் ஓரினத்தவரான கோத்தர் களைப்பற்றி இங்கு நாம் படித்து மகிழலாம்.*

கோத்தர்களைத் 'திராவிட இனத்தவர்கள்' என மொழி இயல்வல்லுநர்களும் (Linguists) மானிட இயல் வல்லுநர்களும் (Anthropologists) கூறுவர். மானிட

* தமிழகத்தில் நீலகிரி மலைத்தொடரில் இருளர், கோத்தர், குறும்பர், கசபர், தோதுவர், பனியர், காட்டுநாயக்கர் போன்ற பழங்குடி மக்கள் பலர் வாழ்கின்றனர்.

இயல் தத்துவப்படி, இவர்கள் 'நீக்ரோடைட்டு (Negritoid)' எனும் ஆதிமனித இனத்தைச் சேர்ந்தவர்கள்.[1] இவர்கள் நல்ல உயரமும், உடல் ஆரோக்கியமும், உள்ளவர்கள். கூரிய நீலநிறமுள்ள கண்களும், நீண்ட மூக்கும், அகன்ற நெற்றியும், கருத்த தலை முடியும் உடையவர்கள்.

நீலகிரி மலையில் கோத்தர்கள் ஏழு இடங்களில் வாழுகின்றார்கள். இவர்கள் தங்கள் ஊரை 'கோகால்' என அழைப்பர். இவர்தம் ஊர்கள் பொதுவாக நகரத்தை விட்டுக் காட்டிற்கு அருகில் அமைந்திருக்கும். இவர்கள் மலைச்சரிவைச் சமதளமாக மாற்றித் தங்கள் ஊரை அமைத்துக் கொள்ளுவதுடன், அவற்றின் அருகில் சோலைகளையும், தேயிலை காப்பித் தோட்டங்களையும் உருவாக்கிக் கொள்கின்றனர். எல்லா ஊரையடுத்தும் மலையருவிகளைக் காண்பது ஒரு சிறப்பாக அமைகிறது.

பொதுவாகக் கோத்தர்களுடைய ஊர்கள் முப்பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருப்பினும், இருபெரும் பிரிவுகளைக் கொண்ட ஊர்களையும் காண முடியும். ஒவ்வொரு பிரிவும் 'கேர்' (தெரு) என்று அழைக்கப்படும். மூன்று பிரிவுகள் உடைய ஊர்களில் 'மேகேர்'; 'நட்கேர்'; 'கிகேர்' என்ற பகுப்புக்களையும்; இரு பிரிவுகளை உடைய ஊர்களில் 'ஆகேர்'; 'ஈகேர்' என்ற பகுப்புக்களையும் காணலாம். ஆகேரும், ஈகேரும் மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 'மேகேர்'; 'நட்கேர்'; 'கிகேர்' என வழங்கப்படுகின்றன. ஒரு கேர்க்கும் மற்றொருகேர்க்கும் இடையே அகன்ற திறந்தவெளியுண்டு. அவ்வெளிக்கு 'கவால்' என்று பெயர். ஒவ்வொரு ஊரிலும் ஒரு தெரு உண்டு. அதற்கு 'ககேர்' என்று பெயர். அவ்வீதியில் ஊர் பூசாரிகளும், மருளாடியும் வசிப்பார்கள். திருவிழாக்

1. A. L. Kroeber: Anthropology, Pp: 135—38; 155.

காலங்களில் இத்தெருவில்தான் ஆட்டமும் பாட்டும் நடை பெறும். ஒவ்வொரு கேரிலும் குறைந்தது இருபது வீடுகள் இருக்கும்.

கோத்தர்கள் தங்கள் வீட்டை 'பய்' என்று கூறுவர். கோத்தர்கள் தங்கள் இனத்தலைவரைக் 'கொத்கார்ன்' என்று அழைக்கின்றனர். இவர் ஊர் பொது காரியங்களை யும், ஊர் பஞ்சாயத்து, வழக்கு முதலியவற்றை, 'மண்யேவ்கார்ன்' என்பவரின் துணையுடன், பெரியோர் களுடன் கலந்து, நியாயங்களை வழங்குவர். இவ்விரு வரும் பொதுக் காரியங்களில் முன்னின்று சிறப்புற நடத்து வார்கள்.

ஒவ்வொரு ஊரின் வலது கோடியில் இரு கோயில் களுண்டு. அவற்றை 'அய்னோர்குட்ய்' (தந்தை கடவுள் கோயில்) என்றும்;'அம்னோர்குட்ய்' (தாய்க்கடவுள் கோயில்) என்றும் வழங்குகின்றனர். இவ்விரு கோயில்களின் காரி யங்களைச் செய்வதற்கு 'மின்த்கனோன்' எனும் தலைமை பூசாரியும், அவருக்குத் துணையாக 'தேர்கார்ன்' எனும் இரண்டு துணைபூசாரிகளும் இருப்பார்கள். இவர்கள்தான் கோத்தர்களின் பண்டிகையான 'கம்பட்ராய்ன்தேர்வ்'ஐச் சிறப்புற நடத்துவார்கள். கோத்தர்கள் தங்கள் ஊர் களின் பெயரோடு 'கோகால்' எனும் சொல்லைச் சேர்த்துக் கூறுவர்.

(உ-ம்) கினார்ட்கோகால் — கீழ்க்கோத்தகிரி
போர்காட் கோகால் — கோத்தகிரி
கொல்மேல் கோகால் — கொல்லிமலை (குன்னூர்)
திச்காட் கோகால் — திருச்சிகடி (ஊட்டி)
மேக்னாட் கோகால் — குந்தா
குர்கோஜ் கோகால் — சேலூர்
கல்காச் கோகால் — கூடலூர்

**'கொல்மேல்கோகால்'** எனும் கோத்தர்களின் ஊரில் மூன்று கோயில்களுள்ளன. அவற்றில் மூன்ருவது கோயிலின் பெயர் **'குனால் அய்ன் குட்ய்'** (சிறிய தந்தை கடவுள் கோயில்) எனவாகும். கோத்தர்களுடைய ஊர் சோலைகளின் நடுவில் அமைந்திருப்பதால், இயற்கையின் அழகு பெற்றுப் பொலிவுடன் காணப்படுகின்றது.

கோத்தர்கள் தங்கள் மொழியைக் **'கோவ்மான்த்'** (கோத்தர் மொழி) என்று அழைக்கின்றனர். இவர்கள் மொழிக்கு வரிவடிவம் கிடையாது. இவர்கள் மொழி பழந்தமிழி (Old Tamil) ஞேடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.[2] இவர்களிடையே கருத்தாழம் மிக்க வாய்மொழிப் பாடல்கள் (oral literatures) ஏராளமாக உள்ளன. இவர்களின் இசைப்புலமையை விளக்க இவர்கள் கொண்டுள்ள 'கொள்'; 'பர்'; 'குர்ல்'; 'தப்ட்க்' போன்ற இசைக்கருவிகளே சிறந்த சான்றுகளாகும். தெய்வ வழிபாடு, காதல், சாவு முதலியவைகளைப்பற்றிய சிறப்புக்களைக்கூற, இவர்களின் வாய்மொழி இலக்கியங்கள் மிகவும் உதவுகின்றன.

கோத்தர்கள் கடுமையான உழைப்பாளிகள். எல்லோரும் பயிர்த்தொழில் செய்கின்றனர். இவர்களுக்குக் கருமர் தொழி (Blacksmith)லும் நன்கு தெரியும். அங்கு வாழும் படகர்கள், மற்றுமுள்ளோர்களுக்கு வேண்டிய மண்வெட்டி, கடப்பாரை, கொத்து, முதலியவற்றைச் செய்து தருகின்றனர். தங்கள் தோட்டங்களில் தேயிலை, காப்பி முதலியவற்றைப் பயிரிடுகின்றனர். கோத்தர்கள் ஓய்வு காலங்

2. கோ. சுப்பையா: தமிழும் கோத்தமும்—ஓர் ஒப்பியல் ஆய்வு., செந்தமிழ், மதுரை 70.

கோ. சுப்பையா: A Descriptive Grammar of Kota (Ph. D. Thesis, Annamalai university, '72.)

களில் காடுகளில் வேட்டையாடுவதை நல்ல பொழுது போக்காகக் கொண்டுள்ளனர்.

கோத்தர்களுடைய ஊர் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது என முன்னர்கண்டோம். ஒரே கேரியில் வாழ்பவர்கள் அனைவரும் சகோதர உறவு முறை உடைய வர்கள். ஆகவே அடுத்து இருக்கும் இரு கேர்களில் மட்டுமே மணஉறவு ஏற்படுத்திக் கொள்வார்கள்; அல்லது வேற்றூரில் மணஉறவு கொள்வார்கள். பொதுவாக மாமன் அல்லது அத்தை மகளை மணம் செய்துகொள்ளுவர். பெண்ணின் தந்தைக்கு நான்கு வெள்ளிப் பணம் கொடுத்து, அவர் காலில் விழுந்து கும்பிட்டால், அப்பெண் அன்று முதல் அவன் மனைவியாவாள்.

தனக்கு விருப்பமான ஆணுடன் சென்று வாழ்க்கை நடத்தலாம். பின் பெற்றோர்கள் அவர்களை அழைத்து வந்து, உறவினர்கள் சூழ சிறப்பாகத் திருமணம் செய்து வைப்பார்கள். தான் மணந்து கொண்ட மனைவியிடம், தனக்கு விருப்பம் இல்லை என்றால், ஊர் பஞ்சாயத்தில் கூறி மணமுறிவு செய்து கொள்ளலாம். ஆனால் பெண் விரும்பினால் ஆண் அவளை வைத்துக் காப்பாற்ற வேண்டும். பெண் தனக்குக் கணவனிடம் இருந்து வாழ விருப்பம் இல்லையெனில், அவளுக்குக் குழந்தை இருப்பினும் இல்லா விடினும் மணமுறிவு பெற்று மறுமணம் செய்து கொள்ள லாம். ஏனைய பழங்குடி இனத்தவர்களிடையே காணப் படும் விதவை மறுமண முறையும், மணமுறிவு முறையும் கோத்தர்களிடையேயும் காணப்படுகின்றன.

தனக்குக் குழந்தை இல்லை எனில், தன் கணவனுக்கு மறுமணம் செய்துவைத்து, தானும் அவர்களுடன் இருந்து வாழலாம். தனக்கு ஆண் குழந்தை இல்லாதபோது,

தன் மகளின் கணவனையும்; தன் மகளையும் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தலாம்.

பழங்காலத்தில் மணமாகி சில நாட்களில் தன் மாமன் இறந்தால், சாவுக்கு ஒரு எருமையை வெட்டுவார்கள்; தன் மாமியார் இறந்தால், ஒரு எருமை, சாவுத்துணி, சாவுக்கட்டில் முதலியவைகளைக் கொடுக்கவேண்டும்.[3] பெண் மணமாகி, குழந்தை பிறந்து அல்லது பிறக்காமல் இறந்தால், அவளின் சொந்தக்காரன் - 'னண்ட்ன்' - சாவுக்குப் பசுவும் எருமையும் தருவான்.

ஓர் ஆண்டில் இருவிதமான 'சாவுச் சிறப்புக்கள்' (funeral festivals) நடைபெறும். அவை 'பச்தாவ்' (Green funeral); 'வர்ல்தாவ்' (Dryfuneral) எனப்படும். ஓர் ஆண்டில் பல பச்தாவ்கள் வரலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரே வர்ல்தாவ்தான் கொண்டாடுகிறார்கள்.

ஊரில் யாரேனும் இறந்துவிட்டால், ஊர்மக்கள் எல்லோரும் அரிசி, பருப்பு, விறகு முதலியன தருவார்கள். ஊரில் சாவைத் தெரிவிக்கும் பொருட்டு, கொள், பர் முதலிய இசைக்கருவிகள் முழங்கப்பெறும். ஏழு ஊருக்கும் இறப்புச் செய்தியைச் சொல்லிவர ஆட்களை அனுப்புவார்கள். பழங்காலத்தில் படகர்களும் கோத்தர்களின் சாவுக்கு எருமைகளையும், சாவுப் பணத்தையும் (*telč*) கொண்டுவருவார்கள். பெண் இறந்தால், அப்பெண்ணின் சொந்தகாரன் சாவுப்பணமும், கொட்கட் பசுவும், எருமையும் கொணர்வான்.

---

3. David G. Mandelbaum: Form, Variation, and Meaning of a Ceremony in "Method and Perspective in Anthropology, papers in honor of Wilson D. Wallis" University of Minnesota, '54.

உறவினர்கள் வந்தவுடன், பிணத்தைக் குளிப்பாட்டி, வெளியில் சாவுக் கட்டிலில் வைப்பார்கள். அச்சாவுக் கட்டில் 'குட்ய்கட்' என்று பெயர்பெறும். உறவினர்கள் ஒரு பையில் அரிசியைப் போட்டு, அதைத் தோளில் சுமந்துகொண்டு, பிணத்தை மும்முறை சுற்றிவருவார்கள். கடைசி முறை முடிந்தவுடன் பிணத்தின் காலைத்தொட்டு வணங்குவார்கள். ஏழு ஊரினர்களும் பிணத்தைத் தொட்டு மரியாதை செய்யவேண்டும். சாவுக்கட்டிலைச் சுற்றி கொள், பர் முழங்க ஆடுவார்கள். பெண்களும் இவ் வாட்டத்தில் பங்கெடுப்பர். சாவுப்பண் பாடப்பெறும். மாலையில் சுமார் நான்கு மணியானவுடன் பிணத்தைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வார்கள். சுடுகாட்டை 'தூல்ய்' என்று கூறுவர். அங்கு விறகு கட்டைகளை மேடை போல அமைப்பர். ஒரு மூலையில் சுள்ளிகளைக்கொண்டு தீமூட்டி வைத்திருப்பார்கள். பிணத்தை எரிப்பதற்கு முன்னர், இறந்தவர் ஆண் என்றால் மனைவி தன் நகைகளையும் உடுத்தியிருக்கும் ஆடையையும் களைந்துவிட்டு, வேற்றுடையை அணிவாள். தன் தலைப்பின்னலையும் களைந்துவிடுவாள் இறந்தவர் பெண் என்றால், கணவன் தன்னுடையைக் களைந்துவிட்டு, வேற்றுடையை அணிவான். பெரும்பாலும் பழைய ஆடையைத்தான் இத்தருணத்தில் அணிந்துகொள்வார்கள். பின்னர் பிணத்தை எரித்துவிடுவார்கள்.

அன்றிரவு இறந்தவரின் வீட்டிற்குச் சென்று, உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து, சாவை மறப்பதற்காக பாட்டும் கதையும் சொல்லி, அவ்வீட்டில் இரவைக்கழிப்பார்கள்.

மறுநாள் காலையில் ஒரு கேர்க்கு ஒருவர் வீதம் மூன்று பேர் சுடுகாட்டிற்குச் செல்வார்கள். அங்கு பிணத்தின்

தலை, கைகால் எலும்புகளையும் சாம்பலையும் எடுத்துக் கொண்டு, ஆற்றிற்குச் செல்வார்கள். ஆற்றில் அவைகளை வைத்துத் தேங்காய் பழம் முதலியவற்றோடு கூட ஆராதனை செய்வார்கள். தேங்காய் பழத்தை ஆற்றில்விட்டு, மற்றவைகளை ஓரிடத்தில் பத்திரப்படுத்திவிட்டு, ஆற்றில் குளித்துவிட்டு, ஊருக்கு வருவார்கள். இறப்புநிலை (தீட்டு) மூன்று நாட்களுக்கு நீடிக்கும். அன்று ஊர்ப் பொதுவில் சமையல் செய்து சாவுக்கு வந்தவர்களுக்கும் மற்றவர் களுக்கும் உணவு அளிப்பார்கள். அன்று மாலை இறந்த வரின் வீட்டிலுள்ளவர்களுடன் மீண்டும் சுடுகாட்டிற்குச் சென்று, சில சாத்திரங்களைச் செய்து எல்லோரும் கைகால் கழுவிக்கொண்டு ஊருக்குத் திரும்புவார்கள். இத்தகைய செயலுக்கு - சாத்திரத்துக்கு - 'நோண்ம்னீர் கய்ப்த் சாத்ர்ம்' என்று பெயர். மூன்றும் நாள்தான் எல்லோரும் தீட்டைக் கழிப்பார்கள். அன்று வீட்டைச் சுத்தம் செய்து, எல் லோரும் குளிப்பார்கள். இச்சாவுச் சிறப்பிற்கு 'பச்தாவ்' என்று பெயர்.

ஊரில் பூசாரி வீட்டில் யாரேனும் இறந்துவிட்டால், பூசாரி கோயில் காரியங்களைச் செய்யக்கூடாது. அவர் அன்றிலிருந்து பூசாரியாக இருக்கமாட்டார். வேறொருவர் பூசாரியாக நியமனம் பெற்று, கோயில் காரியங்களைச் செய்வார்.

ஆண்டின் இறுதியில் — கூட்ல்மாதத்தில் — வர்ல்தாவ் கொண்டாடப்படுகிறது. தங்களின் கம்பட்டராய்ன் தேர்வ் கொண்டாடுவதற்கு முன்னர், வர்ல்தாவ் நடத்தப்பெறும். அவ்வாண்டில் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு, சிறியதாக பல சாவுக்கட்டில்கள் செய்வார்கள். இறந்தவர்கள் என்ன என்ன பொருட்களைப் பயன்படுத் தினார்களோ அவைகளைச் சிறுசிறு கூடைகளில் இட்டு,

சாவுக் கட்டிலை அலங்கரிப்பார்கள். அன்று மாலை அக்கட்டிலை 'தாவ்னாட்' எனும் இடத்திற்கு எடுத்து செல்வார்கள். அங்கு 'பச்தாவ்' அன்று செய்ததுபோல் சடங்குகளைச் செய்வார்கள். இறந்தவரின் மறைத்து வைக்கப்பட்ட எலும்புகளைக் கொணர்ந்து சாவுக்கட்டிலின் மீது வைத்து அழுவார்கள். பின்னர் எல்லாக் கட்டில்களையும் ஒன்று சேர்த்து எரித்துவிடுவார்கள். தாவ்னாட்டில் சமையல் செய்து அங்கு வந்த எல்லோர்களுக்கும் உணவு கொடுப்பார்கள். அன்றிரவு இறந்தவரின் உறவினர்களில் இருவர் தாவ்னாட்டில் உறங்கிவிட்டு, மறுநாள் காலையில் ஊருக்கு வருவார்கள். இச்சாவுச் சிறப்பைச் செய்தால்தான், இறந்தவர் வானுலகம் செல்லமுடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். இச்சாவுச் சிறப்பு செய்த பின்னர்தான் பெண்ணோ அல்லது ஆணோ மறுமணம் செய்து கொள்ளும் தகுதியைப் பெறுகின்றனர்.

இச்சாவுச்சிறப்பு நடைபெற்ற பின்னர், கோத்தர்களின் பண்டிகையான 'கம்பட்ராயன் தேர்' எனும் விழா கொண்டாடப்பெறுகிறது. கூட்ல் மாதத்தில் பிறைகண்டு, மூன்றும் நாள், ஊரில் ககேரில் தீமூட்டுவார்கள். தீமூட்டிய அன்றிலிருந்து தொடர்ந்து இருபத்தி ஒருநாள் பண்டிகை கொண்டாடப்படுகிறது. பண்டிகைக்கு முன்னர் எல்லாப் பெண்களும் ஊருக்கு வெளியிலிருக்கும் 'தேல்பய்'க்குச் சென்று தங்கிவிட்டு, குளித்து பின்னர் ஊருக்கு வருவார்கள். இச்சடங்கு முடிந்தபின், விழாவின்போது பெண்கள் வீட்டு விலக்கு அடைய நேர்ந்தாலும், அவர்கள் ஊருக்கு வெளியே தங்கியிருக்க வேண்டுமென்ற நியதி இல்லை. பண்டிகையில் கலந்துகொள்ளலாம்.[4] பண்டிகையின் போது பூசாரியின் முன் பெண்கள் யாரும் வரமாட்டார்கள்.

4. David G. Mandelbanm: The world and the worldview of the Kota., PP: 230., Village India., University of Chicago., '55.

பண்டிகை காலங்களில் யாரேனும் இறந்தால், இறந்தவர் வீட்டிற்குச் சாவுக் கடமையைச் செய்வதற்கு நான்கு ஆட்களை நியமிப்பார்கள். இந்நான்கு பேர்கள் இறந்தவருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்வார்கள். ஊரில் யாரும் சாவுக்குப் போகமாட்டார்கள். இறந்தவரின் வீட்டைச் சேர்ந்தவர்கள் விழாவில் பங்குபெறும் தகுதியைப் பெறமாட்டார்கள். மேலும் விழா முடிவுபெறும் வரை, அவர்கள் ஊருக்குள்ளோ அல்லது ஊரில் யாருடனோ கலக்கக்கூடாது.

புதுப்பானை செய்து, அதில் பொங்கல் சமைத்து, நோன்பு இருப்பார்கள். பண்டிகை நாட்களில் ஆட்டமும் பாட்டும் பெரும் பங்குபெறும். பண்டிகையின் கடைசி நாள் 'ஆமஞ்ச்', 'வத்ம்' போன்ற தானியங்களைக் கொண்டு இரு உப்பு பொங்கல் சமைப்பார்கள். கோயிலின் முன்னர் பெரிய பந்தல் போட்டிருப்பார்கள். அப்பந்தலின் கீழ்தான் ஆண்கள் எல்லோரும் இரவில் உறங்குவார்கள். 'வராட்' எனும் புத்தாடையை அணிந்து ஆட்டமும் பாட்டுமாக இவ்விழாவைக் கொண்டாடுவார்கள்.

தங்கள் கம்பட்ராய்ன் தேர்க்கு நெய், பால் போன்றவைகளுடன் சாம்பிராணி, சூட ஆராதனை செய்வார்கள். பண்டிகை முடிந்த அன்று 'பிடாட்' எனும் பலகாரத்தை எல்லோரும் வீட்டில் செய்வார்கள். அன்று பூசாரி நல்ல நேரம் கண்டு, அனைவர் வீட்டின் பிடாட் பலகாரத்தை உண்ண வருவார். இதற்கு பின்னர்தான் எல்லோரும் உண்பார்கள்.

கோத்தர்களின் தெய்வத்திற்கு உருவம் கிடையாது. நெய், பால், சூட ஆராதனை முதலியனதான் தெய்வத்திற்குக் காணிக்கையாக அளிக்கப்படும். புதுமணம்புரி

வோர்களும், மறுமணம் புரிவோர்களும் இத்தருணத்தில் தங்கள் திருமணத்தைச் செய்துகொள்வார்கள். திருவிழா முடிவுபெறும் நாளன்று ஒவ்வொருவரும் மற்றவர்கள் வீட்டிற்குச் சென்று, அவர்கள் சமைத்துள்ள பொங்கல், பிடாட் போன்றவற்றை உண்டு, தங்கள் பழைய குற்றங் களை மறந்து, ஒன்றுபடுவார்கள். மனமகிழ்வுடன் ஆட்டத் திலும் பாடலிலும் பங்குபெறுவார்கள்.

பண்டிகை 'கிள்யாட்ம்' எனும் விளையாட்டுடன் இனிது முடிவுபெறும். கிள்யாட்டத்தில் எல்லா ஆண்களும், சிறு பையன்களைத்தவிர பங்குபெறவேண்டும். இவ்வாட் டத்தில் பங்குபெருதவர்கள், மறுநாள் ஊர் பஞ்சாயத்து முன் தப்பு கட்டவேண்டும். இவ்வாட்டம், நம் கிள்ளி புள்ளு ஆட்டத்தைப் போன்று ஆடப்படுகிறது.

ஒவ்வொரு ஊருக்கும் இரண்டு 'மின்த்கணேன்களும்'; மூன்று 'தேர்கார்ன்களும்' இருப்பார்கள். இவர்கள்தான் கம்பட்ராய்ன் தேர்வ் ஐச் செய்வார்கள். ஏனைய தெய்வங் களுக்குத் (இந்துமத தெய்வங்களுக்கு) தேர்கார்ன்கள் அல்லது மருளாடிகள் பண்டிகை நடத்துவார்கள். தேர் கார்ன் மருள்பெற்று ஊர் மக்களுக்கு நல்லவாக்குகளையும், ஊருக்கு வரப்போகின்ற செய்திகளையும் எடுத்துக் கூறு வான். பிறதெய்வங்களை-உருவமுள்ள இந்துமத தெய்வங் களை-வணங்கும் முறை, அன்னியர்கள் அங்குச் சென்று குடியேறி, கோத்தர்களுடன் கலந்ததினுல்தான் ஏற்பட் டுள்ளது. சிவராத்திரி பண்டிகையும், கிருஷ்ணப் பண் டிகையும் இவர்களிடையே இன்று காணப்படுவது மேலே கூறியதற்கு நல்ல சான்ருகும்.

குழந்தைகள் பிறந்தால், அக்குழந்தைகளின் பிறப்பை மிகவும் எளிய முறையில் கொண்டாடுகிருர்கள். பெண்கள்

மகப்பேறு காலங்களிலும், வீட்டுவிலக்கு ஆகும் காலங்களிலும் ஊருக்கு வெளியே தனியாயுள்ள வீட்டில்தான் இருப்பார்கள். இவ்வீட்டிற்கு 'தேல்பய்' என்று பெயர். வீட்டுவிலக்கானப் பெண்கள் அவ்வீட்டில் மூன்று நாட்கள் தங்கி, அங்கேயே சமைத்துச் சாப்பிடுவார்கள். அவர்கள் நான்காம் நாளன்று குளித்துவிட்டு, வேற்றுடை அணிந்து தங்கள் வீட்டிற்கு வருவார்கள். கணவன்மார்கள் தம் மனைவியர்களுக்குத் தனியே அரிசி, விறகு முதலியவைகளைக் கொடுத்துவிடுவார்கள். பெண்கள் தங்கள் பெரியவர்கள் அல்லது தோழிகள் துணையுடன் அவ்வீட்டில் தங்கியிருப்பார்கள்.

மகப்பேறு பெறும் பெண்கள் தேல்பய்யில் பதினைந்து நாட்கள் வரை தங்கியிருப்பார்கள். பதினைந்தாம் நாளன்று தாயும் குழந்தையும் குளித்து, புத்தாடை அணிந்து கொண்டு, தங்கள் வீட்டிற்குத் திரும்பி வருவார்கள். அந்நாளை மிகவும் எளிய முறையில் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

விதவையானவள் வர்ல்தாவ் நடைபெற்று முடியும் வரை பழைய ஆடைகளை அணிந்து கொண்டும், தலைசீவி பூமுடிக்காமலும் இருப்பாள்.

மூப்பெய்திய பெண்கள் 'மண்டுவ்' எனும் பூவைத் தலைசீவி அணிந்து கொள்ளவேண்டும். தீட்டு வீட்டிற்கோ அல்லது சாவுக்கோ செல்லும்போது, மண்டுவ்-ஐ அணிந்து கொண்டு செல்லக்கூடாது. மண்டுவ் அணிந்தால் தீயச் சக்திகள் பெண்களை நாடா என்று நம்புகின்றனர். கணவன் இறந்தவுடன் மண்டுவ்வைக் களைந்துவிடுவர். மறுமணம் செய்து கொண்ட பின்னர் மீண்டும் மண்டுவ்வை அணிந்து கொள்வர்.

கோத்தர்கள் தங்கள் பெற்ருேர்களை 'அய்ன்', என்றும், 'அவ்' என்றும் அழைக்கின்றனர். தன்னுடன் பிறந் தோர்களில் மூத்த ஆணை 'அண்' என்றும்; மூத்தப் பெண்ணை 'அக்ன்' என்றும் கூறுகின்றனர்; இளையவனை 'கராள்' எனவும், இளையவளை 'கடாச்' எனவும் அழைக் கின்றனர். தன் கணவனை 'ஆள்' என்று பெண் கூப்பிடு வாள். தன் மனைவியை 'பெட்' (peḍ) என்று ஆண் கூறுவான். தன்னுடன் பிறந்தோனுக்கு எந்த அளவு உரிமை உண்டோ அந்த அளவிற்கு உரிமைபெற்றதன் உயிர் நண்பனைக் கோத்தர்கள் 'மாள்' என்றழைக்கின்றனர். இத்தகைய உரிமைபெற்ற நண்பன், தன் நண்பன் மணம் கொள்ளும் இடத்தில், தானும் மணம் செய்யும் உரிமைபெறுவான்.

ஒரு ஊரில் வாழும் ஒரு கோத்தருக்கு வேருெரு கோகாலில் உறவினர் இல்லை என்ருல், அவ்வூரில் தனக்கு நன்கு அறிமுகமானவருடன் உறவு முறையை ஏற்படுத்திக் கொள்ளலாம். அதாவது தனக்குத் தெரிந்தவரின் காலைத் தொட்டுக் கும்பிட்டு, அன்னுரின் முழங்கால் தன் நெற்றி யில் படும்படி வணங்கவேண்டும். இதுபோல் அவரும் (தெரிந்தவர்) செய்யவேண்டும். இவ்வாறு உறவுமுறை ஏற்படுத்திக்கொண்ட இருவரும் சகோதர உறவுமுறை உள்ளவர்களாவார்கள். இவ்விருவரும் ஒரே ஊரில் ஒரே வீட்டில் பெண் கொள்ளலாம். இவ்வாறு உறவு ஏற்பட்ட வரை 'மாள்' என்று அழைப்பார்கள்.

இளையோர்கள் பெரியோர்களைக் கண்டால், காலி லுள்ள செருப்பைக் கழற்றி, தலை வணங்கி நிற்பார்கள். பெரியவர்கள் தங்கள் வலது கையால் அவர்களின் தலை யைத் தொட்டு ஆசி கூறுவார்கள்.

கோத்தர்கள் தங்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டால், ஊர்ப்பஞ்சாயத்து முன்னிலையில் எடுத்துக் கூறி வழக்காட வேண்டும். தங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்ள மாட்டார்கள். பெரியவர்கள் காரணம் கண்டு, இருவருக்கிடையே மன அமைதி ஏற்படுத்தி வைப்பார்கள். திருவிழாக் காலங்களில் தவறுகள் செய்தவர்களையும், முறை தவறி நடந்தவர்களையும் பஞ்சாயத்தார் கண்டித்து, தப்பு கட்டச் சொல்வார்கள். அவ்வாறு தப்பு கட்டிய பணத்தை ஊர் பொது காரியங்களுக்குப் பயன்படுத்துவார்கள்.

கோத்தர்கள் மற்றவர்களுடன் மிகுந்த அன்புடன் பேசி, இனிமையாகப் பழகுவார்கள். கோத்தர்கள் மிகுந்த தெய்வபக்தி உடையவர்கள். பழங்காலத்தில் கோத்தர்கள் சாவுக்கு அல்லது திருவிழாவுக்குத் தொதுவர்கள் பால், நெய் முதலியன கொணர்ந்து தருவார்கள். படகர்கள் எருமை, பசு முதலியனவும்; குறும்பர்கள் சாம்பிராணி, கற்பூரம் முதலியனவும் கொணர்ந்து தருவார்கள். ஆனல் இப்பொழுது இவையெல்லாம் நடைமுறையில் மறைந்து விட்டன.

கோத்தர்கள் பேசும் மொழி பழந்தமிழிேேடு நெருங்கியத் தொடர்புடையதென முன்னர் கூறினேம். அத்தகைய தொடர்பைக் கீழே விளக்குவோம். முதலில் சொல்லிய அடிப்படையில் காண்போம். தமிழிலும் கோத்த மொழியிலும் உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு காணப்படுகின்றன. தமிழில் தன்மை இடப்பெயரில் உளப்படு பன்மை (Inclusive Plural), உளப்படாப் பன்மை (Exclusive Plural) என்ற வேறுபாடு இயல்பான சொல்லடிப்பெயரில் (Absolute form) காணப்படுகிறது. ஆனல் கோத்தமொழியில் இத்தன்மை மாற்றுச் சொல்லடிப்பெயரில்(Oblique form)

மட்டுமே காணப்படுகிறது. இரு மொழிகளிலும் மூவகைச் சுட்டுப் பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால் இக்காலத் தமிழில் இடைச்சுட்டு வழக்கற்று போய் உள்ளது.

தமிழில் மூவகைக் காலங்கள் வினைச்சொற்களில் காணப்படுகின்றன. ஆனால் கோத்த மொழி இறந்தகாலம், இறவாக்காலம் என இரு காலங்களைத்தான் கொண்டுள்ளது. கோத்த மொழியில் இறந்தகால இடைநிலைகள் நேரிடையாக வினைச்சொல்லடியுடன் சேருவது கிடையாது. தமிழ் படர்க்கை வினைமுற்றில் பால் எண் வேறுபாட்டைக் காட்டுகிறது. ஆனால் கோத்த மொழியில் இத்தகைய பால் எண் வேறுபாடு படர்க்கை வினைமுற்றில் காணப் படா.

தொடரியல் அடிப்படையிலும் இவ்விரு மொழிகளும் நெருங்கியத் தன்மையை உணர்த்துகின்றன. இவ்விரு மொழிகளிலும் தொடரன் (Sentence) தன்னகத்தில் இரு பெயர்த் தொடர்கள் அல்லது பெயர்த்தொடரு (Noun Phrase)டன் வினைத்தொடர் (Verb Phrase) சேர்ந்து பெற்றிருக்கும்.

எ. கா: தமிழ் : அது புலி. : நான் வந்தேன்.
கோத்தம்: அத் புஜ். : ஆன் வற்றபேன்.

தமிழில் கூடாது, என்ற குறிப்பு வினைமுற்று (Appellative Verb) செய்ய + கூடாது என்ற வாய்பாட்டில் அமையும். இதுபோன்று கோலோ எனும் கோத்த மொழியின் குறிப்பு வினைமுற்று அமைகிறது.

எ. கா: மய்ண் கோலோ - 'பேசக்கூடாது'
கெய்கோலோ 'செய்யக் கூடாது'

5 முழு விளக்கத்திற்குத் தமிழும் கோத்தமும்—ஓர் ஒப்பியல் ஆய்வு என்ற ஆசிரியரின் கட்டுரையைக் காண்க.

இடைக்காலத் தமிழில் வினைமுற்றில் எதிர்மறை கிளவியை அடுத்து எதிர்கால இடைநிலைவரும் என்பதை ஆழ்வார் பாடல்களில் காணலாம். இத்தகைய அமைப்பு கோத்த மொழியில் வினைமுற்றில் எதிர்மறை கிளவியை அடுத்து இருகால கிளவிகள் வருகின்றன.

எ. கா: கெயாய்பேன் - செய்யவில்லை. (இறந்தகாலம்).
கெயாய்க்வேன் - செய்யவில்லை. (இறவாக்காலம்).

இதுபோன்று பல இலக்கணக் கூறுகளில் இவ்விரு மொழிகள் தம்மிலுள்ள நெருங்கிய தொடர்பை உணர்த்துகின்றன.[6]

இன்று கோத்தர்கள் அரசினர் உதவியால் உயர் கல்வியறிவுபெற்று, மற்றவர்களைப் போல் வேகமாக முன்னேறி வருகின்றனர். தங்களின் இனப்பெருக்கையும் உயர்த்திக் கொண்டுவருகின்றனர்.[7]

இன்று புதுமையெனப் பேசப்படும் பெண் உரிமை, தனக்கு விருப்பம் இல்லையென்றால் மணமுறிவு பெறுதல், விதவை மறுமணம், முதலியன கோத்தர்களிடையே பண்டைக்காலந்தொட்டே வழக்கிலிருந்து வருகின்றன. இயற்கையின் எழிலோடு ஒருங்கிணைந்து, அதனுடன் வாழ்கின்ற இவர்களுடைய சமுதாயம், தன் பழமை இழந்துவிடாமல், புதுமையையும் புறக்கணிக்காமல் வாழ்ந்து வருதல் காணலாம். முன்னேற்றம் கண்ட பிற மக்களுடன் இவர்களுக்குப் பழக்கம் ஏற்பட்டு இருந்த போதிலும், கோத்தர்கள் தங்களின் பண்பாட்டையும் மொழியையும் இழக்காமல் காத்துவருவது வியத்தற்கு ஒன்றாகும்.

---

6. முழு விளக்கங்களுக்கு ஆசிரியரின் பிஎச். டி. ஆய்வுரைகளை (Ph.D. Thesis)க் காண்க.

7. கோத்தர்களின் மக்கட்தொகை சுமார் ஆயிரத்து இருநூறாகும்.

# 3. கசவர்கள்

வே. சிதம்பரநாதன், M. A.

விலங்குகள், தாவரங்கள் போன்று மனித இனமும் உயிரியல் கோட்பாட்டால் மாறுபாடு அடைந்துகொண்டு வருகின்றது. இது உயிரியல் ( Biology ) விதிகளுக்கு மட்டுமே யன்றி சமூக அமைப்பு, பண்பாடு இவைகட்கும் பொருந் தும். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பேயிருந்து மனிதன் உபயோகித்தப் பொருட்களை ( Artifacts ) விளக்குவது தொல்பொருளியல் ( Archaeology ) எனப்படும். பழங் காலத்தில் மனிதன் எப்படியிருந்தான், தற்போழ்து எப்படி யுள்ளான் என்பனவற்றை ஆராய்வது சமூக அல்லது பண்பாட்டு மானிடவியல் (Social or Cultural Anthropology) எனப்படும். மானிடவியல் பேரறிஞர் டாக்டர் ரிவர்ஸ் (1906) கருத்துப்படி " ஒரு மொழி பேசுகின்ற, பழைய பழக்கவழக்கங்களைப் பாதுகாத்து வருகின்ற, ஒருவருக் கொருவர் உதவி செய்யும் தன்மையுடையவர்களாகவுள்ள ஓர் எளிய சமூகத் தொகுப்புதான் பழங்குடி " எனப்படும். இப்படிப்பட்ட பழங்குடி வரிசையில் வைத்துக் கருதப்படு பவர்களே கசவர்கள்.

கசவப்பழங்குடி மக்கள் நீலகிரி மாவட்டத்திலுள்ள மசினிக்குடி, அரக்கோடு, புளிஞ்சோறு, கதரப்பட்டி, அதரப்பட்டி, உதகரைப்பட்டி, ஜகாலிகதவு, இதியனப் பட்டி, அரைக்கடவுபட்டி, கத்தனப்பள்ளி, ஆசுனூறு, திம்பா, கெர்க்கோலா, சிறூர், மாயார், ஆனைக்கட்டி, வாழைத்தோட்டம், தெங்குமரோடா முதலியவிடங்களில்

வாழ்கின்றனர். இவர்கள், தடித்த உதடும் கூர்மையான கண்ணும், சுருண்ட மயிரும் கறுப்பு நிறமும் உடையவர்கள். பெண்களது முகம் வட்டவடிவமாகவும், மூக்கு பந்து போன்றுப் படிந்தும் உள்ளன. கறுப்பு நிறமுடையவர்களாக இருப்பினும் பார்ப்பதற்கு அழகாகவே இருக்கின்றனர். 1961-ஆம் ஆண்டு மக்கட்தொகைப் புள்ளியல் படி இப்பழங்குடி மக்களின் எண்ணிக்கை 391 ஆகும். பிற நீலகிரிவாழ் பழங்குடி மக்களுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து இவர்களது மக்கட்தொகை பெருகிவருகிறது என அண்மைக்காலத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகிறது. இப்பழங்குடி மக்களுடன் தோடர், கோத்தர், குறும்பர், இருளர், பணியர், காட்டுநாயக்கர் போன்ற பழங்குடிமக்கள் வாழ்ந்து வருகிருர்கள்.

இவர்கள் வெள்ளி, பித்தளை முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிகின்றனர். இந்த ஆபரணங்களின் அமைப்பைக் கூர்ந்து நோக்குமிடத்து, இவர்கள் மைசூரினின்று வந்தவர்களாக இருக்கலாமென்று பிலோ. இருதயநாத் குறிப்பிடுகிருர். அவர்களது மொழியை நோக்குமிடத்து, இக்கருத்து ஏற்புடைத்ததாகவே உள்ளது. கன்னடமொழியின் ஒருவகையான படகாமொழி பேசும் படகர்களும் மைசூரினின்று நீலகிரியில் குடியேறியவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நீலகிரியில் வாழும் அனைத்துப் பழங்குடிமக்களும் மைசூரினின்றும் வந்தவர்கள் என்ற எண்ணம் சமுக மானிடவியலாளர்களிடையே நிலவுகிறது[1]. அக்காலத்தில் கசவப்பெண்கள், மலையாள பெண்களைப்போல மார்பிற்கு மேலே சிறிய துண்டும் இடுப்பிற்குக் கீழ் மற்ருெரு சிறிய துண்டும் அணிந்திருந்தனர்.

1. Breeks, J. W. 'An account of the primitive tribes and monuments of the Nilgiris', London 1873

கசவர்களில் சிலர் தங்களை இருளர்கள் என்று கூறிக் கொள்ளுகிறார்கள். சிலர் அதனை மறுக்கின்றனர். ஆனால், இருளர், செஞ்சுக்கள், ஏனாதியர்கள் போன்ற பழங்குடி மக்களிடையே உருவத்தோற்ற அமைப்பில் (Physical feature) ஒற்றுமையிருப்பதாக உருவத்தோற்ற மானிடவியலாளர்கள் (Physical Anthropologists) கூறுகின்றார்கள்.[2] இருளர்களுக்கும் ஏனாதியர்களுக்கும் இடையே சில பழக்க வழக்கங்களிலும் ஒற்றுமை உள்ளது. எனவே உடலியல் நிபுணர்கள், (Biologists) உருவத்தோற்ற மானிடவியலாளர்கள், இவர்களது தோற்ற அமைப்பு, இரத்த அமைப்பு (Blood group) முதலியவற்றை ஆராய்ந்து, ஒரு முடிவுக்கு வருதல்வேண்டும். அப்பொழுதுதான் இருளர்களுக்கும் கசவர்களுக்குமுள்ள தொடர்பை அறிவியல் முறையில் நன்கு ஆராயமுடியும்.

நீலகிரிப் பழங்குடி மக்கள் மலைகளில் பரந்து காணப்பட்டாலும் ஒவ்வொரு கிராமத்திலும் அவர்களது எண்ணிக்கை, நாட்டுப்புறங்களிலுள்ள கிராமங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கையைவிட மிகவும் குறைவாகவே உள்ளது. குடும்ப அளவை ஒப்பிடின், மிகப்பெரிய வேற்றுமையை நம்மால் ஊகித்துக் கொள்ளமுடியும். இவர்களுடன் வாழும் காட்டு நாயக்கர்கள் பெரும்பாலும் கூட்டுக்குடும்பங்களாக (Joint Families) வாழ்கின்றனர்.

கசவர்கள் வாழும் குடிசைக்குச் சுவர் கிடையாது.[3] சுவருக்குப் பதில் மூங்கில், காட்டுக்கரும்பு முதலியவைகள் நடப்பட்டிருக்கும். இவற்றின்மேல் கம்புகள் அரைவட்டமாகக் குறுக்குநெடுக்காகக் கட்டப்பட்டு "அஞ்சுப்புல்"

2. Aiyappan. A. Report on the Socio-Economic Conditions of the Aboriginal tribes in the province of Madras, 1948, p. 101.

3. கசவர்கள் குடிசையினைச் "சேரி" என்று குறிப்பிடுகிறார்கள்.

என்ற புல்லினுல் வேயப்பட்டிருக்கும். சிலர் அரசாங்கம் கட்டிக்கொடுக்கும் வீடுகளில் வசிக்கிருர்கள். வீட்டின் முன்னுல் கன்றுகளைக் கட்டிவைத்துள்ளனர். இஃது நாகலாந்திலுள்ள பழங்குடிமக்கள் தங்கள் வீட்டின் முன்பாக பன்றிகளை அடைத்து வளர்ப்பதைப்போன்று உள்ளது. வீட்டைச்சுற்றியுள்ள ஏனையபகுதிகளில் வாழை மற்றும் காய்கறிச்செடிகளைப் பயிரிடுகிருர்கள்.

நாட்டுப்புறமக்கள் வாழும் வீடுகளில் காணப்படுவது போன்று இவர்கள் வாழும் சேரியிலும் கும்பா, தவலை, தாம்பாளம், உரல், உலக்கை, அகப்பை, குந்தாணி, பானை, சட்டி, குடம், உறி, விளக்குமாறு, அரிவாள், பிக்காசு, கயிறு முதலியவைகளைக் காணலாம். இவை தவிர தலையணைக்காக உபயோகிக்கப்படும் சிறுமரக்கட்டைகளையும், அழுக்குப்படிந்த கோணிகளையும் காணமுடியும். சிலர் வண்டியும் வைத்திருக்கின்றனர்.

இவர்களில் சிலர் வெடிமருந்திற்கு உபயோகிக்கப்படும் பாசம்போன்ற காட்டுப்பொருட்களைச் சேகரிக்கின்றனர்; இன்னும் சிலர் தேன் எடுக்கின்றனர். இருளர்களும் செஞ்சுக்களும் தேன் சேகரித்தும் காட்டுப்பொருட்களைச் சேகரித்தும் வாழ்க்கை நடத்துகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் கசவர்களில் சிலர் ஆடு மாடுகளை மேய்க்கின்றனர். மேய்க்கச் செல்லும்போது பீடி, வெற்றிலை, அனுமதிச்சீட்டு (Licence) முதலியவை அடங்கிய மூங்கில் குழாயினைத் தொங்கவிட்டிருப்பர். காட்டுமிருகங்களால் ஆபத்து ஏற்பட்டு இறக்க நேர்ந்தால், தான் யார் என்பதைப் பிறர் அறிந்து கொள்வதற்காகவே இப்படிச் செய்கிருர்கள். இப்பழங்குடி மக்களும் காட்டு நாயக்கர்களும் பெரும்பாலும் காய்கறி வகைகளையே பயிரிடுகிருர்கள். சிலர் கேப்பை பயிர்செய்கிருர்கள்.

இரவு நேரங்களில் காட்டுமிருகங்களால் பயிர் அழிந்து விடாதபடி பாதுகாக்க மரத்தின்மீது உயர்ந்த மாடங் களைக் கட்டி அதன் மீதிருந்து தகரடப்பாக்களை அடித்து ஒலி எழுப்பிக்கொண்டும் கூக்குரலிட்டுக்கொண்டுமிருப்பார் கள். இஃது நாட்டுப்புறங்களில் கதிரைத் தின்னவரும் பறவைகளை ஓட்டுவதற்குப் பரணமைத்து கவ்ண் வீசுவதை ஒப்ப உள்ளது. கசவர்களைப்போன்று கேரளத் திலுள்ள ஊராளிப்பழங்குடி மக்களும் காட்டுமிருகங் களினின்று தங்களைப் பாதுகாக்க மாடங்கள் அமைத்து அவற்றின்மீது தங்கியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இப்பழங்குடி மக்களிடையே பதினைந்து வயதிற்குட் பட்ட இளம்வயதினரும் வேலை செய்கிறார்கள். இவ்வாதி வாசிகளைப் போன்று பணியர்களும் முள்ளுக்குறும்பர்களும் தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். குழந்தைகளையும் வேலைக்கு அனுப்பவேண்டிய சூழ்நிலை இவ்வாதிவாசிகளுக்கு ஏற்பட்டிருப்பதால் இவர்களது பொருளாதாரநிலை எந்த அளவு தாழ்ந்த நிலையிலுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

விவசாயம் செய்வதற்குரிய கருவிகள் ஐந்து குடும்பத் தினரிடையே மட்டுந்தான் இருக்கின்றன. இவர்களில் ஒரே ஒரு குடும்பத்திற்குத்தான் சொந்த நிலம் உண்டு. தானிய வகைகளையும் கிழங்குவகைகளையும் பணியர்கள் தான் அதிக அளவில் பயிர் செய்கிறார்கள். ஆனால் பழ வகைகளைக் கசவர்கள், இருளர்கள், முள்ளுக்குறும்பர்கள் ஆகியவர்கள்தான் அதிக அளவில் பயிர்செய்கிறார்கள். இப்பழங்குடிகளின் வருமானத்தில் பாதி, இவர்கள் செய்யும் தினக்கூலிமூலம் கிடைப்பதாகும். எனவே இவர்களது வருமானம் இவ்வளவுதான் என்று அறுதி

யிட்டுக் கூறமுடியாது. ஒருவரது வருடவருமானம் ரூ. 572 என்று சமூக பொருளாதாரப் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. காட்டிலிருந்து ஏராளமான பொருட்கள் கிடைப்பினும், தமக்குப் போதுமானவற்றைத்தான் எடுத்துக் கொண்டு வருவார்கள். இவ்வாதிவாசிகளுக்குக் கைத்தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு உபகாரச்சம்பளமும் அளிக்கப்படுகிறது. ஒருசிலர் காட்டிலாகாவிலும் பணியாற்றுகிறார்கள். ஆதிகசவர்கள், தாங்கள் சேகரித்த பொருட்களைப் பாறையில் ஏற்படுத்திய பெருங்குழிகளில் சேமித்து வைத்துவந்தனர். இக்காலக்கசவர்கள், பானைகளில் சேகரித்து வைக்கிறார்கள். எருமை இறைச்சியைத் தவிர ஏனைய எல்லா இறைச்சியையும் சாப்பிடுகிறார்கள்.

இவர்கள் பேசும்மொழி, தமிழ்ச்சொற்களும் கன்னடச் சொற்களும் நிறைந்த மொழியாகும். E. A. கெயிட் (Gait) என்பவர், "இப்பழங்குடி மக்கள் பேசும் மொழியானது, மற்ற பழங்குடிமக்கள் பேசும் மொழியினின்றும் வேறுபட்டது; கசவர் பேசும் மொழிக்கும் இருளமொழிக்கும் சிறிது தொடர்பு இருப்பினும், இலக்கண அமைப்பில் வேறுபாடு உள்ளது" எனக்கூறுகிறார் கசவர் பேசும் பேச்சு, கன்னடமொழியின் கிளைமொழியாக (Dialect) இருக்குமென எனது களஆய்வு குறிப்புக்களிலிருந்து (Field-Notes) ஓரளவு விளங்குகிறது.

இவ்வாதிவாசிகளிடையே பஞ்சாயத்து அமைப்பு (Panchayat System) உண்டு. இதில் ஐந்துபேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களது தலைவனுக்கே "மூப்பன்" என்று பெயர். ஏனைய நான்குபேரும் இவருக்கு உதவியாகச் செயல்படுவர். ஊர் மக்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவர். குற்றம் புரிந்தவர்களைத் தண்டிப்பர். அபராதம் விதிக்க

நேரிடின் அபராதம் விதிப்பர். ஊரில் நடக்கும் எவ் விதச்சடங்குகளும் இவர்கள் அனுமதிபெற்றே நடை பெறும். கிராமப்பஞ்சாயத்தில் தேர்தல் நடப்பதுபோல் இங்குத் தேர்தல் நடந்தாலும் ஐவர்கொண்ட பஞ்சாயத்தே நிர்வாகப் பொறுப்புக்களைக் கவனிக்கும். சுருங்கக்கூறின், கிராமப் பஞ்சாயத்தானது இப்பழங்குடி மக்களிடையே பெயரளவில்தான் செயல்பட்டு வருகிறது. ஊரில் ஏதேனும் கொலை நடந்தால், கொலையாளியைத் தண்டித்து தம்மினத்தவரோடு சேர்த்துக்கொள்ளவோ நீக்கவோ ஐவர்கொண்ட பஞ்சாயத்திற்கு உரிமையுண்டு. இவர் களால் தீர்த்து வைக்கமுடியாத பிரச்சினை ஏற்படின், நீதிமன்றத்தை நாடுவர்.

கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை இப்பழங்குடி மக்களிடையே மிகக்குறைவு. பெண்களில் ஒருவர் கூட படித்தது இல்லை. அரசாங்கம் இவ்வாதிவாசிகளுக்காகப் பள்ளிகளை ஏற்படுத்தி உணவு உடை முதலியவைகளைக் கொடுத்துக் கல்விகற்பிக்க வகைசெய்துள்ளது.

இவர்களது பெயர்களை நோக்கின், இவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் போல் தோன்றும். விஷ்ணுவை ரெங்கசாமி என்றே அழைக்கின்றனர். காட்டுத்தேவதை களையும் (Forest deities) வணங்குகிறார்கள். மேலும் ஒரு கலலினை நட்டு, அதற்குக் "காரைமடைக்கடவுள்" எனப்பெயரிட்டு அதனையும் வணங்குகிறார்கள். கோவை மாவட்டத்திலுள்ள காரைமடையிலுள்ள கோவிலை இது குறிக்குமென எண்ணுகிறேன். தோடர், கோத்தர், இருளர் போன்ற பழங்குடிமக்கள் காரமடைக்குச் சென்று வழிபடுவது இங்கு குறிப்பிடத்தக்கது. வருடத்திற்கு மூன்று தடவை பூஜை நடத்தப்படும். மார்ச்சு மாதம் தான் இவர்களுடைய வருடப்பிறப்பாகும். வருடப்பிறப்

பன்று நடத்தப்படும் பூஜைக்கு "உகாதிப் பூஜை" என்று பெயர். அக்டோபர் மாதத்திலும் டிசம்பர் மாதத்திலும் நடத்தப்படும் பூஜைகளுக்கு முறையே "கௌரி பூஜை", "கார்த்திகை பூஜை" என்று பெயர். பூஜை செய்யும்போது சிலருக்கு மருள் வருவதுண்டு.

திருவிழா நடத்தும் பழக்கமும் இவர்களிடையே உண்டு. அக்டோபர் மாதத்தில் திருவிழா நடத்துகிருர்கள். ஒரு நாள் மட்டுமே இத்திருவிழா நடைபெறும். அத்தினத்தன்று தெய்வத்தைச் சீயக்காய் கலந்த நீரோடு தேங்காய் நீரும் மஞ்சள் நீரும் கலந்த கலவை நீரைக் கலந்து காலையில் நீராட்டுகிருர்கள். பின் மாலைகள் அணிவிக்கப்பட்டுப் பால், பழம், தேன் முதலியவைகள் படைக்கப்படுகின்றன. இதனையடுத்து தீபாராதனை நடக்கும். பிறகு பற்பல காரணங்களுக்காகத் தெய்வத்தை வேண்டி நேர்ச்சை நேர்ந்தவர்கள் ஆற்றிற்கு மேளதாளத்துடன் சென்று நீராடி செவ்வகவடிவிலுள்ள அனற்குழியில் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றுவர். இதற்குக் "கொண்டமிதி" என்று பெயர். திருவிழாவன்று நூற்றெரு தீபாராதனைகள் நடைபெறும். ஆட்டுக்கடாக்களைத் தெய்வத்திற்குப் பலியிட்டு விருந்து பரிமாறப்படும். பின் ஆண் பெண் இருபாலரும் நடனமாடுவர். திருவிழாக் காலத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனின், இத்தீபாராதனையை நடந்துபவர் லிங்காயத்துப் (Lyngayath) பிரிவைச் சார்ந்த பிராமணராவார். இத்தகைய வழக்கம் மைசூர் மக்களிடையேயும் படகர் மக்களிடையேயும் உள்ளது.

இவர்கள் பொங்கல் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுகிருர்கள். பொங்கலன்று நான்கு திசைகளில் நான்கு பானைகளையும் நடுவில் ஒரு பானையும் வைத்துப் பொங்கலிடுவர்.

கசவப்பெண் பருவமடைந்தவுடன் தனிவீட்டில் தங்க வைக்கின்றனர். தினமும் குளித்தபிறகே உணவு கொடுக்கப்படும். வைக்கோல் விரிக்கப்பட்ட படுக்கையில்தான் இப்பெண் தூங்கவேண்டும். இவள் தங்கியிருக்கும் வீட்டின் முன்னால் பேய், பிசாசுகள் வராமலிருக்க இரும்பையும் தோலையும் வைத்திருப்பார்கள். இவளுக்குத் துணையாக இரவில் வயதான பெண்ணொருத்தி இவளுடன் தூங்குவாள். பன்னிரண்டாவது நாளன்று பொழுது விடிவதற்கு முன்னால் தாய்மாமன் இவள் தங்கியிருந்த வீட்டின் முன்பாகத்திலுள்ள சிறிய பந்தலை அழித்துவிடுவான். அன்றைய தினம், தனது பூர்வீக வீட்டிற்கு வருவதற்கு முன்னால் உற்றார் உறவினர்களுக்குத் தகவல் தெரிவிப்பர். அன்றியும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்திற்கும் தகவல் தெரிவிப்பர். தனி வீட்டில் தங்கியிருந்த அப்பருவப் பெண் நீராடிவிட்டுப் புத்தாடைகளை அணிந்து வீட்டு வாசலின் முன்புவந்து பெரியோர்களை வணங்கி வீட்டினுள் செல்வாள். அன்று விருந்தும் நடனமும் நடைபெறும்.

பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமே பெரும்பாலும் நடைபெறுகிறது. பெண்ணைப் பார்க்க மாப்பிள்ளை வீட்டாரே முதலில் செல்லவேண்டும். செல்லும்போது மாப்பிள்ளையின் உறவினர்களில் ஐந்துபேர் சோற்றோடு சர்க்கரை கலந்த கலவையில் ஐந்து உருண்டைகளையும் வெற்றிலை, பழம் முதலியவற்றையும் எடுத்துக்கொண்டு மேளதாளத்தோடு செல்வார்கள். பெண்ணின் தந்தையிடம் சீதனம் முதலியவற்றைக் குறித்துப் பேசிமுடித்துத் திருமணத்திற்கு நாள் குறிப்பார்கள். பிறகு நடக்கும் விருந்தில் கலந்துகொண்டு அவர்கள் தம்மூர் திரும்பிச் செல்வர்.

உறவினர்களுக்குத் திருமணம் பற்றிய தகவலைத் தெரிவிக்க ஆள்மூலம் சொல்லி அனுப்புவர். சனிக்கிழமையைத் தவிர மற்றைய நாட்களை நல்ல நாட்களாகக் கருதுகிறார்கள். இருப்பினும் ஞாயிற்றுக்கிழமையைத்தான் தாலிகட்டும் நாளுக்கு முந்திய சிறந்த நாளாகக் கருதுகிறார்கள். மணமகள் இல்லத்தில் நடைபெறும் வைபவத்தன்றும் மணமகன் இல்லத்தில் நடைபெறும் வைபவத்தன்றும் மணமகன் தன் தாய் மாமனுக்கும் அவர் மனைவிக்கும் தனித்தனியே ஆடைகளும் ஒன்றரை ரூபாயும் கொடுக்கவேண்டும். அன்றியும் மணமகன், மணமகளுக்கும் அவளது தாய் தந்தையருக்கும் ஆடைகள் கொடுக்க வேண்டும். இதனைப் ''பால்கூலி'' என்று கூறுகிறார்கள்.

திருமண நாளன்று மணப்பெண்ணின் வீட்டின் முன்பு துணியாலான பந்தல் போடப்பட்டுத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். மாப்பிள்ளை வீட்டார், உறவினர்களையும், வேண்டியவர்களையும் அழைத்துக்கொண்டு பெண்ணிற்குரிய சேலை, ரவிக்கை, (தங்கள் வசதிக்கு ஏற்றவாறு) பரிசப்பணம் முதலியவற்றை எடுத்துக்கொண்டு மேளதாளத்துடன் பெண்ணின் வீட்டிற்கு வருவார்கள். மாப்பிள்ளை வீட்டார் கொண்டுவந்த ஆடைகளை மணப்பெண் அணிந்துவரும்படிச் செய்தபின் அவளுக்கென வரையறுக்கப்பட்ட சடங்குகள் தனியாக நடத்தப்படும். இதேபோன்று மாப்பிள்ளைக்குரிய சடங்குகளும் தனியாக நடத்தப்படும். பின் விருந்தும் நடனமும் நடைபெறும்.

மாலையில் மணமகன் வீட்டிற்கு எல்லோரும் வருவர். மாப்பிள்ளையையும் பெண்ணையும் தனித்தனி வீட்டில் தங்கச்செய்வர். மறுநாள் அதிகாலையில் ஆற்றிலிருந்து மாப்பிள்ளைக்கும் பெண்ணிற்கும் தனித்தனியாக ஐந்து சிறு குடங்களில் நீரைக்கொண்டுவந்து சூடாக்கித் தனித்

தனியாகக் குளிக்கும்படி செய்வர். பின் மணமக்கள் புத்தாடைகளை அணிந்து கொள்வார்கள்.

வீட்டின் முற்றத்தில் ஐந்துஅடி நீளமுள்ள ஒரு பலகை வைக்கப்பட்டிருக்கும். இப்பலகையை ''அசமணிப் பலகை'' என அழைக்கின்றனர். அசமணிப் பலகையின் இருபக்கத்திலும் ஒவ்வொரு தட்டு வைக்கப்பட்டிருக்கும். ஒரு தட்டில் மஞ்சள்பொடி கலந்த அரிசியையும், அடுத்த தட்டில் கரிப்பொடி கலந்த அரிசியையும் வைப்பர். இவ் விரு தட்டுகளுக்குமிடையில் உள்ள இடத்தில் பழம், பலசரக்கு (உப்பைத்தவிர) சாமான்கள் முதலியவைகளை வைப்பர்.

மணமகனை அழைத்துவந்து வடதிசையை நோக்கி நிற்கும்படிச் செய்து, நான்கைந்துபேர் ஒரு துணியால் மாப்பிள்ளையைச் சுற்றிப் பிடித்துக்கொள்வர். மணமகள், மணமகனைச் சுற்றி மும்முறை வலம்வந்து எதிரே நிற்பாள். பின் கண்ணாடி மணிகளைக் கொண்ட (வசதியுடையவர் கள் தங்கத்தால் மங்கல நாண் செய்கிறார்கள்) தாலியினை மணமகளின் கழுத்தில் மணமகன் கட்டுவான். இதனை யடுத்து தம்பதிகள் இருவரும் பெரியவர்களின் கால்களில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெறுவார்கள். பிறகு விருந்தும் நடனமும் நடைபெறும்.

திருமணம் முடிந்தபிறகு மூன்று நாட்களுக்குப் புது மணத் தம்பதியர்களுக்குப் பெண்ணின் வீட்டில் விருந்து நடைபெறும். பெண்ணின் வீடு தூரத்தில் இருப்பின் மூன்று நாட்களும் தங்கியிருந்து விருந்து முடித்துவிட்டு வருதல்வேண்டும். அண்மையிலிருப்பின் உணவு உண்டு விட்டு உடனே வந்துவிடுவர்.

இருபத்துமூன்று வயதிற்கு மேலான மணமாகாத பெண்களை இவர்களிடையே காண்டலரிது. ஆண்களுக்கு இருபத்துமூன்று வயதிற்கு மேல்தான் திருமணம் நடக்கும். ஒருகாலத்தில் இவர்களிடையே குழந்தைத் திருமணம் (child marriage) இருந்ததாக அறிகிறோம். விதவை மறு மணம் இவ்வினத்தாரிடையேயும் உண்டு.

திருமணத்திற்கு முன் இருவரிடையே தொடர்பு ஏற்பட்டு கர்ப்பம் உண்டாயின் அதற்குக் காரணமான வனே அப்பெண்ணைத் திருமணம் செய்தாக வேண்டு மென பஞ்சாயத்தார் தீர்ப்புக் கூறுவர். பிறவினத்து ஆடவனோடோ அல்லது பிறவினத்து பெண்ணோடோ ஓட நேர்ந்தால், அவர்களைத் தம்மினத்திலிருந்து நீக்கிவிடுவர். மீண்டும் தம்மினத்தவரோடு சேர்க்க வேண்டுமெனின், பஞ்சாயத்தார் தீர்ப்புப்படி அடியும் உதையும் கொடுத்து அபராதம் விதிக்கப்படும். பின் இருவரும் பூசாரியால் மந்திரம் ஓதப்பட்டுப் புனிதப்படுத்தப்பட்டுத் தம்மினத்தவ ரோடு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

அண்ணன் இறப்பின், அண்ணியைத் தம்பிமார்கள் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. அண்ணியைத் தன் தாயாருக்கு ஒப்பாகவே மதிக்கிறார்கள். தம்பி இறக்க நேரிடின், தம்பியின் மனைவியை அண்ணன்மார்கள் திருமணம் செய்து கொள்ளலாம். மனைவியை இழந்தவர் களும் மறுமணம் செய்து கொள்ளலாம். விவாகரத்தும் இவ்வாதிவாசிகளிடையே அனுமதிக்கப்படுகிறது. இப் பழங்குடி மக்களிடையே விதவைகளும் பொட்டு வைத்துக் கொள்ளுகின்றனர்.

ஏழாவது மாதத்தில் கருவுற்ற பெண்ணை அவளது பிறந்தகத்திற்கு அழைத்துச் செல்வர். பிரசவத்தின்

போது மருத்துவர் உதவியை இவர்கள் நாடுவது கிடையாது. குழந்தை பிறந்தவுடன் தாயையும் சேயையும் வீட்டோடு சேர்ந்திருக்கும் தனியறையிலாவது அல்லது வேறு வீட்டிலாவது தங்கும்படிச் செய்வர். பெண்ணின் உறவினரோ அல்லது மாப்பிள்ளை உறவினரோ இவர்கள் தங்கும் இடத்திற்குச் செல்லக் கூடாது. குழந்தைக்கு ஊர்ப்பூசாரியே தன் விருப்பம் போல் பெயரிடுவார். அன்று உறவினர்களுக்கு விருந்து கொடுக்கவேண்டும். ஆண் குழந்தை பிறந்தால் ஆருவதுநாளிலும், பெண் குழந்தை பிறந்தால் மூன்ருவது நாளிலும் தொட்டிலில் படுக்கவைப்பார்கள். ஒரு மாதம் கழித்து, தாய் தன் குழந்தையுடன் கணவன் வீட்டிற்கு வருவாள். பெற்ருேர்கள் வசதியுடையவர்களாக இருப்பின், இரண்டாவதாகவும் அதன் பின்பும் தன் மகள் கருவுற்றிருப்பின், பிரசவமாவதற்கு முன்னுல் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வர்.

அம்மைநோய் வந்தவர்களைத் தனி வீட்டில் தங்கும்படி செய்வர். தெய்வத்தின் கருணையால் இந்நோய் வந்தவர்கள் பெரும்பாலும் இறப்பது கிடையாதாம். குணமடைந்த பிறகு தெய்வத்திற்குப் பால் பொங்கல் படைப்பர். பிரசவ சமயத்தில் சில பெண்கள் இறக்க நேரிடுகிறது.. காட்டு மிருகங்களால்தான் இவர்களுக்குச் சாவு அதிகமாக ஏற்படுகிறதாம்.

எவரேனும் இறக்க நேரிடின், இறந்தவரின் கால்களை உடனே மடக்கிவிடுவர். இறந்த செய்தியினைப் பஞ்சாயத்தாருக்கும் உறவினர்களுக்கும் ஆள்மூலம் சொல்லியனுப்புவர். உறவினரும் ஊராரும் உடன்வர பிணத்தைச் சவக்குழிக்கு எடுத்துச் செல்வார்கள். பிணத்தைச் சவக்குழியினுள் வைத்து, உறவினர்கள் அதைச் சுற்றி வலம் வருவார்கள். இறந்தவரின் மூத்தமகன் (மகன் இல்லை

யெனில் உறவினர்களின் மூத்தமகன்) பிணத்திற்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்வான். பின் அவனது தலைமயிர், குறும்பன் ஒருவனால் கத்தரிக்கப்படும். பிணத்திற்குச் செய்யவேண்டிய சடங்குகளில் ஏதேனும் குறையிருப்பின், மூப்பன் அபராதம் விதிப்பான். அபராதம் கட்டத்தவறினால் இரண்டோ அல்லது மூன்றோ நாட்களுக்குப் பொதுமராமத்து வேலை செய்ய வேண்டும். பின் பிணத்தை மூடி அதன்மீது பெரிய பாராங்கல்லை வைத்துவிடுகிறார்கள். அக்கல்லிற்குக் ''கோட்டைக்கல்'' என்று பெயர். பின் இறந்தவரின் வீட்டில் விருந்து நடைபெறும். இறந்த மூன்றாவது நாளன்று பிணத்தை வைத்த இடத்தில் ஒரு கல்லை நட்டு பூஜை செய்வர். ஒவ்வொரு வருடத்திலும் அங்கு ''ஆண்டு பூஜை'' நடத்துவர். அன்றும் ஒரு கல்லினை நட்டு அதற்கு அரிசிப்பொங்கல் படைத்து பூஜை செய்வர்.

அரசியலாரால் தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டம், குடிசை மாற்று வாரியம் போன்று இப்பழங்குடி மக்கட்கும் ''பழங்குடி நல வாரியம்'' ஒன்றை ஏற்படுத்தி. வேலைவாய்ப்பு முதலியவற்றை அதிகரித்து அவர்களது பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கவேண்டும். பொருளாதாரத் துறையில் முன்னேறினால் அவர்களது வாழ்வும் முன்னேறும் என்பது திண்ணம்.

### நன்றியுரை

இக்கட்டுரை எழுத ஆக்கமும் ஊக்கமும் அளித்து, பல திருத்தங்கள் கூறிய எனது பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கும் டாக்டர் செ. வை. சண்முகம் அவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றி உரித்தாகுக!

## உதவிய நூற்களும் கட்டுரைகளும்

அகத்தியலிங்கம், ச. & சக்திவேல், சு. *1970* — **Bibliography of Nilgiri Tribes,** Centre of Advanced Study in Linguistics, Annamalai University. Vanyajati, New Delhi-55, (forth-coming)

இருதயநாத், பிலோ. *1969* — **காட்டில் என் பயணம்,** சென்னை.

சிதம்பரநாத பிள்ளை, வே. *1971* — "நீலகிரி கசவா பழங்குடி மக்கள்" ஆராய்ச்சி, மலர் 2, இதழ் 2.

தாமோதரன், ஜி. ஆர். *1962* — **A Socio-Economic Survey of the Tribes of the Nilgiri District,** P. S. G. School of Social work, Coimbatore.

நிகாம், ஆர். (Ed) *1961* — Inquiries into the spoken languages of India, From early times to Census of India, 1901, Language Division, Office of the Registrar General, India.

# 4. தோடர்கள்

சு. சக்திவேல், M. A., M. A.,

‘‘எருமையின் குழந்தைகள்’’ என்றழைக்கப்படுகின்ற தோடா பழங்குடி மக்கள் பல நூற்றுண்டு காலமாக நீலகிரியில் வாழ்ந்து வருகிருர்கள். தோடா பழங்குடிகளுடன் படகா மக்கள் மற்றும் கோத்தர், இருளர், பணியர், குறும்பர், காட்டுநாயக்கர், கசவர் போன்ற பழங்குடி மக்களும் நீலகிரியில் வாழ்ந்து வருகிருர்கள். அனைத்துப் பழங்குடி மக்களும் ஒரே மாவட்டத்தில் வாழ்ந்தாலும் பண்பாடு, பழக்கவழக்கங்கள், தொழில், மொழி ஆகியவற்ருல் வேறுபட்டவர்களாவர். தோடர்களது வாழ்க்கை முழுதும் எருமையைச் சுற்றியே சுழல்கிறது. கோத்தரது வாழ்வு பல கருவிகளை உற்பத்திச் செய்வதிலும் படகரது வாழ்வு விவசாயத்திலும் மற்ற பழங்குடி மக்களது வாழ்க்கை காட்டுப் பொருட்களைச் சேகரிப்பதிலும் தேன் எடுத்தல் போன்றவற்றிலும் கழிகின்றது. தோடர்கள் தனித்து வாழ்ந்த வாழ்க்கையின் பலனுக, அவர்களிடையே சில சிறப்புத் தன்மைகளைக் காண்கிருேம்.

தோடா ஆண்களும் பெண்களும் ஏறத்தாழ பழுப்பு நிறமுடையவர்கள். தோடா ஆண்கள் உயரமாகவும் நீண்ட மூக்குடனும் காணப்படுகின்றனர். இவர்களது மயிர் திண்மையாகவும் கறுப்பாகவும் அலைஅலையாகவும் இருக்கின்றன. மற்ற பழங்குடி மக்களுடன் ஒப்பிடுமிடத்து

இவர்கள் நீண்ட தாடியுடனும் உடலெல்லாம் மயிருடனும் காணப்படுகிறுர்கள். இளம் பெண்கள் சுருள் சுருளான மயிருடன் காணப்படுகின்றனர். பொதுவாக நீண்ட தலை யுடனும் பழுப்புநிறக் கண்களுடனும் வட்ட வடிவ முகத் துடனும் அகன்றெழுந்த மூக்குடனும் மிதமாகப் பருத்த இதழுடனும் காணப்படுகின்றனர் எனலாம். இவர்கள் தங்களைத் ''தூதா'' என்றே அழைக்கின்றனர். இப் பழங்குடி மக்களைப் போன்று ஆராயப்பட்ட பழங்குடி மக்கள் உலகிலே இல்லையெனலாம்.

தோடா பழங்குடி மக்கள் குறிப்பாக தோடா நாடு, குந்தா நாடு, பெரங்கா நாடு, மேற்குநாடு போன்ற இடங் களில் வாழ்கிறுர்கள். இவர்கள் வாழும் மந்துகள் எண்பதுக்கு மேல் உள்ளன. தோடர்களது மக்கட் தொகை கடந்த ஒரு நூற்றுண்டு காலமாக எண்ணூறுக்குட்பட்டதாக உள்ளது. 1868 ஆம் ஆண்டில் 704 ஆகயிருந்த மக்கட்தொகை 1960 ஆம் ஆண்டுவரை ஏறத்தாழ அதே அளவில் இருந் தது எனலாம். இவர்களது மக்கட் தொகை குறைய பெண் நோயும், பல்கணவர் மணமும் (Polyandry) ஒரு காலத்தில் இவர்களிடையேயிருந்த பெண் சிசுக்கொலை (female infanticide)யும் முக்கிய காரணமாகும். டாக்டர் பண்டிட் (1927) அவர்கள் பருவமடைவுதற்கு முன்பே உடலுறவு கொள்வதும் மக்கட் தொகை குறையக் காரண மென்கிறுர். இதனுல் பாலின உறுப்புகட்குத் தீங்கு விளை கின்றது எனக் கூறுகிறுர். தோடர்களைப் போன்று பல்கணவ மணத்தைப் பின்பற்றும் உத்தரபிரதேசத்தி லுள்ள ஜோன்ஸார்-பாவா பழங்குடி மக்களிடையேயும் மக்கட் தொகை பெருகாமல் ஒரே அளவாக இருப்பதைக் கீழேயுள்ள புள்ளி விபரம் நன்கு விளக்குகிறது.

| தோடர் மக்கட் தொகை | | [1]ஜோன்ஸார்-பாவா மக்கட்தொகை | |
|---|---|---|---|
| 1881 | 675 | 1881 | 45,117 |
| 1911 | 748 | 1911 | 54,812 |
| 1951 | 484 | 1941 | 57,650 |
| 1960 | 762 | 1951 | 58,468 |

தோடா பழங்குடி மக்களிடையே இரு பெருங் கால்வழி (moiety) உண்டு. தேர்த்தாள், தெவிளி ஆள் என இரு பெரும் பிரிவுண்டு. இவர்கள் அகமணப் பகுப்பைச் (endogamous. ) சார்ந்தவர்கள். ஒரு பெருங்கால்வழியைச் சார்ந்தவர்கள் மற்ற பெருங்கால்வழியில் திருமணம் செய்து கொள்ளமாட்டார்கள். ஆனல், மற்ற கால்வழிப் பெண்ணைக் காமக்கிழத்தியராக வைத்துக் கொள்வர். அப் பெண்ணினுடைய கணவனின் சம்மதத்துடனே ‘‘பூத்குளி’’ பரிசளித்து தொடர்பு வைத்துக் கொள்கின்ற பழக்கம் இன்னும் உள்ளது. அப்பெண்ணைத் தோடா மொழியில் ‘‘தோட்டி வொய் மொஹ்’’ என்று கூறுவர். ஒவ்வொரு பிரிவிலும் பல கால்வழிகள் (clans) உள்ளன. அப்பிரிவுகளிடையே புறமணக் கொள்கையே நிலவும். இப்பிரிவுகளில் சில தந்தைவழியுடையன (patriarcal); சில தாய்வழியுடையன (matriarcal); இக்கால்வழியைச் சார்ந்த ஒவ்வொருவரும் தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்கிருர்கள். தோடர்களிடையே பைகி, பெக்கன், குத்தன், கென்ஞ, தோடி என ஐந்து பிரிவுகள் உள்ளன. பைகி என்ற பிரிவு தேர்த்தாள் பிரிவையும் மற்ற பிரிவுகள் தெவிளியாள் பெருங்கால்வழியையும் சாரும். தேர்த்தாள் பிரிவில் நொர்ஸ், காஸ், தாரோட்ர், மௌ்காஸ், கேரொடர், பீர்கோட், நெற்றி, இனிகிதி, மேட் என்ற

1. Census of India, 1961 Part V-C, Todas, 1965.

பத்து கால்வழிகள் உண்டு. தெவிளியாள் பெருங்கால் வழியில் கியெதெ, அம்காஸ், மதிகெட்ர், பீட், கோனி கொர், பீர்கோட் என்ற ஆறுகால்வழிகள் (clans) உள்ளன. தேர்த்தாள் பிரிவினர்தான் தங்களை உயர்வாகக் கருதிக் கொள்ளுகிருர்கள்.

தோடர்களது பூர்வீகம் (Origin) பற்றி பல கருத்துக் கள் நிலவுகின்றன. 1602 ஆண்டு கொச்சி சிரியன் கிறிஸ் தவப் பாதிரியார் ஃபெர்ரிரி என்பவர்தான் முதன் முதலில் தோடர்களைக் கண்டுபிடித்தவர்.[3] அதைத் தொடர்ந்து உலகத்தின் கவனத்தையே கவர்ந்தவர்கள் தோடர்கள் எனின் மிகையாகாது. இவர்களது பூர்வீகத்தைப் பற்றிய கதைகளோ அல்லது வாய்மொழி இலக்கியமோ (Oral-literature) ஒன்றும் கிடையாது. டாக்டர் போப் அவர்கள் ''தொழுவன்'' ''மந்தையுடையவன்'' என்ற தமிழ்ச் சொல்லினின்று தொதுவா, தூத என மாறியதாகக் கூறு கிருர். ஆனல், இக்கருத்து அவ்வளவு ஏற்புடைத்த தாகத் தெரியவில்லை. தோடர்களுக்கு ரோமானியர் களைப்போன்று மூக்கு இருப்பதால், ரோமானிய இனத் தைச் சார்ந்தவர்கள் என்று சிலர் கூறுகிருர்கள். தோடர் களைப்பற்றி மைசூர்க் கல்வெட்டொன்றில் குறிக்கப்பட் டுள்ளது. மைசூரை ஆண்ட விஷ்ணுவர்த்தனன் நீல கிரியைக் கைப்பற்றியதாக இக்கல்வெட்டுச் சான்று கூறு கிறது. தோடர்களைப்பற்றி முதன் முதலில் இக்கல் வெட்டில்தான் குறிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டின் காலம் கி.பி. 1117.[4] எனவே, கி.பி. 12ஆம் நூற்ருண் டிலே தோடர்கள் நீலகிரியில் இருந்தனர் என எண்ண லாம். இதற்கு முன்பு எப்பொழுது நீலகிரிக்கு வந்தனர்?

3. The Statesman, Calcutta, 6th June, 1966
4. Lewis Rice, Epigraphica Carnatica, vii, Ins. 83,

அல்லது நீலகிரியிலே பிறந்து வளர்ந்த இனமா? என்பதும் ஆராய்ச்சிக்குரியதாகும். இராவணனிடம் பல்லக்கு தூக்குபவர்களாகப் பணியாற்றி இராமன் இராவணனைக் கொன்ற பிறகு இவண் வந்து குடியேறினர் என வயது முதிர்ந்த தோடா ஒருவர் கூறியதாக பி. எஸ். வார்டு அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[5] தோடர்களது குடிசையமைப்பைக் கொண்டு பல்லவ இனத்தைச் சார்ந்தவராகயிருக்க வேண்டுமெனச் சிலர் ஊகிக்கின்றனர். இவர்கள் தங்களைப் பஞ்சபாண்டவ வம்சம் என்று கூறிக் கொள்ளுவர். சிலர் பஞ்சபாண்டவரை வணங்குவதையும் நேரிலே கண்டேன். ''அர்ஜுனன் குகை'' யொன்றும் உள்ளது. பஞ்சபாண்டவ வம்சம் என்பதற்கேற்ப, ஒரு பெண்ணைப் பல ஆண்கள் மணக்கின்ற வழக்கமும் (Polyandry) இவர்களிடையே உண்டு. தோடர்களது பண்பையொத்த ஓர் இனமானது டெக்கான் பகுதியை ஆண்டதாகக் கூறப்படுகிறது. நர்மதா நதிக்கரையிலமைந்த மஹிசமாதி பற்றியும் குறிக்கப்பட்டுள்ளது. புத்த வரலாற்றிலும் (240 B. C.) மஹிஸா மண்டலத்தைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. அஃது எருமைநாடு எனக் கூறுகின்றனர். சங்க இலக்கியமான புறநானூற்றிலும் மைசூர் ''எருமை நாடு'' எனக் குறிக்கப்பட்டுள்ளது.[6] தேக்குறிச்சி என்ற தெய்வம்தான் தோடர்களையும் எருமைகளையும் படைத்ததாகச் சில தோடர்கள் கூறுகிறார்கள். தோடர்களின் தலைவர் முத்திகென் தோடர்கள் முத்தநாட்டு மந்தில் பிறந்து வளர்ந்த பழங்குடி மக்களே எனக் கூறுகிறார். சில சமூகவியலார்கள் (Sociologist) தென்னாட்டைச் சார்ந்த பழங்குடி மக்களே தோடர்கள் என்றும் தனித்து வாழ்ந்த வாழ்க்கையினால்

---

5. B. S. Ward, Manual of Nilgiris District, 1880.
6. S. Sakthivel, Nilgiri Todas, Kanaiyazhi, New Delhi, 1968.

மற்றவர்களினின்றும் வேறுபட்டுள்ளார்கள் என்றும் கூறுகின்றனர். மொழி அடிப்படையில் நோக்கினுலும், தோடர்கள் பேசும் தோடா மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததேயாகும். தோடர்களைப் பற்றி நன்கு ஆய்ந்த டாக்டர் ரிவர்ஸ் (Rivers) (1906) அவர்கள் தோடர்கள் மலபாரினின்றும் வந்தவர்களாக யிருக்க வேண்டுமெனக் கூறுகிருர். மலபார் மக்கட்கும் தோடர்கட்கும் பொதுவாகவுள்ள பல்கணவ மணம் (Polyandry) காமக்கிழத்தியர் உறவு, மாப்பிள்ளை மணப் பெண்ணுக்குத் துணி கொடுத்தல், உறவினர்கள் பிணத்திற்குத் துணி போர்த்துதல், ''தொட்ரி'', ''மித்குவாடர்'' போன்றவற்றைப் பயன்படுத்துதல் முதலியவற்ருல் தோடர்கள் மலபாரினின்றும் வந்திருக்க வேண்டுமெனக் கருதுகிருர். அதற்கேற்ருற்போல தோடர்கள் சாமியாடும் போழ்து தூய மலையாள மொழியில் பேசுவதும் இறந்தபின் ஆவி மேற்குநாடு செல்லும் என நம்புவதும் சான்றுகளாகக் காட்டப்படுகின்றன. பேராசிரியர் எமனோ (Emeneau) போன்ருேர் மேற்கண்ட பழக்க வழக்கங்கள் இவர்கட்கு மட்டுமின்றி எல்லாத் தென்னிந்தியப் பழங்குடி மக்கட்கும் பொருந்தும் எனக் குறிப்பிடுகிருர்.

உடலளவுகளைக் கொண்டு ( Anthropometric data ) தோடர்கள் ''வடக்கு இண்டிட்'' பிரிவைச் சார்ந்தவர்கள் என்று எய்க்ஸ்டெட் ( Eickstedt ) கூறுகிருர். மத்திய ஆசியாவைச் சார்ந்த தந்தை கால்வழிப் பிரிவைச் சேர்ந்த இந்தோ-ஆரிய மொழி பேசுகின்ற பழங்குடிகளில் சிலர் இப்பிரிவைச் சார்ந்தவர்களாவர். டாக்டர் அய்யப்பன் போன்ற மானிடவியல் பேரறிஞர்கள் தோடர்கள் தொல் மத்தியதரைக்கடல் இனத்தைச் சார்ந்தவர்கள் (Proto Mediterranean) என்று கூறு

கிறார்கள்.[7, 8] இக்கருத்தை அறிஞர்கள் பலரும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். கிரேக்க அரசர் பீட்டரவர்கள் (Prince Peter of Greece-) (*1949*) தோடர்களது தெய்வங்களின் பெயரும் சுமேரியரது தெய்வங்களின் பெயரும் தொடர்புடையதாகக் காணப்படுவதால், தோடர்கள் சுமேரிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறுகிறார்.[9] ஈராக்கிலுள்ள பழங்குடி மக்கட்கு நீர் எருமை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததுபோல, தோடர்களது வாழ்வும் எருமை மந்தையைச் சுற்றியே சுழல்வதும் இவண் குறிப்பிடத்தக்கதாகும்.[10] உருவ அமைப்பிலும் சில ஒற்றுமைகள் காணப்படுவதால், தோடர்கள் மெசபடோமியாவி (னின்றும் வந்தவர்களென்று கூறுவார்கள். கான்க்ரேவ் Congrave) அவர்களும் தோடர்கள் சித்திய இனத்தைச் சார்ந்தவர்களாகயிருக்கவேண்மென்கிறார். பிளவட்ஸ்கி (Blavatsky) என்பவரும் இதே கருத்தைத்தான் வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் எமனோ (Emeneau) அவர்கள் தோடர்கள் சித்திய இனத்தைச் சார்ந்தவர்கள் என்ற கருத்தை மறுக்கின்றார்கள். எமனோ அவர்கள்தான் தோடர்களிடையே நிலவிய புறமண தந்தை கால்வழியமைப்பினைக் (exogamous patrilineal sib) கண்டுபிடித்தார். சுமேரிய

---

7, 8. Breeks, J. W. An account of the Primitive Tribes and monuments of the Nilgiris, London, 1873.
Aiyappan A., An Introduction to possible Sumerian Survivals in Toda rituals p xiv, 1951.

9. Prince Peter of Greece, Possible Sumerian Survivals in Toda rituals, Bulletin of the Madras Govt. Museum, Madras, 1951.

10. The Anthropology of Iraq-The Lower Euphrates-Tigris Region Field Museum of Natural History, 30, part 1, 2, 1949.

கோயில்களும் தென்னிந்திய கோயில்களைப் போன்று அமைக்கப்பட்டுள்ளதும் இந்திய மதங்களில் சுமேரிய கூறுபாடு கலந்திருப்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கனவாகும். ''சுமேரியரது செல்வாக்கு நன்கு பரவியிருக்குமானல், தொல்தோடா பண்பாட்டில் அதன் கூறுபாடு சிறிதளவு கலந்திருக்கலாம்'' [11] மைசூரைச் சார்ந்த பல சாதியினர் பல நூற்றுண்டு காலமாக நீலகிரியிலே வாழ்வதால், இவர்களும் மற்றவர்களைப் போன்று மைசூரினின்றும் வந் திருக்கலாமென மேட்ஜ் (Metz) (1864) போன்ற மானிட வியலார் கருதுகின்றனர்.

தோடர்கள் நீலகிரியிலே பிறந்து வளர்ந்த பழங்குடி மக்களாவர். பல நூற்றுண்டு காலமாகத் தனித்து வாழ்ந்த வாழ்க்கையின் பலனாக சில சிறப்புத் தன்மைகளைக் காண்கிறோம். உருவத்தோற்ற அமைப்பிலும் இவர்கள் தொல்மத்தியதரைக்கடல் இனத்தைச் (Proto-Mediterr-anean race) சார்ந்தவர்களாவர். தோடர்கள் வெளி நாட்டினர் எனக் கூறும் கருத்துக்கள் அனைத்தும் தென் னிந்திய பழங்குடிமக்கட்கும் பொருந்துமேயன்றி தோடர்க்கு மட்டுமே பொருந்துவதாகக் கருதுதல் முடியாது. மற்றும் பண்பாட்டிலும் தோடர்கள் தென்னிந்தியப் பிரிவைச் சார்ந்த ஒரு உட்பிரிவினரே. எனவே, தோடர்கள் நீல கிரியிலே பிறந்து வளர்ந்த பழங்குடி மக்கள் என உறுதி யாகக் கூறலாம்.

ஆண்களும் பெண்களும் ''பூத்குளி'' எனும் ஆடை யை அணிகின்றனர். இப்போர்வை சித்திர வேலைப்பாட

---

11. If the sumerian influences were widespread, primitive Toda Culture was likely to have been part of that wide stream not a bucketful that somehow got transported to the Nilgiris.

மைந்ததாகும். இவர்கள் கலையுணர்ச்சி மிக்கவர்கள். தோடா பெண்கள் துணிமணிகளில் பூ வேலைப்பாடு செய்வதில் கைதேர்ந்தவர்கள். ஆண்கள் மரவேலையைத் திறமையாகச் செய்வர்; பாட்டுப் பாடுவதிலும் வல்லவர்கள். தோடரது கற்பனைத்திறன், அறிவின் ஆழம் முதலியவற்றை அவர்களது பாடல்களில் காணலாம். கொடக்கீறி போன்றவர்கள் பழங்கதைகள் கூறுவதில் வல்லவர்கள் இவர்கள் கதைகளைத் தொகுத்தும் வகுத்தும் கூறும் ஆற்றலே தனி ஆற்றலாகும். இவர்களுடைய பாடல்கள் நடனப்பாடல்கள், நடனஞ்சேராப் பாடல்கள் என இருவகைப்படும்.

தோடர்கள் குடிசை கட்டி வாழுமிடத்தை "மந்து" என அழைப்பர். இஃது தமிழ்ச் சொல்லான மந்தையி னின்றும் பிறந்திருக்கலாம் என சிலர் கூறுகின்றனர். ஒவ்வொரு மந்திலும் எருமைத் தொழுவங்கள், கன்றுத் தொழுவங்கள், புனிதப் பால் பண்ணைகளும் (sacred--dairies) இரண்டு அல்லது மூன்று வீடுகளும் இருக்கும். கோயிலும் வீடுகள்போலவே தோன்றும். ஆயின் அவற்றின் கூரைகள் உயரமான கூம்பு வடிவம் உடையன. வீடுகளையும் கோயிலையும் சுற்றிக் கற்சுவர் இருக்கும். அதிலுள்ள வாயில்களின்வழி மக்கள் மட்டுமே போக முடியும். ஒவ்வொரு கோயிலுக்கும் பூசாரியொருவர் இருப்பார். தோடா பெண்கள் எக்காரணத்தைக் கொண்டும் கோயிலுக்கோ அல்லது கோயில் பக்கத்திலோ செல்லக் கூடாது. இத்தகைய வழக்கம் ஆப்பிரிக்காவிலுள்ள கஃபீரகளிடையேயும் உண்டு. தோடர்களது குடிசை வட்ட வடிவமாயிருக்கிறது. மூங்கிலால் பின்னிக் கூரை வேயப்பட்டிருக்கிறது. சிறு வாசலொன்று உண்டு. அனைவரும் குனிந்துதான் செல்ல வேண்டும். வீட்டின்

வலதுபுறத்தில் தூங்குவதற்கென பெரிய திண்ணையொன்றும் இடதுபுற மூலையில் அடுப்பும் உள்ளன. வீட்டில் எருமை கொம்பு போன்ற வடிவத்தை நிறையக் காணலாம். தற்பொழுது அரசியலார் அவர்கட்கு நவீன முறையில் வீடுகள் கட்டி கொடுத்திருக்கிறுர்கள் எனினும் பழைய வீட்டையே விரும்புகின்றனர்.

பெண்கள் வெண்ணெயைத் தலையில் தடவி, மயிரைச் சுருள்சுருளாகப் பின்னிக் கோதிவிட்டிருக்கும் அழகே தனி அழகாகும். தற்பொழுதுதான் தோடா பையன்களும் பெண்களும் படிக்க ஆரம்பித்துள்ளனர். பீட்டர் ராஜ் எனும் மாணவர் பத்தாம் வகுப்பு படிக்கிறுர். அவரது சகோதரி சூடாமல்லி பத்தாவது வரை படித்துள்ளாள். பில்செட் போன்ற பெண்கள் அறிவுக்கூர்மை உடையவர்களாயிருந்தும் வசதியின்மையால் மேலே படிக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. திருமதி பில்ஜெய்ன் அவர்களது இடைவிடாத உழைப்பினுலும் தன்னலமற்ற சேவையாலும் அரசாங்கத்தின் மூலம் தோடர்க்குப் பல நன்மைகள் கிடைத்துள்ளன.

வயது முதிர்ந்த பெரியவர்களைக் கண்டால் பெண்கள் மண்டியிட்டு வணங்கவேண்டும். அவர் தனது பாதத்தைத் தூக்கி அப்பெண்ணின் நெற்றியில் வைத்து வாழ்த்துவார். இதனை அவர்களது மொழியில் ''கோல் மீள் விடுத்'' என்று கூறுவர். இது அவர்களது விசேஷ வணக்கமாகும். தோடா அல்லாத மற்றவர்களைக் கை கூப்பி வணக்கம் செய்கிறுர்கள்.

பூசாரிகளை நியமித்தல், திருமணம், விவாகரத்து, மாற்றுன் மனைவியை அழைத்துச்சென்றது போன்ற விவகாரங்களைக் கவனிக்க ''நோய்ம்'' என்ற பஞ்சாயத்து

தோடா பெண்கள்

தோடர்களது
விசேஷ வணக்கம்

உள்ளது. அபராதம் எருமையாக விதிக்கப்படுகிறது. நீலகிரி தொதுவர் முன்னேற்ற சங்கத்திற்கு முத்திகென் என்பார் தலைவராகப் பணியாற்றுகிறார். தோடர்கள் சமூக பொருளாதாரத் துறையில் முன்னேற இவர் அல்லும் பகலும் அயராது உழைக்கிறார். தோடர்களது முன்னேற்றத்திற்கு முத்திகென்னும் திருமதி பில்ஜெய்னும் தான் காரணம் எனின் மிகையாகாது.

தோடர்களது வாழ்க்கை முழுக்க முழுக்க எருமையைச் சுற்றியே சுழல்கிறது. தெய்வத்திற்கு அடுத்தபடியாக எருமையைத்தான் தெய்வமாக வழிபடுகிறார்கள். எனவேதான் எருமைகளைப் புனிதத்தன்மை வாய்ந்தவை (Sacred buffaloes) என்றும் சாதாரணமான எருமைகள் (Ordinary buffaloes) என்றும் இரு பிரிவாகப் பிரிக்கின்றனர். சாதாரண எருமைகளின் பாலை வீட்டில் பருகுவர்; வெளியிலும் விற்பர்; புனித எருமையின் பாலை அவ்வாறு செய்யமாட்டார்கள். எல்லா மந்திலும் எருமைகளுக்கென தனியிடமும் எருமை கன்றுகளுக்குத் தனியிடமும் புனிதத் தன்மை வாய்ந்த கன்றுகளுக்குத் தனியிடமும் இருப்பதைக் காணலாம். எருமைகளைப் பருவகாலத்திற்கேற்றவாறு வெவ்வேறு இடங்களுக்குச் சென்று மேய்க்கின்றனர். எருமைகளுக்கு உப்பும் கொடுக்கிறார்கள். ''பனி உப்பு'', ''கார் உப்பு'' என பல காலங்களில் எருமைகளுக்கு உப்பு கொடுக்கிறார்கள். எருமையை வைத்துத்தான் அவர்களது செல்வம் கணக்கிடப்படுகிறது. சங்க இலக்கியத்திலும் ''மாடு'' என்பதற்குச் ''செல்வம்'' என்ற பொருள் இருப்பது இவண் குறிப்பிடத்தக்கதாகும். தோடா மொழியில் எருமையைப் பற்றியே நூற்றுக்கு அதிகமான சொற்கள் உண்டு. இவர்களுடைய எருமை வழிபாடு இந்தியா முழுதும் பரவியுள்ள கால்நடை வழி

பாட்டின்சாயலாக இருக்கலாமென சிலர் கருதுகின்றனர். சமூக மானிடவியலார்கள் (Social Anthropologists) கூறுவதுபோல, மொழி பண்பாட்டின் வளர்ச்சிக்கருவி என்பதை அந்தந்த மொழியினின்றும் நன்குத் தெரிந்து கொள்ளலாம். அக்காலத்தில் தோடர்களுக்கு விவசாயத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. படகர்கள் தோடர்களுக்குக் "குது" அளிப்பதுமுண்டு. தற்பொழுது கோத்தர்கள் சமூக-கல்வி-பொருளாதாரத் துறையில் முன்னேறி விட்டனர்.[12] அரசியலார் தோடர்களுக்கு நிலங்கள் அளித்து விவசாயம் செய்வதற்கு வேண்டிய அனைத்து வசதிகளும் செய்து கொடுத்துள்ளனர். எருமைகளை மேய்ப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் 2795 ஏக்கர் நிலம் அளித்து, அதனை அநுபவிக்கும் உரிமையும் கொடுத்துள்ளனர். விவசாயம் செய்யும் சிலதோடர்களைப் போன்று எல்லாத் தோடர்களும் உழைத்தால், பொருளாதாரத்துறையில் நிச்சயம் முன்னேறுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. முயற்சி செய்தால் தோடர்களை விவசாயப்பணியில் ஈடுபாடு கொள்ளச்செய்யலாம். ஏனென்றால் விவசாயத்தைக் காட்டிலும் மந்தை வாழ்வில் தான் கஷ்டங்கள் அதிகம். விவசாயத்தினின்றுதான் மந்தை வாழ்வே பிறந்தது எனலாம். இந்நிலையில் உலக வரலாற்றுப் பேரறிஞன் ஆர்னல்டு டாயன்பி (Arnold Toynbee) யின் கருத்து இவண் குறிப்பிடத்தக்கதாகும்.[13] எனவே, அரசியலாரும் தோடர்களும் சிறிது முயற்சி செய்யின் நல்லபலன் கிடைக்குமென நம்பலாம்.

---

12. Mandelbaum D. G. Cultural Change among the Nilgiri Tribes, American Anthropologist, Vol. 43, No. 1, 1941.

13. Arnold Toynbee, A Study of History, p. 168.
Nomadism displays a superiority in several ways. In the first place domestication of animals is obviously a higher art than

தோடர்கள் ஆவியுலகக் கோட்பாட்டில் (animist) நம்பிக்கையுடையவர்கள். நன்னிமித்தங்களில் ஓரளவு தான் நாட்டம் செலுத்தினும் கடவுள் நம்பிக்கையில் ஆழ்ந்த பற்றுடையவர்கள். தோடரது வாழ்க்கையில் சடங்குகள் ஒன்றிக் கலந்துவிட்டன எனலாம். அச் சடங்குகள் பெரும்பாலும் புனிதமான எருமைகளை அடிப் படையாகக் கொண்டன. புனித எருமையின் பாலைக் கோயிலில் பல சடங்குடன் கடைவர். கடையும்போது சில மந்திரங்கள் ஓதப்படும். இக்கோயில்களில் பாலைக் கடைவதற்காகப் பானைகளும், மூங்கிற் கலங்களும் மத்துக் களும் மற்றும் மணிபோன்ற புனிதப் பொருளும் இருக்கும். இவர்களிடையே உருவ வழிபாடு கிடையாது. பண்ணை யில் பால் திருடுதல், பகலில் உடலுறவு கொண்டபிறகு பண்ணையில் நுழைதல் போன்றவற்றைப் பாவங்களாகக் கருதுகின்றனர். மந்தை மேய்த்து வாழும் பழங்குடி மக்களாதலால் அவர்களது மதம் எருமையுடனும் பாற் பண்ணையுடனும் கலந்துவிட்டது எனலாம். "புனித எருமையைப் பால் கறத்தல், கடைதல், நெய்உருக்கல் போன்றவைகளே தோடா மதத்தை உருவாக்குகின்றது" எனலாம்.[14] ஏறத்தாழ எல்லா மந்திலும் கோயில்உண்டு.

---

the domestication of plants in as much as it is a triumph of human wit and will over a less tractable material. The shepherd is greater virtuous than the husbandman. Nomad's life is, indeed a triumph of human skill. He managed to live off coarse grasses that he cannot eat himself, transforming them into milk and flesh of animals and inorder to find subsistence for his cattle in season and out of season from the natural vegetation of the bare parsimonious steppe he has to adopt his life and movements with meticulous accuracy to a seasonable time table.

14. Census of India, 1961, Vol. ix, Part V-C, Toads, 165. page 74. "Milking of Sacred buffaloes, churning of the milk, preparation of ghee constitute the Toda religion."

அக்கோயிலுக்கென பூசாரி உண்டு. அவர் திருமணமானவ ராகயிருப்பின் மனைவியைத் தனது சகோதரனிடம் விட்டு விட்டு இப்பணியை மேற்கொள்ளவேண்டும். மேலும் பூசாரி பல புனித சடங்குகளில் ஈடுபட்டுத் தன்னைப் புனிதத் தன்மை ஆக்கிக்கொள்ளவேண்டும். இப்புனிதத்தன்மை பெற தூக்கம், உணவு, உடை முதலியவற்றில் சில கட்டுப் பாடுகளைமேற்கொள்ளுதல் இன்றியமையாதது. மயிரையோ அல்லது நகத்தையோ வெட்டக்கூடாது. பாலத்தைக் கடத்தல், ஈமச்சடங்கில் ஈடுபடல், வெளியார்களுடன் வியாபார உறவு, பெண்உறவு முதலியவற்றைத் தவிர்த் தாகவேண்டும். இவர்களது சடங்கில் பாத்திரங்களும், மணிகளும், விளக்குகளும் முக்கிய இடம்பெறுகின்றன. பூசாரி எப்பொழுதும் கருப்புத்துணிதான் உடுத்தியிருப்பார்.

தீ பால் பண்ணைதான் மிகவும் புனிதமானவையாகும். அஃது தற்பொழுது செயலற்று இருக்கிறது. ஒரு நாள் முத்த நாடு மந்திலுள்ள போவ் (பெரிய கோயிலுக்குச்) சென்றிருந்தேன். டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற திருவிழாவில் நானும் கலிபோர்னியா பல்கலைக்கழக மானிடவியல் பேராசிரியர் டாக்டர் மாண்டல்பர்ம் (Dr D.G. Mandelbaum, Professor of Anthropology., University of California) அவர்களும் கலந்து கொண்டோம். இக் கோயில் மற்ற கோயிலினின்றும் வேறுபட்ட அமைப்பினை யுடையதாகும். இத்திருவிழாவின்போது சாமியாடியவர் தூய மலையாள மொழியில் பேசியதைக் கேட்டோம். அதற்குரிய காரணத்தைக் கூற மறுத்துவிட்டார். தேக் குறிச்சி போன்ற தெய்வம்தான் தோடர்களையும் எருமைகளையும் படைத்ததாக நம்புகின்றனர்.

மறு உலகத்திலும் (அம் நாட்) இம்மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். எனவேதான் ஈமச்சடங்கில் பல

எருமைகளைக் கொல்கின்றனர். ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் ''ஒன்றைப் பலியிடுவதால் மற்றவைகள் நன்கு வளர்ந்து பெருகும்''' என நம்புகின்றனர். அந்த நம்பிக்கையின் சாயலாக இஃது இருக்குமோ என ஐயுற வேண்டி உள்ளது. சூரியன், சந்திரன், நெருப்பு முதலியவற்றை வணங்குகிறார்கள். ஆனால், நாகவழிபாடு இவர்களிடையே கிடையாது. இயற்கை வழிபாடு தமிழர்களிடையேயும் இருந்ததாகச் சங்க இலக்கியங்களிலும் சிலம்பிலும் காண்கிறோம். இந்துக்களைப் போன்று இவர்கள் விழாக்கள் கொண்டாடுவதில்லை. "எம்மதமும் சம்மதமே'' என்ற கொள்கையுடையவர்கள் போன்று இந்துஸ்தலங்களுக்குச் செல்வது மட்டுமின்றி சிலர் எல்லாத் தெய்வங்களையும் வணங்குகிறார்கள். டாக்டர் ரிவர்ஸ் அவர்கள் தோடர்கள் மிகவும் உயர்ந்த நிலையிலிருந்த மதக்கோட்பாட்டுடன் நீலகிரிக்கு வந்திருக்கவேண்டுமெனக் கூறுகிறார். மேலும் அவர் ''தோடரது மதம் உண்மையிலேயே நிகழக்கூடிய ஒன்றென்று எனக்குத் தோன்றுகிறது''[15] என்றும் குறிப்பிடுகிறார்.

இவர்கள் பேசும் தோடா மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். எழுத்துமொழி இலக்கியம் கிடையாது. ஆனால், வாய்மொழி இலக்கியங்கள் (Oral Literature) நிறைய உண்டு. இவர்களால் பல ஆயிரங்கள் வரை எண்ணமுடிகிறது. இஃது மொழியின் வளர்ச்சியையும் அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டு வளர்ச்சியையும் காட்டுகிறது எனலாம். ஏனெனில் அந்தமான் தீவில் வாழும் ஓங்கே (Onge) பழங்குடி மக்களால் மூன்று வரைதான் எண்ணமுடிகிறது. மீண்டும் மீண்டும் ஒன்று,

---

15. Murdock, Our Primitive Contemporaries (W. H. R. Rivers, The Todas) p. 124.

இரண்டு, மூன்று என எண்ணுகிருர்கள். இஃது அவர் களது பழமை நிலைமையைக் காட்டுகிறது.[16] மேலும் அண்மையில் பிலிப்பைன் தீவுக்கருகிலுள்ள மின் தனேவில் மானிடவியல் பேரறிஞர் இராபர்ட் ஃபாக்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட தாசடாய் (Tasday) பழங்குடிகள் கற்கால பழங்குடியைச் சார்ந்தவர்களாவர். அவர்களது மொழியில் 'மற்ற மக்கள்' என்பதற்குரிய வார்த்தை இல்லாமையும் அவர்களாலும் பன்னிரண்டு வரைதான் எண்ணத்தெரியும் என்பதும் இங்கே குறிப் பிடத்தக்கதாகும்.

பெர்ஞர்ட்ஸ்மித் (Bernard Schmit) (1837), டாக்டர் கால்டுவெல் (1856) போன்ருேர் தோடா மொழியிலுள்ள பெரும்பாலான சொற்கள் தமிழோடு நெருங்கிய தொடர் புடையன என்றும் தோடா மொழி திராவிட மொழிகளில் இலக்கியம் வளம் நிறைந்த தமிழுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். ஜே. ஸார்ட்த் (Shortt) (1868) போன்ருேர் 'தற்பொழுது தமிழும் கன்னடமும் கலந்த மொழியொன்றைப் பேசிய போதிலும் தோடர்கள் பேசிய மொழி தமிழே' என்று குறிப்பிட்டுள்ளார்[17] டாக்டர் ஒப்பர்ட் (Oppert) அவர்கள் தோடர்கள் பேசும் மொழி தெலுங்கு மொழியின் கிளே மொழி (dialect) என்ருர். ஆனல், அதற்குரிய சான்று களே இல்லே. டாக்டர் மேட்ஜ் (1864) அவர்களும் டாக்டர் போப் (1873) அவர்களும் தோடர்கள் பேசுவது கன்னடமொழியின் ஒரு வகை என்று குறிப்பிட்டுள்ளார் கள். டாக்டர் போப் அவர்கள் தனது கட்டுரையில்

16. S. Sakthivel, The Onge of Little Andaman, Centamil, 1968.

17. Dr. Shrott, An Account of tribes on the Nilgiris, 1868.

தோடா மொழிக்கும் கன்னட மொழிக்குமுள்ள ஒற்றுமை களாகச் சிலவற்றை விளக்கியுள்ளார். [18] டாக்டர் ரிவர்ஸ் (1906) அவர்கள் தோடா மொழி மலையாள மொழியுடன் நெருங்கிய தொடர்புடையது என்றும்தேர்த்தாள், தெவிளி யாள் பெருங்கால்வழியினர்க்கிடையேயுள்ள மொழி வேறுபாட்டையும் (dialectical differences) தனது நூலில் குறிப்பிட்டுள்ளார் [19] கிரேக்க அரசர் பீட்டர் (1949) அவர்கள் சுமேரிய மொழியுடன் தொடர்புபடுத்திக் காட்டு கிறார்.

இம்மொழியில் ஒருமை, பன்மை வேறுபாடு இருப் பினும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதில்லை. தமிழில் இருப்பதைப் போன்று அவன், அவள், அது என்றில் லாமல் எல்லாவற்றிற்கும் "அத்" என்றும் அவர்கள், அவைகள் என்பதற்கு "அதாம்" என்றும் உள்ளன. திராவிட மொழிகளிலே தோடா மொழியிலும் பிராஹுவி மொழியிலும்தான் பால் வேறுபாடு (Gender distinction) கிடையாது. பிராஹுவி மொழியில் இரானிய மொழியின் செல்வாக்குக் காரணமாகப் பால்பாகுபாடு இல்லை. தோடா மொழியில் பால்பாகுபாடு இல்லாமை குறித்துத் தெளிவாக இன்னும் ஆராயப்படவில்லை. [20] கொரியமொழி, ஜப்பா னியமொழி, வங்கமொழி, ஒரியா, மைது, நைலாட்டிக் போன்ற மொழிகளில் எவ்வகையான பால்பாகுபாடும் இல்லை. சில மொழிகளில் ஒரே சொல் சந்தர்ப்பத்திற் கேற்ப ஆண், பெண் பால்களைக் காட்டுகின்றனவேயன்றி

18. W. E. Marshall, A phrenologist amongst the Todas (1873) Appendix: Dr. G. U. Pope, "A Brief outline of the grammer of the Tuda language."

19. W. H, R, Rivers, The Todas, page 687, 1906,

20. M. B. Emeneau, Brahui and Dravidian comparative Grammar, p.56.

ஒரு குறிப்பிட்ட பாலைக் காட்டுவதில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.[21] இம்மொழியில் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் வேறுபாடு இல்லை. பேராசிரியர் எமனோ போன்றோரின் ஆய்வினின்றும்[22] பேராசிரியர் டாக்டர் அகத்தியலிங்கம் மற்றும் இக்கட்டுரையாசிரியர் போன்றோர்களின் ஆய்வினின்றும்[23] தோடர் பேசும் பேச்சு எம்மொழியின் கிளைமொழியுமன்று; அஃதொரு தனி திராவிட மொழியென்றும் அஃது தென் திராவிட மொழியைச் (South Dravidian) சார்ந்தது என்றும் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம்.

பெண்கள் பருவமடைந்தவுடன் தனிக் குடிசையில் வைக்கின்றனர். அமாவாசைக்குப்பின் அவளைக் குளிக்கச் செய்து, தீட்டுக் கழித்து வீட்டிற்கு அழைத்து வருகிறார்கள். அன்று விருந்தும் நடனமும் நடைபெறும். பெண்கள் பருவமடைவதற்கு முன்பே உடல் திண்மைவாய்ந்த ஒருவன் அப்பெண்ணுடன் உடலுறவு கொள்வான். அவர்களது சம்பிரதாயப்படி இஃது நடந்தாக வேண்டும். அவன் அப்பெண்ணை மணந்தாலும் மணக்கலாம்; மணக்காமலும் போகலாம். சமயச் சடங்குகளில் ஒருவன் பெரிய கல்லைத்தூக்கித் தனது உடல்வலிமையைக் காட்டுவான். தமிழர்கள் ஜல்லிக்கட்டில் மாட்டைப் பிடித்து வீரத்தைக் காட்டுவது இங்கு ஒப்பிடற்குரியது. பருவமடைவதற்கு முன் உடலுறவு கொள்வதில் சில தீமைகள் இருக்கின்றன என உடலியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆனால், இப்பழக்கம் இன்று அடியோடு மறைந்துவிட்டது எனலாம்.

---

21. S. Agesthialingom, Grammatical categories, Centamil, 1965, p.237.
22, M. B. Emeneau, Toda, A Dravidian Language, TPS, 1957, 27-34,
23, S, Agesthialingom and S, Sakthivel
Toda Phonology, Journal of the Annamalai University, vol xxvii, 1970, p, 131,

தோடர்களிடையே பெண்குழந்தை பிறந்தவுடனேயே அக்குழந்தைக்கென பையன் ஒருவனை நிச்சயம் செய்து விடுகிறார்கள். இதனை "நிச்சயம் செய்தல்" என்று கூறுவார்கள். அப்பையன் அப்பெண்ணுக்கு வருடா வருடம் துணி கொடுக்கவேண்டும். பெண் வீட்டில் யாரேனும் இறந்துவிட்டால், பலியிடுவதற்கு எருமைகளும் கொடுக்கவேண்டும். அப்பெண் பருவமடைந்தவுடன் அப்பையனையே திருமணம் செய்தாலும் செய்யலாம் அல்லது அப்பெண்ணுக்குப் பிடித்த வாலிபனைக் காதல்செய்து திருமணம் செய்தாலும் செய்யலாம். இளம்வயதில் நிச்சயிக்கப்பட்டவர்களைத்தான் திருமணம் செய்யவேண்டுமென்ற கடப்பாடு ஒன்றுமில்லை. இளம்வயதில் நிச்சயிக்கப்பட்ட பெண் மற்றொருவனை மணந்துகொண்டால், மணந்தவன் முன்னால் நிச்சயமாக்கப்பட்டிருந்தவனுக்கு எருமைகள் கொடுக்கவேண்டும். அதற்கு "தெற்இர்" என்று பெயர். பால்ய விவாகத்தில் பெண்ணுக்குத் துணி கொடுத்து வருங்கால மாமனாரை வணங்குவதுடன் அச்சடங்கு முடிகிறது.

தோடர்களிடையே திருமணம் மிகவும் எளிமையாக நடத்தப்படுகிறது. மணமக்கள் புத்தாடை புனைந்து பெரியோர்கள் காலில் விழுவர். அவர்கள் தங்களது காலைத்தூக்கி நெற்றியில் வைத்து வாழ்த்திப் பணமும் கொடுப்பார்கள். பெரியவர்கள் தண்ணீரும் பூவும் வைத்திருப்பார்கள். அதை எடுத்துக்கொண்டு மணமக்கள் இருவரும் குடிசைக்குள் நுழைவார்கள். அன்று விருந்தும் நடனமும் நடைபெறும்.

பெண் கர்ப்பமடைந்த ஏழாவது மாதம் "வில்லம்புச் சடங்கு" நடத்துகிறார்கள். இச்சடங்கைத்தான் தோடர்கள் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

இச்சடங்கில் வில் அளிக்கின்றவனே அப்பெண்ணுக்கு மரபுப்படி கணவனுகிருன். அவளைக் கட்டியகணவனும் வில் அளிக்கலாம். கணவனுடன் பிறந்த சகோதரரும் அப்பெண்ணுக்கு வில் அளிக்கலாம். வில் அளிக்கின்ற வனே அக்குழந்தைக்கும் அதன்பின் பிறக்கும் குழந் தைக்கும் தந்தையாகிருன். மற்றவர் அப்பெண்ணுக்கு வில்லம்புச் சடங்கு நடத்தும்வரை, இவனே அக்குழந்தை கட்கு மரபுப்படி தந்தையாகிருன். அமாவாசையன்று தான் இச்சடங்கு நடைபெறும். அச்சடங்கன்று தோடர் களனைவரும் அம்மந்தில் கூடுவர். அம்மந்துக்கருகில் உள்ள நாவல்மரத்தில் ஒரு மாடம் செய்து நெய்யிட்டு விளக்கேற்றுகிருர்கள். தானியமும் தேனும் படைக் கின்றனர். சடங்கு ஆரம்பிப்பதற்கு முன், அம்மண மக்கள் அனைவரது காலிலும் விழுந்து வணங்குகிருர்கள். பெரியோர்கள் தங்களது காலைத்தூக்கி அவர்களது நெற்றி யில் வைத்து வாழ்த்திப் பணமும் கொடுக்கிருர்கள். பின்பு இருவரும் விளக்குக்கு முன் அமர்கிருர்கள். மாப்பிள்ளை மரக்கிளையில் வில்லம்பு செய்து பெண்ணுக்கு அளிக்கிருர். வில்லைப் பெற்றுக்கொண்ட அப்பெண், வில்லின் பெயர் என்ன? என்று வினவுவாள். அதற்குக் கணவன் தனது கால்வழியின் பெயரைக் கூறுவான். மூன்றுமுறை கூறிய பின்பு வில்லம்பை மரத்தடியில் வைக்கக் கணவனும் மனைவியும் விளக்கையே உற்றுநோக்குவர். அன்று மாலை வரை அவர்கள் அங்கேயே இருப்பர். தோடர்களனை வரும் வட்டமாக நின்று கொண்டு நடனமாடுகிருர்கள். பின்பு விருந்துடன் அச்சடங்கு முடிவடைகிறது. முதல் முறை கர்ப்பமடைவற்குத்தான் இப்படிப்பட்ட சடங்கு நடைபெறும். கணவன் மாறினுல் மறுபடியும் இச்சடங்கு நடத்தவேண்டும். ஒருமனிதன் ஒருமுறை வில் கொடுத்தால், அவன் இறந்தபின்பும் பல குழந்தை

களுக்குத் தந்தையாகிருன். வில் சடங்கின்றி பிறக்கும் குழந்தைகளை அவமானச் சின்னமாகக்கருதுகிருர்கள். அப்படிப்பட்ட குழந்தைகளைப் ''பொட்மொஹ்'' என்கிருர்கள். அக்காலத்தில் பேறு காலத்திற்கென தனி குடிசை இருந்தது. இப்பொழுது வீட்டில்தான் நடைபெறுகிறது. அதன்பின் ஒரு குறிப்பிட்ட நாளில் தாய் மாமன் குழந்தைக்குப் பெயர் சூட்டுவிழா நடத்துவார். ஆண் குழந்தைகளுக்கு மலை, நதி, மந்து முதலிய பெயர்களையும் பெண் குழந்தைகளுக்கு மலரைக் குறிக்கும் பூவ் என்று முடியும் பெயரையும் வைக்கிருர்கள். ஒரே பெயரையே மீண்டும் மீண்டும் வைப்பதில்லை.

அகமண முறையைப் (endogamous) பின்பற்றினுலும், பல பெண்களை மணத்தலும் பல கணவன்மார்களைப் பெற்றிருத்தலும் தோடா பழங்குடிகளிடையே உண்டு. ஒரே பெண் பல ஆண்களை மணந்துகொள்ளும் வழக்கம் (Polyandry) தியன், தோடா, கோத்தர், காசி, ஜோன் ஸாரி–பாவா போன்ற பழங்குடி மக்களிடையே உண்டு. பலசகோதரர்கள் ஒரே மனைவியுடன் தொடர்பு கொள்ளும் வழக்கம் தோடர்களிடையேயும் அஸ்ஸாமிலுள்ள காசி பழங்குடிகளிடையேயும் உத்தரபிரதேசத்திலுள்ள ஜோன் ஸாரி—பாவா பழங்குடி மக்களிடையேயும் காணலாம். இதனைச் ''சகோதர பல்கணவ மணம்'' என்று கூறுவர். தோடர்களிடையே ஒரு பெண்ணின் கணவன்மார்களனைவரும் சொந்த சகோதரர்களாக இருக்க வேண்டியதில்லை; ஒரே கால்வழியைச் சார்ந்தவர்களாகயிருக்கலாம்.[24] பொதுவாகத் தோடா பழங்குடியில் ஒரு பெண் ஒருவனைத் திருமணஞ் செய்துகொண்டால் ''அவள்'' அவனுக்கு

---

24, D, N, Majumdar & T, N, Madan,
An Introduction to Social Anthropology, Page 84.

மட்டுமின்றி அவனுடன் பிறந்த சகோதரர்களுக்கும் மனைவியாகிறாள். ஏழாவது மாதம் வில் சடங்கு நடத்து கிறவனே பிறக்கும் குழந்தைக்கு மரபுப்படி தந்தையா கிறான். ஒவ்வொரு சகோதரர்களும் தனித்தனியாகப் பெண்களை மணந்துகொண்டாலும் அவர்களைப் பொது வாகவே பயன்படுத்தப்படுவர். காதலன் தனக்கு விருப்ப மான பெண்களுடன் சென்று வருவதும் உண்டு. திரு மணத்திற்கு முன்பும் பின்பும் உடலுறவு கொள்வது சாதாரண விஷயமாகக் கருதப்படுகிறது. ஒருபெண் பல கணவன்மார்களைத் தவிர மற்றவர்களிடமும் தொடர்பு கொள்வதுண்டு. கூடிவாழும் இயல்பு ஆண், பெண் உறவு முறையிலும் காண்கிறோம். மலட்டுத்தனத்துக் காகவோ அல்லது ஒழுக்கக் கேட்டிற்காகவோ விவாக ரத்து செய்வதில்லை. ஒரு பெண் மற்றொருவனை மணந்து கொண்டால் பழைய கணவனுக்குப் புதுக்கணவன் எருமைகள் கொடுக்கவேண்டும். ஒருவர் மற்றொரு வருடைய மனைவியை விலைகொடுத்து வாங்குவது முண்டு. தேர்த்தாலைச் சார்ந்தவர்கள் தெவிளியாள் பெண்களைக் காமக்கிழத்தியாக (தோட்டிவெய் மொஹ்) வைத்துக் கொள்கிறார்கள். தெவிளியாளைச் சாரந்தவர் கள் தேர்த்தாள் பெண்களைக் காமக்கிழத்தியராக வைத் துக் கொள்கிறார்கள். அப்பெண்களின் கணவன்மாரின் சம்மதம்பெற்று, பூத்குளியைப் பரிசளித்து அடிக்கடி அவளிடம் சென்று வருவதுமுண்டு. ஆனால், பிறக்கும் குழந்தைகள் கட்டிய கணவனையே சாரும். தோடா பெண்கள் குறைந்த பட்சம் நான்கு முறையாவது திரு மணம் செய்கிறார்கள். ஒருவர் மனைவியை மற்றவர் அழைத்துச் சென்று மறுமணம் செய்துகொள்கிற நிகழ்ச்சி களைச் சர்வசாதாரணமாகக் காணலாம். இவ்விஷயத்தில் பெண்கள் சுதந்திரப் பறவைகளாகவே வாழ்கிறார்கள்.

தற்பொழுது பல்கணவர்முறை (Polyandry) மறைந்து ''ஒருத்திக்கு ஒருவன்'' என்ற ஒருதார மணமுறை (Monogamy) வேண்டும் என்ற எண்ணம் இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ளது. இதனை மற்றவர்களின் தொடர்பால் ஏற்பட்ட மாற்றம் (Cultural change) எனலாம். ஒருவர் மனைவியை மற்றவர்கள் கொண்டு செல்வதும், அதற்குரிய தண்டனையை எருமையாகக் கொடுப்பதும் இன்றும் சர்வசாதாரணமாக நிகழும் நிகழ்ச்சியாக உள்ளது. மேலும் தோடா பழங்குடியில் தந்தையில்லாத பிள்ளைகளைக் காணமுடியாது. பல்கணவர் மணம் குறைந்து வருகிறது என்பது அண்மையில் நடத்திய களஆய்வினின்றும் (Field-work) தெரிகிறது. விவாகரத்தும் மறுமணமும் சாதாரணமாக நடைபெறுகின்றன. திருமணமாகாமல் இறப்பதைப் பாவமாகக் கருதுகின்றனர். மேலும் கூடாவொழுக்கம் விவாகரத்திற்குக் காரணமாக அமைவதில்லை. தவறான ஒழுக்கம் என்ற கருத்து அவர்களிடையே இருப்பதாகத் தெரியவில்லை. ''விபச்சாரம் தவறான ஒழுக்கம் என்பதற்குப் பதிலாக மனைவியை விருப்பமின்றியோ உட்பகையுடனோ அளிப்பதுதான் தவறான ஒழுக்கம்'' என்று கருதப்படுகின்றது.[25]

தோடர்கள் இறந்தவர்களை எரிக்கின்றனர். ஈமச் சடங்கில் எருமையைப் பலியிடுவதுதான் மிகவும் முக்கியமானது. இரண்டு விதச் சடங்குகளை மேற்கொள்ளுகிறார்கள். இறந்த அன்று செய்யும் சடங்கினைப் பச்சைச் சாவு (எத்வொய் நோள் கெயோடர்) என்றும் அதற்கடுத்து செய்யும் சடங்கினைப் பால்சாவு (மற்வொய் நோள் கெயோடர்) என்றும் கூறுவர். திருமணமாகாமல் ஒருவர்

25. Murdock. Our Primitive Contemporaries (W. H. R, Rivers, The Todas),

இறப்பின், ஈமச்சடங்கன்று அவரது சகோதரனின் மனைவியை அவனது மனைவியாக அழைப்பர். அதைப் போன்று மணமாகாமல் இறக்கும் பெண்ணுக்கு அவளது சகோதரியின் கணவனை, அவளது கணவனாக அழைப்பர்.[26] ஒருவர் இறந்தவுடன் உறவினர் அனைவர்க்கும் சொல்லியனுப்பப்படுகிறது. பெரும்பாலும் இறந்த மறுநாள் (நல்ல நாளாகப் பார்த்து) பிணத்தை எடுக்கிறார்கள். பிணத்தைப் புதுத்துணியால் போர்த்தி அணிகலன்களை அணிவித்து பாடையில் வைக்கிறார்கள். அக்காலத்தில் பிணத்தை அப்படியே பல நாட்கள் வரை வைத்திருந்தார்களாம்.[27] அப்பிணத்தை நான்கு பேர் தூக்கிச்செல்ல அவர்களைத் தொடர்ந்து மற்றவர்கள் செல்கிறார்கள். நாகமரக் கட்டையை அடுக்கி அதன்மீது பிணத்தை வைக்கிறார்கள். பிணத்துடன் இறந்தவர் பயன்படுத்திய பொருட்களையும் வைக்கின்றனர். பிணத்தின்மீது தானியத்தைத் தூவுகிறார்கள். பலியிடுவதற்குரிய எருமையை இளைஞர்கள் இழுத்துவந்து கோடாரியால் அடித்துக் கொல்கிறார்கள். பின்பு கொன்ற எருமையை பிணத்திற்கருகில் கொண்டு வருகிறார்கள். பிணத்தின் வலதுகையை எடுத்து எருமைக்கொம்பில் தொடும்படி செய்கிறார்கள். இறந்தவர் பெண்ணாகயிருப்பின், விரலை மூக்கில் விட்டு எடுக்கிறார்கள். வந்த அனைவரும் எருமையின் கொம்பைத் தொட்டு வணங்குகிறார்கள். இறந்தவரின் நெருங்கிய உறவினரொருவர் இறந்தவரது தலைமுடியைக் கொஞ்சம்வெட்டி பத்திரப்படுத்திக்கொள்கிறார். பிணத்திற்கு உறவினர் தீ மூட்டுகிறார்கள். பிணம் எரியும் வரை அனைவரும் விம்மியழுது கொண்டிருப்பர். எரிந்த

---

26. G. R. Damodaran, A Socio-Economic Survey of the Tribes of the Nilgiris District, 1962, page, 216.
27. J. Shortt, An account of the tribes on the Nilgiris, 1868, pp. 12-16.

பிறகு தண்ணீர் விட்டு அணைத்து எலும்புத்துண்டு ஏதேனும் கிடைத்தால் அதனையும் பத்திரப்படுத்திக்கொள்வர். ஒருகாலத்தில் அனைவரும் மொட்டையடித்து, வேறு மந்துக்கே செல்வதும் உண்டு. சில உணவு விலக்குகளையும் (Food Taboos) மேற்கொள்கிறார்கள். ஈமச் சடங்கில் கலந்துகொண்ட அனைவரும் குளித்துத்தான் வீடு திரும்பவேண்டும்.

இரண்டாவது ஈமச்சடங்கில் முன்னர்செய்த சிலவற்றைத்திரும்பவும் செய்கிறார்கள். இறந்தவன்செல்வந்தனாகயிருப்பின் எருமை மந்தையையே பலியிடுகிறார்கள். அக்காலத்தில் பலியிட்ட எருமையைக் கோத்தர்கட்குக் கொடுத்தனர். எருமை பலியிடுவதை அரசாங்கம் தடை செய்தும் இப்பழக்கம் முற்றிலும் மறைந்துவிடவில்லை. முன்பு வெட்டியமயிர், நகம் முதலியவற்றை எரித்துவிடுகின்றனர். இறந்தவரின் மனைவி சில நாட்களுக்கு முக்காடு போட்டுக்கொண்டிருப்பாள். இவ்விடத்தை மும்முறை வலம் வந்து புதிய மட்குடத்தைப் போட்டு உடைக்கிறார்கள். கொன்றஎருமையை உறவினர்கள் அனைவரும் அழுது புலம்பி முத்தமிடுகின்றனர். ஆண்கள் வட்டமாக நின்றுகொண்டு நடனமாடுகிறார்கள். பெண் உறவினர்கள் இறந்தவரை நினைத்து அழுது புலம்புகின்றனர். சிலர் இறந்தவர்மீது பாட்டுப்பாடுகிறார்கள். எருமைகளைப் பலியிடாவிட்டால் இறந்தவரின் ஆவி இவ்வுலகத்தையே சுற்றும் என்றும் எருமைகளைப் பலியிட்டால் இறந்தவரின் ஆவி மறு உலகிற்குச் செல்லுமென்றும் நம்புகிறார்கள். தோடர்கள் ஈமச்சடங்கில் எருமையைப் பலியிடுவதுபோல, சித்தியர்கள் குதிரையைப் பலியிடுவது இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

அவர்களது தனித்தன்மை எவ்விதத்திலும் பாதிக்கப் படாத முறையில் கூட்டுறவு பாற்பண்ணை முதலியவற்றை ஏற்படுத்தி அவர்களது பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கவேண்டும்.

## நன்றி

இக்கட்டுரை எழுதுவதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்துத் திருத்தங்களும் ஆலோசனைகளையும் கூறிய எனது பேராசிரியர் மொழியியல் பேரறிஞர் டாக்டர் ச. அகத்திய லிங்கம் அவர்களுக்கும் ஆலோசனைகள் கூறிய டாக்டர் செ. வை.சண்முகம் திரு. ந. குமாரசுவாமி இராஜா அவர் களுக்கும் இக்கட்டுரையின் ஆங்கிலப் படியைப் படித்துத் திருத்தங்களும் ஆலோசனைகளையும் கூறிய மானிடவியல் பேரறிஞர் டாக்டர் மாண்டெல்பர்ம் (Dr. D. G. Mandelbaum, Professor of Anthropology, University of California, Berkeley, U. S. A.) அவர்களுக்கும் என் நெஞ்சுநிறை நன்றி உரித்தாகுக!

# 5. இருளர்

ஆர். பெரியாழ்வார், எம். ஏ.

நமது நாட்டில் பலதிறப்பட்ட பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிருர்கள். மானிடவியல் அறிஞர்கள் இவர்களின் பூர்வீகம் பற்றிப் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் காணப்படும் பழங்குடி மக்களில் இருளப் பழங்குடியினரும் ஒரு வகையினர் ஆவர். ''இருளர் என்ற சொல் பல்வேறு சமூகக் குழுக்களைக் குறிக்கும் சொல்லாக தமிழ்நாடு, கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களில் பயன்படுத்தப் படுகிறது. ஆனைமலைப் பகுதியில் அட்டப்பாடியில் வாழும் இருளர்கள் வட்டக்காட இருளர் என அழைக்கப்படுகின்றனர். நீலகிரி மாவட்டத்திலுள்ள இருளர்கள் மலை நாடு அல்லது மலைதேச இருளர்கள் என்று அழைக்கப் படுகின்றனர்.''[1]

'கேரளப் பழங்குடிகள்' (Tribes of Kerala) என்ற நூலில் A. A. D. லூயிஸ் இருளர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிருர். ''இருளர்கள் பாலக்காடு மாவட்டத்திலுள்ள பொதுப்பர, மாயமுடி, பாலக்கபாண்டி, கும்பளம், நெல்லியம்பதி, சித்தூர், கொரவண்டி, கவுந்திக்கல், மத்துக்காடு, அட்டப்பாடி, வாளையாறு ஆகிய பகுதிகளில் காணப்படுகிருர்கள்''[2] 1961 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் கேரளத்திலுள்ள இருளர்பற்றிய குறிப்பு காணப்படவில்லை. இதுபற்றிய உண்மை நிலை பெரும் கேள்விக்குறியாக உள்ளது.

இருளமொழி ஆய்வின்போது நான் செஞ்சிமலைப் பகுதியிலும் திண்டிவனம் வட்டத்திலுள்ள சில ஊர்களிலும் இவர்களைக் காண நேர்ந்தது. இவர்கள் வில்லிகள் என்று அழைக்கப்படுகின்றனர். சிலர் இவர்களை இருளர் என்றும் கூறுகின்றனர். இவர்கள் கருப்பு நிறமும் நடுத்தர உயரமும் உடையவர்களாக இருக்கிறார்கள். தமிழ் மொழியே பேசுகிறார்கள். இவர்கள் பழங்குடிப் பண்புகளை இழந்துவிட்டனர். இவர்களிடம் நீலகிரி இருளர்களுடன் ஒப்பிடும் வகையில் பழங்குடிப் பண்பு (Tribal features) ஒன்றுகூட இல்லை. நீலகிரி மாவட்டத்திலுள்ள இருளர்களிடம் இருக்கும் பழக்க வழக்கங்களும் இல்லை. இவர்தம் உடலின் நிறமும் மூக்கு அமைப்பும் நீலகிரி இருளர்களை ஓரளவிற்கு நினைவுபடுத்துகின்றன. இவர்களில் சிலர் மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் குடிசைகளிலும் வாழ, சிலர் மடங்களில் வாழ்கிறார்கள். திண்டிவனம் மற்றும் செஞ்சி வட்டங்களில் சில ஊர்களில் இவர்கள் வசிக்கின்றனர்.

1961ஆம் ஆண்டு இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களின்படி இந்தியாவில் 4124 இருளர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் 4095 இருளர்களும், மைசூர் மாநிலத்தில் 29 இருளர்களும் உள்ளனர். தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் 3958 இருளர்களும் கோவை மாவட்டத்தில் 84 இருளர்களும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 30 இருளர்களும் வட ஆற்காடு மாவட்டத்தில் 5 இருளர்களும், சேலம் மாவட்டத்தில் 18 இருளர்களும் உள்ளனர்.[8]

கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் வட்டத்தில் கல்லாறு, நெல்லித்துறை, தூரிப்பாலம் ஆகிய ஊர்களில் இருளர்கள் இருக்கிறார்கள். இருள இனத்தில் இருசாதி உட்பிரிவுகள் உள்ளன. இருளர் என்றும் இருளப்பள்ளர்

என்றும் அப்பிரிவுகளுக்குப் பெயர். மேட்டுப்பாளையம் வட்டத்திலும் நீலகிரியிலும் இருளப்பள்ளர்களும் இருளரும் உள்ளனர். இருளப்பள்ளர் என்னும் சாதியினர் எண்ணிக்கையில் மிக மிகக் குறைவு. இருளருக்கும் இருளப்பள்ளருக்கும் கொள்வினை கொடுப்பினை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. தம்மை உயர்ந்த இனத்தவராகவும் இருளப் பள்ளர்களைத் தாழ்ந்த இனத்தவராகவும் இருளர்கள் கருதுகின்றனர்.

1962இல் கோவை பூ. சா. கோ. சமூகப்பணி பள்ளியினர் எடுத்த நீலகிரிப் பழங்குடி மக்களின் சமூகப் பொருளாதார ஆய்வுக்கணக்குப்படி நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் வட்டத்தில் 33 சிற்றூர்களில் 4,072 இருளர்கள் வாழ்வதாகத் தெரிகிறது. இந்த ஊர்களில் பெரும் பாலானவை கோத்தகிரி ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் வட்டத்தில் இவர்கள் வாழ்கிறார்கள். அன்னைபாலம், கெரெடுமட்டம், சின்னாலகொம்பை, அல்லிமாயர், கல்லம்பாளையம், தேனாடு, அரக்கோடுகரிக்கையூர், பங்களாப்படிகை, கோத்திமொக்கெ, தோடியூர், வின்ஸ்டர் எஸ்டேட், பாலிக்கரை, கடினமல, கண்டிபட்டி, பரசகரை, அந்தியூரை, மெட்டுக்கல், குடகூர், செம்பனூரை, கோலிக்கரை, கீழ்கூப்புக்காடு, மேல்கூப்புக்காடு, சீகபெட்டு, குஞ்சப்பனை, அட்டாடி, தாளமொக்கை, கொப்பையூர், வாகப்பனை, தும்பிபெட்ட, கொக்கோடு, ஈச்சொரை, சுண்டபட்டி, கரிக்கட்டி, முதலிய ஊர்களில் இவர்கள் வாழ்கிறார்கள்.[4] நீலகிரி இருளர்களை இருளமொழி ஆய்வின் போது நேரில் கண்டேன். அவர்களுடைய சமூக பழக்க வழக்கங்கள் (Social customs) விழாக்கள் (Festivals) ஆகியவற்றைக் கண்டு அறியும் வாய்ப்புப் பெற்றேன்.

இருள ஆண்கள் வேட்டி, சட்டை அணிகிறார்கள். பெண்கள் புடவையை வேட்டி போன்று மார்பகத்தின் மேல் கட்டியுள்ளார்கள். இளம் தலைமுறையினர் புடவை, ஜாக்கட்டு அணிந்துள்ளார்கள்.

**உணவு:** இவர்கள் பட்டினி கிடப்பதைக் பற்றிக் கவலைப்படுவதில்லை. பெரும்பாலோர் ஒரு நாளைக்கு இரு முறையே உணவு உட்கொள்கின்றனர். அரிசி உணவையே விரும்பி உட்கொள்கின்றனர். இவர்கள் வாழும் மலைப் பகுதியில் ஏராளமாகப் பலாப்பழம் கிடைக்கிறது. வேலை செய்யும் இடங்களில் கிடைக்கும் பலாப்பழங்களை நண்பகல் உணவாகக் கொள்கின்றனர். பலாப்பழத்தை விட பழுக்கும் தறுவாயில் உள்ள பலாக்காயையே விரும்பி உண்கிறார்கள். பலாக்காயைப் பச்சையாகவும், அவித்தும் சாப்பிடுகிறார்கள். வனத்துறையினரிடமிருந்து பெற்ற மலை நிலத்தில் விளைந்த தினை, கேழ்வரகு, மொச்சை இவற்றையும் உட்கொள்கின்றனர். பலாக்கொட்டைகளைத் துவையலாக அரைத்தும் குழம்பாகக் காய்ச்சியும் உணவிற்குப் பயன்படுத்துகிறார்கள்.

இவர்கள் புலால் உண்ணும் பழக்கம் உடையவர்கள். பெரும்பாலும் இவர்கள் வேட்டைக்குச் செல்வதில்லை. காட்டுப்பன்றி, மான், முயல், ஆடு, மீன், ஆகியவற்றின் கறியை உண்கிறார்கள். மாடு, பன்றி, எலி இவைகளின் இறைச்சியை உண்பதில்லை. தினை, கேழ்வரகு இவற்றைக் களியாகக் கிண்டி உண்கிறார்கள். சனிக்கிழமை தோறும் வாங்கும் ஊதியத்தைக் கொண்டு குடிக்கிறார்கள்.

**வீடு:** இவர்களின் வீடுகள் மலைக்காடுகளின் நடுவே உள்ளன. எல்லாவீடுகளும் ஒரே இடத்தில் இல்லை. தங்களுடைய நிலத்தில் வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்

கின்றனர். மலைப்பகுதிகளில் கிடைக்கும் பொருள்களை வைத்தே இவர்கள் வீடுகளை அமைத்துக் கொள்கின்றனர். மூங்கில் தப்பைகள் வைத்து அதன்மீது மண் சுவர் வைக்கப்படுகிறது. மண், மூங்கில் இவைகளால் சுவர்கள் கட்டப்பட்டு மேல்கூரைப் பகுதியை மலைப்பகுதிகளில் கிடைக்கும் பாம்பே புல், கோயி வகைப் புல் என்ற இரு வகைப் புற்களில் எதையாவது ஒன்றைப் பயன்படுத்தி வேய்கின்றனர். மலையில் கிடைக்கும் ஒருவகைக் கொடியை கூரைவேயும் பொழுது கட்டுவதற்குப் பயன் படுத்துகிறார்கள். வீட்டை இவர்கள் மொழியில் 'கூரே' என்று அழைக்கின்றனர். இப்பொழுது சில ஊர்களில் அரசினர் வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளனர். அந்த வீடுகள் வரிசையாக அமைந்து உள்ளன.

தொழில்: இவர்களில் பெரும்பாலோருக்கு அரசு நிலம் கொடுத்துள்ளது. அதில் பயிர் செய்யும் உரிமை மட்டுமே இவர்களுக்கு உண்டு. இந்த நிலத்தைக் கந்தயபூமி என்றழைக்கின்றனர். இந்த நிலத்தில் கொய்யா, பலா, மாதுளை போன்ற மரங்களும் காப்பிச்செடியும் உள்ளன. இவற்றைச் சரியாகப் பார்த்து நல்லமுறையில் பயிரிடுவதில்லை. அந்நிலத்தில் உள்ள மரங்களைப் பிறருக்குக் குத்தகைக்குவிட்டு விடுகின்றனர். இருள ஆண், பெண் அனைவரும் தோட்டங்களில் வேலை செய்யும் கூலிகளே. பெரும்பாலோர் வாரம்முழுவதும் வேலைக்குச் செல்வதில்லை இருளர்களில் சிலர் மலைப்பகுதிகளில் கிடைக்கும் மூங்கிலைக் கொண்டு கூடை, துடைப்பம் முதலியவற்றைத் தயார் செய்து சந்தைகளில் விற்றுப் பொருள் ஈட்டுகிறார்கள். சிலர் மலைப்பகுதிப் பள்ளத்தாக்குகளில் தினை, கேழ்வரகு, மொச்சை இவற்றை விளைவிக்கின்றனர். மேட்டுப் பாளையம் பகுதியிலுள்ள கல்லாறு, நெல்லித்துறை, தூரிப்

பாலம், பகுதியிலுள்ள இருளர்கள் பாக்குத்தோப்புகளைக் காவல் காத்துக்கொண்டு அவற்றுக்குத் தண்ணீர் பாய்ச்சும் கூலிகளாக இருக்கிறார்கள். சிலர் தேன் எடுக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். அதை விற்றுப் பணம் பெறுகிறார்கள். ஒருசிலர் செம்மறிஆடும், மாடும் வளர்க்கிறார்கள்.

மொழி: இவர்கள் பேசும் மொழி இருளமொழி. இது தென் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. இந்த மொழியில் தமிழ், கன்னடம், மலையாள மொழிகளின் இலக்கணக் கூறுகள் காணக்கிடக்கின்றன. இவர்கள் பேசுவது தனிமொழியா? (Language) அல்லது கிளை மொழியா? (Dialect) என்பதை ஆராய்ந்து கூறவேண்டிய நிலையில் உள்ளது. காட்டாக, இம்மொழியில் காணப்படும் காரணவினை (Causative) ஏவல்வினை (Imperative) ஆகியவற்றைக் கொண்டும் இன்னும் வேறுசில இலக்கண அமைப்புக்களைக் கொண்டும் பார்க்கும்பொழுது இதனை ஒரு தனிமொழியாகக் கருதத் தோன்றுகிறது.[5]

நீலகிரி மாவட்டத்தில் இருளர்களால் பேசப்படும் மொழியில் பேச்சு வேறுபாடுகள் (Dialect Differences) சொற்கள் அளவில் உள்ளன. குஞ்சப்பனைப் பகுதியில் பேசப்படும் இருளமொழியிலும் அரக்கோடு என்றழைக்கப்படும் கீழ்கோத்தகிரி சோலூர் மட்டம் பகுதியிலுள்ள ஊர்களில் பேசப்படும் இருளமொழியிலும் வழங்கும் சொற்களில் வேறுபாட்டைக் காணலாம். முதியவர்களைவிட இளைஞர்கள் தமிழை மிகுதியாகக் கலந்து இருள மொழியைப் பேசுகிறார்கள். படகர்களுடனும் குறும்பர்களுடனும் இவர்கள் நெருங்கிப் பழகுவதால் அந்த மொழிகளின் சொற்கள் இவர்கள் மொழியில் கலந்துள்ளன.

இம்மொழியிலுள்ள காரணவினை, ஏவல்வினை வடிவங்கள் பின்வருமாறு.

காரணவினை:

| | |
|---|---|
| அடிப்பிசினெ | 'அடிப்பித்தேன்' |
| நடப்பிசினெ | 'நடப்பித்தேன்' |
| தரவிசினெ | 'திறப்பித்தேன்' |
| ஓட்டுசினெ | 'ஓட்டுவித்தேன்' |

ஏவல்வினை:

| ஒருமை | பொருள் | பன்மை | பொருள் |
|---|---|---|---|
| வா | 'வா' | வாயி | 'வாருங்கள்' |
| தா | 'தா' | தாயி | 'தாருங்கள்' |
| சொல்லு | 'சொல்' | சொல்லி | 'சொல்லுங்கள்' |
| இரு | 'இரு' | இருவி | 'இருங்கள்' |
| குடி | 'குடி' | குடிவி | 'குடியுங்கள்' |
| நில்லு | 'நில்' | நில்லி | 'நில்லுங்கள்' |

சொல்லாட்சி: இருள மொழிக்கே சிறப்பாக உரிய சில சொற்கள்:

| | | | |
|---|---|---|---|
| ரொங்கு | 'உறங்கு' | ணே | 'அணை' |
| இண்டு | 'பிழி' | ஊ | 'விழு' |
| ராக்கு | 'இறக்கு' | ருட்டு | 'உருட்டு' |
| ரப்பு | 'நிரப்பு' | லே | 'அழை' |
| டே | 'உடை' | மணி | 'பேசு' |
| கீசு | 'சீவு' | ஏ | 'அழு' |
| ராங்கு | 'இரங்கு' | ருள்ளு | 'உருள்' |
| ரம்பு | 'நிரம்பு' | நேலங்கெ | 'நாக்கு' |
| டக்கெ | 'பாக்கு' | வக்கு | 'வளை' |

| | | | |
|---|---|---|---|
| கீ | 'கிழி' | லக்கெ | 'உலக்கை' |
| மெக்கு | 'மெழுகு' | ரொக்கு | 'உறக்கம்' |
| கீகெ | 'கீழே' | | |

**இலக்கியம்:** இவர்களது இலக்கியம் எழுதப்படாத நாட்டுப்பாடல்களே ஆகும். இவர்கள் மற்ற பழங்குடி மக்கள் போலவே இசை இன்பத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டுளார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் இசையினைப் பயன்படுத்துவதுண்டு.

இவர்களில் பெரும்பாலோர்க்குப் பாடத் தெரியும். சிறிது படித்தபெண்களுக்கும் வாலிபர்களுக்கும் தங்களுடைய பாடல்கள்மீது நாட்டமில்லை. படிக்காதவர்களும் வயதுவந்த பெண்களும் முதியவர்களும் தமது ஆடல் பாடல்களில் நாட்டம் கொண்டுள்ளனர். பெரும்பாலான பாடல்களில் ஒவ்வொரு அடியின் முன்பகுதியும் மரம், செடி, மலர் இவற்றின் பெயரைக் கொண்டே அமைந்துள்ளது. பல பாடல்கள் காதல்பற்றியனவாகவும், சில பாடல்கள் இயற்கை வர்ணனையாகவும் உள்ளன. இவர்களுடைய இசைப்பாடல்களில் பேப்பாட்டு, தினைப் பாட்டு என இருவகைகள் உள்ளன.

**இசைக்கருவிகள்:** இருளர்கள் பயன்படுத்தும் இசைக் கருவிகளைத் தோற்கருவிகள், துளைக்கருவிகள் என்று இரு வகைகளாகப் பிரிக்கலாம். இவர்கள் பயன்படுத்தும் இசைக்கருவிகளில் கடிமெ, பொரெ, தம்பட்டெ ஆகியவை தோற்கருவிகள். குவாலு, புகிரி, நாகசுர ஆகியவை துளைக்கருவிகள். திருமணத்திலும் ஈமச் சடங்கிலும், திருவிழாக்களிலும் இசைக்கருவிகளை இசைக்கின்றனர்.[6]

**கல்வி:** மாநில அரசினர் இவர்களுக்குப் பள்ளிகள் (Tribal Residentital Schools) அமைத்துள்ளனர். கரிக்கையூர், குஞ்சப்பனே, மெட்டுக்கல், அரவேனு போன்ற இடங்களில் பள்ளிகள் உள்ளன. இந்தப் பள்ளிகள் கல்விகற்றுக் கொடுப்பதிலும் அவர்களின் எதிர்கால வாழ்வை அமைத்துக் கொடுப்பதிலும் அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கவில்லே. இருளர்களில் சிலர் எட்டாவ்து, ஒன்பதாவதுவகுப்புவரை படித்துத் தேர்வில் தோல்வி அடைந்து தோட்டங்களில் வேலே செய்கின்றனர். சிலர் தொழிற்பயிற்சிப் பள்ளியில், மரவேலே, இரும்புவேலே போன்றவற்றில்பயிற்சி பெற்றுள்ளார்கள். அப்படியிருந்தும் மரவேலேயோ, கொல்லு வேலேயோ செய்ய வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால், தோட்டங்களில் வேலேசெய்கிருர்கள்.

**மருத்துவம்:** சில ஆண்டுகளுக்கு முன்னர் நீலகிரி மலேயிலுள்ள இருளப் பழங்குடியினர் நோய்வாய்ப்பட்டால் அந்நோயை மந்திரம் போட்டுப் போக்கிவிடலாம் என்ற நம்பிக்கையில் இருந்தனர். சித்த மருத்துவ முறைகூடத் தெரியாது. 30 ஆண்டுகளுக்கு முன் கோத்தகிரி டாக்டர் எஸ். நரசிம்மன் அவர்களின் கவனம் நீலகிரிப் பழங்குடியினர்பால் திரும்பியது. அன்றுமுதல் இருளர் வசிக்கும், மலேநடுவே இருக்கும் கோலிக்கரை என்ற ஊருக்குச் சென்று இலவசமாக மருத்துவம் பார்க்கத் தொடங்கிஞர். இப்பொழுது கோலிக்கரையிலும், அரையூரிலும் இரு இலவச மருத்துவ மனேகளே டாக்டர் நரசிம்மன் அவர்கள் நீலகிரி ஆதிவாசி நலச் சங்கம் என்ற நிறுவனத்தின் மூலம் கட்டியுள்ளார்.

**பழக்கவழக்கங்கள்:** இருளர்கள் விருந்திற்குச் செல்லும் பொழுதும், வேறு நகருக்குச் செல்லும்பொழுதும் தோட்ட வேலைக்குச் செல்லும் பொழுதும் கணவனும் மனைவியும் சேர்ந்தே செல்கின்றனர். வாரத்தில் ஓய்வாக இருக்கும் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைகளில்தான் குளிக்கச் செல்கிறார்கள். குழந்தைகளையும் மனைவியையும் ஆற்றுக்கு அழைத்துச்சென்று குளிப்பர்.

வீட்டிற்கு விலக்கு (Menses) ஆன பெண்கள் வீட்டிற்கு வெளியே உள்ள தாழ்வாரத்தில் 5 நாட்கள் தங்குவர். இவர்கள் வீட்டிற்கு வெளியே இருக்கும்போது அவர்தம் கணவன்மார்கள் உணவு சமைத்துத் தருவர். ஐந்து நாட்கள் கழித்து. நீராடிவிட்டுத்தான் அவள் வீட்டிற்குள் வந்து சமையல் செய்கிறாள். இந்தப் பழக்கத்தைக் கடைப் பிடிப்பதில் எல்லா இருளர்களும் மிகக் கண்டிப்பாக இருக்கிறார்கள்.

விருந்து கொடுக்கும் உறவினர் வீட்டில் தானியம் (கேழ்வரகு, சாமை, தினை, மொச்சை) விளைந்திருப்பின் வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது அவர்களால் முடிந்த அளவு தானியங்களை அவர்களுக்குக்கொடுத்தனுப்ப வேண்டும். விருந்தினர் திரும்பி ஊருக்குச் செல்லும்பொழுது வாய்ப்பும் வசதியும் படைத்தவர்கள் இவ்வாறு கொடுத்து அனுப்பாவிடில் விருந்தினர்கள் விருந்து கொடுத்தவர்களை இகழ்வாகப் பேசுவார்கள். திருமணம் போன்ற விழாக்களில் விருந்தினர்க்கு நல்விருந்து படைக்கிறார்கள். வந்தவர்களெல்லாம் வெளியில் அமர்ந்து உண்பர். இவர்கள் மொழியில் விருந்தை ''பருவ'' என்றழைக்கின்றனர். விருந்தினர்கள் முதியவர்களாக இருப்பின் அவர்களைக் காலைத்தொட்டு வணங்குவர்.

மணமாகாத பெண்கள் இளைஞரிடம் வெற்றிலை பாக்கு வாங்கிப் போட்டுக் கொள்வது வழக்கம். அவ்வாறு ஒரு பெண் ஒரு இளைஞனிடம் வெற்றிலை வாங்கிப் போட்டுக் கொள்வதைப் பார்த்தவுடன், அவர்களிடையே காதல் உறவு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்கிறார்கள். இதைப் பெண்ணின் பெற்றோர்கள் கண்டிக்கிறார்கள்.

வயது முதிர்ந்த இருளப்பெண்கள் நெற்றியிலும் கை கால்களிலும் பச்சை குத்திக் கொள்கிறார்கள். இளம் பெண்கள் இப்பொழுது முதியவர்களைப்போன்று நெற்றியில் பச்சை குத்திக் கொள்வதில்லை. கொரக்கெ சங்கிலி என்ற ஒருவகை வெள்ளிச்சங்கிலியையோ அல்லது இரும்பால் செய்யப்பட்ட ஒருவகை அணியையோ அணிந்து கொள்கின்றனர். முதியவர்கள் பாசிமணிகளையும் அணிந்திருக்கின்றனர்.

இருளர்கள் இரவில் செல்லும்பொழுது ஆமணக்கு இலைத் தண்டைப் போன்ற பச்சையான ஒரு செடியின் தண்டில் மண்ணெண்ணையோ அல்லது மற்ற எண்ணையோ ஊற்றி அதில் திரியிட்டு எரிய வைத்து எடுத்துச் செல்கின்றனர். இதைச் "சூட்டெ" என்று இவர்கள் மொழியில் கூறுகின்றனர். இவர்கள் நடப்பதற்குச் சலிப்பதில்லை. மலைப்பகுதிகளில் நீண்டதூரம் இரவிலும் நடந்து செல்கின்றனர்.

குறும்பரைக்கண்டால் இருளருக்கு அச்சம். அவர்கள் பில்லி, சூனியம், மந்திரம் தெரிந்தவர்கள் என்ற எண்ணம் இருளரிடம் உண்டு. ஓரளவு இது உண்மையே. குறும்பர்கள் இவர்களுடைய திருமணத்தில் பங்குகொண்டு விருந்து உண்பர். விழாக்களுக்கு வரும் குறும்பர்கள் இருளர்களுடன் சேர்ந்து நன்றாகக் குடித்துவிட்டுக் கூத்

தாடுவர். இருளர்கள் குறும்பர் வீட்டில் உணவு உட்கொள்வதில்லே. பண்டைக் காலத்தில் இருளர்கள் தம் இனத்தவரைத் தவிர மற்ற இனத்தவர் வீடுகளில் உணவு உட்கொள்ளாதிருந்தனர். இப்பொழுதும் சில இருளப் பெண்கள் பிற இனத்தவர் வீட்டில் உணவு உட்கொள்வதில்லே. இருளர் வீட்டில் யாராவது இறந்துவிட்டால் குறும்பர்கள்வருகிருர்கள். இரண்டாம் சீர் செய்கின்றபோது ஈமச் சடங்கைச் செய்தவனுக்காகக் குறும்பனே பண்டைக் காலத்தில் தலேமுடியை மழித்துக்கொண்டான். இப்பொழுது தலே மழித்துக்கொள்வதை இவர்களே செய்துகொள்கிருர்கள். ஆனுல் குறும்பர்கள் இப்பொழுதும் திருமணத்திற்கும் சாவிற்கும், தொகவிடுதலுக்கும் (சாமி கும்பிடும் விழாவிற்கும்) வந்து கலந்து கொள்கிருர்கள்.

**சமயமும் வழிபாடும்:** ''அப்ப'' (abba) என்ருல் இவர்கள் மொழியில் திருவிழா என்று பொருள்படும். இவர்கள் அரக்கோடு பகுதியில் கரிக்கையூர் அருகிலுள்ள ரங்கசாமி மலே அல்லது பாலமலேயிலுள்ள ரங்கசாமியையும் காரமடை ரங்கசாமியையும் வழிபடுகிருர்கள். காரமடை ரங்கசாமியின் தேர்த்திருவிழாவிற்குச் செல்லுகிருர்கள். இவர்கள் தைப்பொங்கலேத் ''தை அப்ப'' என்று கூறி மிகச் சீரோடும் சிறப்போடும் கொண்டாடுகிருர்கள். தைப் பொங்கல் திருநாளில் புதுத்துணிகள் அணிந்து உள்ளக் களிப்புடன் திகழ்கிருர்கள். ஏன் தைப் பொங்கலே மட்டும் சிறப்புடன் கொண்டாடுகிருர்கள் என்பது தெரியவில்லே. இதைத்தவிர தொகவிடுவது என்று மாரியம்மனேக் கொண்டாடுகிருர்கள். வைணவம், சைவம் என்ற பாகுபாடு இவர்களுக்குத் தெரியாதவொன்று. பெரும்பாலான ஊர்களில் மாரியம்மன் கோவில்கள் உள்ளன. இந்தக் கோயில்கள் கட்டடங்களாக இல்லே. ஊரிலுள்ள அனேவரும் சேர்ந்து பண வசூல் செய்து மாரியம்மனுக்கு

விழாவெடுக்கின்றனர். இவ்வாறு விழாவெடுத்துக் கொண்டாடுவதையே தொகவிடுவது என்று கூறுகிறார்கள். விழாக் கொண்டாடும் அன்று காட்டில் கிடைக்கும குறிப்பிட்ட வகை இலைகளைக்கொண்டு பந்தல் போட்டுக் கொள்கிறார்கள். மாரியம்மன் திருவிழாக்கொண்டாடும் நாட்களில் மாரியம்மனுக்கு ஆட்டுக்கிடா, கோழி, போன்றவற்றைப் பலிகொடுக்கிறார்கள். பொங்கல் இடுகிறார்கள். தனிப்பட்டவர்களும் ''தொகவிடுகிறார்கள்''. தனிப்பட்ட இருளர்கள் கிடாவை நேர்த்திக்கடனாக வளர்க்கிறார்கள். ஆடு பெரிது ஆனபின்பு பணவசதி தேடிக்கொண்டு அந்த மாரியம்மன் கோவில் ஆட்டைப் பலி கொடுத்துப் பொங்கல் இடுகிறார்கள். பலியிட்ட ஆட்டின் இறைச்சியை மற்றவர்களுக்கும் கொடுக்கிறார்கள்.

**பூப்புவிழா:** இருளப்பெண் பூப்பெய்திய ஏழாவது நாள் அன்று ஒரு விழா கொண்டாடுகிறார்கள். அந்த விழாவை இவர்கள் மொழியில் ''நெரே அப்ப'' என அழைக்கின்றனர். பெண் பூப்பெய்தும் நிகழ்வை ''வசக்கு ஆயிட்ட'' என்று இவர்கள் மொழியில் கூறுகிறார்கள். பூப்பெய்திய பெண் ஏழு நாட்கள் தங்குவதற்கு வீட்டின் முன்னால் குடிசை ஒன்றை அப்பெண்ணின் தமக்கையின் கணவன் (பாவெ) (Ba:vɛ) கட்டிக்கொடுக்கவேண்டும். அந்தக்குடிசை வேப்பிலைகளோ அல்லது வேறு இலைகளோ கொண்டு கட்டப்படுகிறது. அந்தக் குடிசையில் அவளுச்குத் துணையாக முதியவளோ அல்லது சின்னப் பெண்ணோ துணை இருக்கிறாள். பெண் பூப்பெய்தியவுடன் தாய்மாமன் முதலில் எண்ணை தடவி விடவேண்டும். பின்பு அணிகலன்களை போட்டு அணிவிக்கிறார்கள். அக்குடிசையில் தங்கியுள்ள காலத்தில் மிக விழிப்புடன் வெளியே சென்று திரும்ப வேண்டும்.

கருடன், கழுகு, பறவைகளின் நிழல் அவள் குளித்து விட்டு வரும் பொழுது அல்லது போகும் பொழுது அவள் மீதோ அவள் துணிகள் மீதோ விழக்கூடாது. இவ் வகையில் மிகமிக விழிப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வர்.

ஏழாம்நாள் அந்தக் குடிசையைத் தமக்கையின் கணவன் அல்லது தாய்மாமன் எரித்து விடுவான் அன்று அவர்கள் வீட்டை மிக நன்ருகச் சுத்தம் செய் கிருர்கள். ஏழாம்நாள்தான் ''நெரெஅப்ப'' என்ற விழா வைக் கொண்டாடும் நாள். பூப்பெய்திய பெண்ணை ஆற்றுக்கு அழைத்துச் செல்கிருர்கள். அவள் ஆற்றில் குளித்துவிட்டு வீட்டுக்கு வருகிருள். அவள் வீட்டிற்கு வந்து தன் கைகால்களிலுள்ள நகங்களை வெட்டி எறிவாள். அன்றுமாலை விருந்து ஒன்று தயார் செய் கிருர்கள். உணவு தயார் ஆகிக் கொண்டிருக்கும்பொழுது ஊரிலுள்ள எல்லோருடைய வீட்டிற்கும் சென்று பூப் பெய்திய பெண்ணை வீட்டில் சேர்த்துக்கொள்ளும் ''நெரே அப்ப'' கொண்டாடப்போகிருேம் அதற்கு வாருங்கள் என்று எல்லோரையும் அழைக்கின்றனர். ஊர் மக்கள் வந்து சேர்ந்ததும் ஜாத்தி என்ற பெரிய மனிதன் வரு கிருன். ஜாத்தி என்பவன் திருமணம் மற்றும் பிள்ளைக்குப் பெயரிடுதல் போன்ற விழாக்களை நடத்திவைக்கும் பெரியமனிதன். ஜாத்திக்காரன் விழா கொண்டாடுபவர் களுக்கு சம்மந்தகாரனுக இருக்கவேண்டும். அவ னிடம் ஒரு செம்பில் தண்ணீரும் ஒருவகைப் பட்டை யும், தேங்காயும் நாலணு காணிக்கையும் கொடுக்கிருர்கள் அவன் அந்தப் பொருள்களை எடுத்துக்கொண்டு ஆற்றங் கரைக்குச் சென்று கடவுளை வணங்கித் தேங்காய் உடைத் துப் பட்டையை அரைத்துத் தண்ணீரில் கலந்துகொண்டு வருகிருன். கொண்டுவந்தவுடன் அந்தத் தீர்த்தத் தண்

ணீரைப் பூப்பெய்திய பெண்ணுக்குத் தருகிறான். அந்தத் தீர்த்த நீரைக் குடித்தபின் அவளுக்குப் புது உடைகளும் நகைகளும் அணிவிக்கிறார்கள். அலங்கரித்தபின் நடுவீட்டில் பாய்விரித்து அவளையும் மற்றொரு பிள்ளையையும் அமரச் செய்கிறார்கள்.

முதலில் தாய்மாமன் நெற்றியில் எண்ணெய்யால் பொட்டிட்டு வாழ்த்துகிறான். பூப்பெய்திய பெண் அவன் காலில் விழுந்து வாழ்த்துப் பெறுகிறாள். எரிந்த விளக்கு எரிவதுபோல விரித்த பாய் விரித்திருப்பதுபோல வாழ வேண்டும் என்றும், அத்திக்காய், பலாக்காய், வாழைக் காய், பீயத்திக்காய் ஏராளமாகக் காய்ப்பது போன்று அவளுக்கு பிள்ளைகள் அதிகம் பிறக்கட்டும் என்றும் வாழ்த்துகிறான். இதன்பின் ஜாத்தியும் தந்தை தாய் அண்ணன், அண்ணி, மச்சான், பெரியோர்கள் உறவினர்கள் ஆகியோர் எண்ணெயைத் தொட்டு நெற்றியில் பொட்டு இட்டு வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்து முடிந்தவுடன் தாய்மாமனையும் ஜாத்திக்காரனையும் ஏழு பிரிவுகளைச் சேர்ந்த இருளர்களையும் நடு வீட்டில் அமரச்செய்து உணவு படைக்கிறார்கள். மாப்பிள்ளை முறைக்காரர்கள்தான் இவர்களுக்கு உணவு பரிமாறுகிறார்கள். அவர்கள் உண்ணும் உணவில் தாய்மாமன்வாழ்த்தில் உவமையாகப் பயன்படுத்திய காய்களின் பொறியல்கள் இருக்கும். சாப்பிட்டு முடிந்தவுடன் தாய்மாமனும் ஜாத்தியும் கைகழுவிய எச்சில் நீரை பூப்பெய்திய பெண் கைகளில் பிடித்துக் மூன்று மடக்கு குடிப்பாள். தாய்மாமன், ஜாத்திக்காரன், ஏழு பிரிவைச் சேர்ந்த இருளர்கள் ஆகியோர் உண்ட எச்சில் இலைகளையும் பூப்பெய்திய பெண் எடுத்து வெளியில் எறிவாள். அதன் பின்னர் விருந்தினர்களுக்கு விருந்து படைக்கப்படுகிறது.

**திருமணம்:** இவர்கள் மொழியில் திருமணத்தை ''மதுவெ'' (maduve) என்று அழைக்கின்றனர். ''பெண்டு சேருகது'' என்றும் கூறுகின்றார்கள். பண்டைக் காலத்தில் திருமணம் ஒரு விழாவாக நடைபெறவில்லை. உள்ளம் ஒருங்கிணைந்த ஆடவனும் பெண்ணும் காட்டிற்கு ஓடி ஓரிரு நாட்கள் இருந்துவிட்டு வந்து விட்டால் அதன்பின் அவர்களைத் தம்பதிகளாக ஏற்றுக்கொண்டு பெரியோர்கள் வாழ்த்துவது வழக்கமாய் இருந்தது.

**மணவகைகள்:** மாப்பிள்ளையின் தாய்தந்தையர் பெண்ணை நேரில் பார்த்துப் பெண் வீட்டாரிடம் கேட்டு மணம் முடிப்பது ஒரு மரபு. மற்றொரு மரபு மாப்பிள்ளை தனக்குப் பிடித்த பூப்பெய்திய பெண்ணோடு திருமணத்திற்கு முன்பு தொடர்பு கொண்டு அவளுடைய வீட்டில் தங்கி வாழ்க்கை நடத்திப் பின் அவளைத் திருமணம் செய்து கொள்வதாகும். பெண் வீட்டில் தங்கி வாழ்க்கை நடத்தும் ஆடவனை ''மெனமாப்பிள்ளை'' என்று இவர்கள் மொழியில்கூறுகிறார்கள். மெனமாப்பிள்ளை அவளோடுவாழ்க்கை நடத்தும் காலத்தில் தான் ஈட்டும் ஊதியத்தை அவள் வீட்டாருக்குத் தருகிறான். இதைப் பணிசெய்து திருமணம் செய்துகொள்ளும் முறை என்றும் கொள்ளலாம் (Marriage by service). சிலசமயங்களில் இவ்வாறு வாழ்க்கை நடத்தும் மென மாப்பிள்ளை பெண் பிடிக்கவில்லை என்ற காரணத்தால் அவளை விட்டுச் செல்வதும் உண்டு. பெண் பருவம் அடைவதற்கு முன்பே சிலர் திருமணம் செய்து கொள்கிறார்கள். சிலர் பருவம் அடைந்த பெண்ணைத் தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று வைத்திருந்து வாழ்க்கை நடத்தியபின் திருமணம் செய்து கொள்வது ஒருவகை மரபு. ஒருசிலர் தமக்குப் பிடித்த பெண்ணைக் கூட்டிக் கொண்டு ஓடிவிடுவதும் உண்டு. இதை உடன்போக்குத்

திருமணம் (Marriage by elopement) என்று கொள்ளலாம். ஒருபெண் ஒருவனை மணக்கச் சம்மதிக்காவிட்டால் அவனை வசீகரித்து (Black Magic witchcraft) திருமணம் செய்து கொள்வது உண்டு. விதவைத் திருமணங்களும் நடை பெறுகின்றன.

திருமணச்சடங்கு: மாப்பிள்ளை வீட்டுக்காரர் பெண் வீட்டிற்கு ஞாயிற்றுக் கிழமையாவது திங்கட் கிழமையா வது பெண் பார்க்கச் செல்வார்கள். அவ்வாறு செல்லும் போது கையில் ஒரு இரும்புத் தடியுடனும் மரத்தடியுட னும் செல்வார்கள். மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் ஏழு முறை பெண் வீட்டிற்குச் சென்று முடிவு செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். முதல் முறையாக, ஒருநாள் மாலைப் பொழுதில் பெண்வீட்டிற்குச் செல்வர். சென்றதும் இரும்புத்தடியையும் குடையையும் வைத்துவிட்டு, அன்று இரவு அவர்கள் விருந்தினராக அங்கு தங்கிவிடுகிறார்கள். காலையில் உணவு உண்டபின், ''நாங்கள் போய் வரு கிறோம்'' என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் விடை பெற்றுக் கொள்வர். அப்பொழுது நீங்கள் எப்பொழுதும் வராதவர்கள் வந்திருக்கிறீர்கள் என்ன காரணம்? என்று பெண்வீட்டார் கேட்கிறார்கள். ''உங்களிடம் கொஞ்சம் நிலமும், வாழைமரமும் உள்ளதாம். அந்த நிலத்தை உங் களிடம் கேட்டு வேளாண்மை செய்யலாம் என்று வந்திருக் கிறோம்'' என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் கூறுகிறார்கள். ''நீங்கள் அந்த முள்ளுக்காட்டை வெட்டமாட்டீர்கள்'' எதற்கும் வீட்டிலுள்ள அனைவரையும் கேட்டுவிட்டு நீங்கள் அடுத்த முறை வரும்பொழுது பதில் சொல்கிறோம்'' என்று பெண் வீட்டுக்காரர்கள் கூறுகிறார்கள். இரண்டா வது முறை மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண் வீட்டிற் குச் செல்கிறார்கள். முதன்முறை விருந்து கொடுத்து விருந் தோம்பியது போன்றே இம்முறையும் விருந்து கொடுக்

கிருர்கள். பெண்வீட்டிலுள்ள எல்லோரிடமும் ''நிலம் வேண்டும்'' என்று கேட்கிருர்கள். ''எங்களிடம் சின்னக் காடுதான் இருக்கிறது, அதை நல்லமுறையில் வெள்ளா மை செய்யவேண்டும்'' என்று பெண் வீட்டுக்காரர்கள் சொல்கிருர்கள். ''நாங்கள் நல்ல முறையில் நிலத்தைப் பயிர் செய்கிருேம்'' என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் கூறுகிருர்கள். பின்னர் மாப்பிள்ளை வந்து பெண்ணைப் பார்த்துச் சம்மதிக்க வேண்டும். அடுத்த முறை மாப் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வருகிருர்கள். பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவரை யொருவர் பார்க்கின்றனர். பிறகு இருவரும் அவர்கள் சம்மதத்தைத் தெரிவிக்கின்றனர்.

பின்பு மாப்பிள்ளை வீட்டுக்காரர் தங்களுடைய ஜாத்தி யுடன் எழுவரை அழைத்துக்கொண்டு போவார்கள். பெண்வீட்டாரும் தங்களுக்கு ஒரு ஜாத்தியை நியமனம் செய்திருப்பார்கள். இரு ஜாத்திகளும் மற்றவர்களும் எப் போது திருமணம் நடத்தலாம், பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் எவ்வளவு பரியப்பணம் கட்டவேண்டும் என்பன போன்றவற்றைப் பேசிமுடிப்பார்கள். பழைய காலத்தில் மாப்பிள்ளைவீட்டார் பெண்ணுக்குப் பரியப் பணமாக ஆறே கால் ரூபாய் அல்லது பத்தேகால் ரூபாய் கட்டினுர்கள் என்று இவர்கள் கூறுகிருர்கள். இப்பொழுது பெரும்பாலா ஞேர் அறுபதேகால் ரூபாயைப் பெண்ணுக்குப் பரியப் பண மாகக் கட்டுகிருர்கள். பெண்ணுக்கு எவ்வளவு பணம் பரிய மாகக் கொடுக்க வேண்டும் என்று ஜாத்திகள் முடிவு செய் கிருர்கள். இதனைக் 'கடிகட்டுகாரு' என்று இவர்கள் மொழியில் கூறுகிருர்கள். பரியப்பணம் இவ்வளவு என முடிவு செய்யும்போதே, திருமணத் தேதியையும் குறித்து விடுவார்கள். மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி மாப்பிள்ளைக்கும் பெண்வீட்டு ஜாத்தி பெண்ணுக்கும் பொறுப்பு ஏற்கிருர்கள்.

"வருகிற திங்கட்கிழமை கடிகட்டியதற்குச் சரியாக எட்டாம் நாள் திருமணம்' என்று சொல்லி ஆண் வீட்டுக்காரர் பெண்ணுக்குப் பரியப்பணமாக அறுபதேகால் ரூபாய் கட்டவேண்டும் என்று முடிவு செய்கிறார்கள். 'வருகிற ஞாயிற்றுக்கிழமை வந்து திங்கட்கிழமை பெண்ணை அழைத்துச் செல்கிறோம்' என்று கூறிவிட்டு மாப்பிள்ளை வீட்டார் சென்று விடுகின்றனர்.

மாப்பிள்ளைவீட்டார் வீட்டிற்குச் சென்று வீட்டைச் சுத்தம் செய்து வெள்ளை அடிக்கின்றனர். பின் தங்கள் உறவினர்களையும் மற்ற இருளர்களையும் வெற்றிலைபாக்குக் கொடுத்துத் திருமணத்திற்கு வரும்படி அழைக்கின்றனர். பெண்வீட்டில் ஆலி என்ற ஒருவகை மரத்திலிருந்து 12 தூண்கள் வெட்டி பந்தலுக்குக் கால்கள் நடுகிறார்கள். பெண் வீட்டாரும் தம் உறவினரையும் மற்ற இருளர்களையும் திருமணத்திற்கு வெற்றிலைபாக்குக் கொடுத்து அழைக்கின்றனர்.

ஜாத்திகளும் பெரியோர்களும் குறித்த நாளன்று திருமணத்தை நடத்தும் நிமித்தம் ஞாயிற்றுக்கிழமை அன்று ஜாத்தி உறவினர்கள் எல்லோரும் மாப்பிள்ளை வீட்டில் கூடுகிறார்கள். மாப்பிள்ளை வீட்டு ஜாத்திக்கும் அவன் மனைவிக்கும் மாப்பிள்ளை வீட்டில் கோழிக்கறியுடன் சாப்பாடு போடுவார்கள். அவர்கள் சாப்பிட்டபின் மாப்பிள்ளையின் தாய் தந்தையர் பெண்ணுக்குக் கொடுக்க வேண்டிய அணிகலன்களையும் பரியப் பணத்தையும் ஜாத்தியிடம் ஒப்புவிக்கிறார்கள். முதலில் மாப்பிள்ளை வீட்டு ஜாத்தியும் அவன் மனைவியும் அவர்களைப் பின்தொடர்ந்து மாப்பிள்ளையின் பெற்றோர்களும் மற்றவர்களும் மணமகனை அழைத்துக்கொண்டு இசைக்கருவிகளை இசைத்த வண்ணம் பெண் வீட்டை நோக்கிச் செல்கின்றனர்.

மணப்பெண் திருமண நாளுக்கு முந்தியநாள் காலையில் தனக்குரிய வனப்புடன் காணப்படுவாள். மணப்பெண் வீட்டில்ஏழு செம்புகளில் ஜீனிபெரங்கி என்ற ஒருவகை சிறுமிளகாயைத் தண்ணீரில் கலந்து நிரப்பியிருப்பார்கள். அந்தத் தண்ணீர் நிரப்பிய ஏழு செம்புகளையும் பாய்விரித்து அதன் மீது வைத்திருப்பார்கள். இது ஏழு உலகங்களிலும் உள்ள நீரை ஏழு செம்புகளில் வைத்திருப்பதைக் குறிக்கும். மாப்பிள்ளை வீட்டார் வந்தவுடன் வீட்டிற்குள்ளே சென்று ஏழு செம்புகளிலும் வைக்கப்பட்டிருக்கும் 'கரெநீரை' ஒவ்வொரு செம்பிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் குடிப்பார்கள். குடித்துவிட்டு அதன் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் வெற்றிலைப்பாக்கைப் போட்டுக் கொள்வார்கள். வெளியே வந்து, மணப்பெண்ணுக்குப் பக்கத்தில் பெண் வீட்டு ஜாத்தியும், மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் மாப்பிள்ளை வீட்டு ஜாத்தியும் நின்று ஒருபாட்டுப்பாடுவர். பாடி முடித்தபின் மாப்பிள்ளைவீட்டிலிருந்து வந்தவர்களைப் பெண்வீட்டார் பாய் விரித்து அதில் அமரச்சொல்வார்கள். மாப்பிள்ளை வீட்டுப் பாயில் மாப்பிள்ளைஜாத்தியும், உறவினர்களும் அமர்வர். பெண்வீட்டுப் பாயில் பெண்வீட்டு ஜாத்தியும் மற்றவர்களும் அமர்வர். ஆண்கள் தனிப் பாயிலும் பெண்கள் தனிப்பாயிலும் அமர்வர்.

பெண்வீட்டில் கோழியைக்கொன்று சமையல் செய்வார்கள். சமையல் முடிந்ததும் மாப்பிள்ளை வீட்டு ஜாத்தியும் அவன் மனைவியும், பெண்வீட்டு ஜாத்தியும் அவன் மனைவியும் சாப்பிடுவார்கள். மாப்பிள்ளைவீட்டு ஜாத்திக்குப் படைக்கப்பட்டிருக்கும் உணவில் கோழித் தொடையைக் குத்தி வைத்திருப்பார்கள். பெண் வீட்டு ஜாத்திக்குப் போடப்பட்டிருக்கும் சாப்பாட்டில் கோழித்தலையைக் குத்தி வைத்திருப்பார்கள். இவர்கள் நால்வரும் உண்டபின் மற்றவர்களுக்கு உணவு பரிமாறுவார்கள்.

பெண் வீட்டிற்குமுன் உள்ள நடு இடத்தில் பாய்கள் விரிக்கப்பட்டிருக்கும். மாப்பிள்ளைவீட்டு ஜாத்தி ஒருபாயி லும், பெண்வீட்டு ஜாத்தி ஒரு பாயிலும் உட்கார்ந்து எல் லோர் முன்னிலையிலும் துணிகளையும் அணிகலன்களையும் மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி பெண் வீட்டு ஜாத்தியிடம் கொடுப்பான். பின்பு வெண்கலக் கிண்ணம் எடுத்து நடு வில் வைத்து, பெண் வெற்றிலை மாப்பிள்ளை வெற்றிலை என்று வாங்கி அதை ஏழு பாகமாகப் பிரித்துக் கிண்ணத் தைச் சுற்றிலும் வைப்பார்கள். அதன் நடுவில் கல்லை வைப்பார்கள். மாப்பிள்ளைவீட்டு ஜாத்தி அறுபதேகால் ரூபாய் பரியப்பணத்தைக் கல்லில் போட்டு மூன்று தடவை எண்ணிக் கிண்ணத்தில் போட்டுக் கொடுக்கவேண்டும். அப்படி எண்ணி முடிக்கும்பொழுது ஒரு பாட்டைப்பாடி மாப்பிள்ளை வீட்டு ஜாத்தியிடம் கொடுப்பான்.

மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி திருமணப் பாடலைப் பாடு வான். அந்த வெண்கலக் கிண்ணமும் பொருள்களும் குடத்தின்மீது வைக்கப்படும். மறுநாள் காலைவரை அந் தப் பொருள்கள் குடத்தின் மீதே இருக்கும். மறுநாள் பெண்வீட்டு ஜாத்தி பெற்றுக்கொண்ட துணிமணிகளையும் அணிகலன்களையும்கொண்டு பெண்ணை அலங்கரிப்பார்கள். மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி பெண்வீட்டு ஜாத்தியிடம் பெரி யோர் முன்னிலையில் இரண்டேகால் ரூபாயை 'மெலையடி பணம்' என்று தருவான். மணப்பெண்ணின் தாய் தன் மகளுக்குப் பால்கொடுத்ததற்காகக் கொடுக்கப்படும் பணம் மெலையடி பணம் எனப்படும். பெண்ணையும் மாப்பிள்ளையை யும் இணையாக அமரச்செய்கிறார்கள். சாம்பிராணியைக் கொண்டு பெண்ணின் தாய்மாமன் ஒரு சீர் செய்கிறான். மாப்பிள்ளை வீட்டு ஜாத்தி தாலியைத் தன் மனைவியிடம் கொடுக்கிறான். மாப்பிள்ளை ஜாத்தியின் மனைவி பெண் ணுக்குத் தாலி கட்டுகிறான். தாலியை இவர்கள் 'முண்ட

கள்ளி' என்று கூறுகிறார்கள். மணமக்கள் கூடியிருக்கும் எல்லா இருளர்கள் கால்களிலும் விழுந்து வணங்குகிறார்கள். இவ்வாறு காலில் விழுந்து வணங்குவதை 'அடவித்துட் டாரு' என்று கூறுகிறார்கள். பெண்ணையும் மாப்பிள்ளையை யும் பெண்ணின் தாய்மாமன் வாழ்த்துவான். இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் பெண்ணும் மாப்பிள்ளையும் புதுத் துணிவிரித்துத் தாய் தந்தையர் காலில் விழுந்து வணங்கி வாழ்த்துப் பெறுவார்கள்.[7]

**பிள்ளைப்பேறும் பெயரிடுவிழாவும் :** இருளப் பெண்கள் பேறுகாலத்தில் சிறப்புச் சடங்குகள் ஒன்றும் செய்வதில்லை. பண்டைக் காலத்தில் இருளப்பெண்கள் குழந்தை பெறுவ தற்குக் காட்டிற்குச் சென்று அங்கு குழந்தையைப் பெற்று எடுத்துக் கொண்டு வந்தார்கள். இவர்களுடைய வீடுகள் காட்டில் இருப்பதால் வீட்டிலிருந்து சற்று தூரத்தில் காட் டிற்குத் தனியாகவோ அல்லது வேறு பெண்களைத் துணை யாக அழைத்துச்சென்றோ பிள்ளை பெற்று எடுத்து வருவது வழக்கமாக இருந்தது. இப்பொழுது மருத்துவ மனை களிலோ அல்லது வீடுகளிலோ மகப்பேறு நடக்கிறது.

இருளர்கள் பிள்ளை பெற்றவளைத் தனி வீட்டிலோ அல் லது வீட்டில் தனிப்பகுதியிலோ இருக்கச் செய்கிறார்கள். அவளுடைய கணவன் அல்லது பெற்றோர் தண்ணீர் எடுத் துக் கொடுத்தும் உணவு சமைத்துக் கொடுத்தும் உதவு கிறார்கள். உணவுடன் புளிரசமும் கறிக்குழம்பும் தருகிறார்கள். பனைவெல்லத்தைத் தின்பதற்குக் கொடுக் கிறார்கள். பிள்ளை பெற்ற ஏழாவது நாளன்று வீட்டைச் சுத்தம் செய்கிறார்கள். அன்று மாலை நேரத்தில் ஊரி லுள்ள எல்லா இருளர்கள் வீட்டிற்கும் சென்று "பிள்ளைக் குப் பெயரிடப்போகிறோம், எல்லோரும் வந்துவிடுங்கள்" என்று அழைக்கிறார்கள். அவர்களால் அவர்களுக்கு

என நியமனம் செய்யப்பட்ட ஜாத்தியை இந்தப் பெய ரிடும் விழாவுக்கு அழைக்கிறார்கள். ஜாத்தி பிள்ளை பிறந்த வீட்டிற்கு வந்தவுடன் அவனிடம் தேங்காயும், வாழைப்பழமும் திகடெபட்டெயும் காணிக்கையாக நான் கணும் கொடுக்கிறார்கள். ஜாத்தி அவர்கள் கொடுத்த சாமான்களையெல்லாம் எடுத்துக்கொண்டு கிணற்றங்கரை அல்லது ஆற்றங்கரைக்குப்போய்ப் பூசை செய்து, தேங் காய் உடைத்து, தீர்த்தநீரை ஒரு செம்பில் கொண்டுவந்து பிள்ளை பெற்றவளுக்கு மூன்று மடக்குக் குடிக்கக் கொடுக்கிறான். தீர்த்தத் தண்ணீரில் திகடெபட்டையைக் கரைக்கிறார்கள். செம்பில் கொண்டுவரப்பட்ட தீர்த்தத் தண்ணீரை அங்குக் கூடியுள்ளவர்கள் மீதும், வீட்டின் எல்லாப் பகுதிகளிலும் தெளிக்கிறார்கள்.

இதெல்லாம் முடிந்தவுடன் புதுப்புடவையைக்கொண்டு தொட்டில் கட்டுகிறார்கள். பிறந்த பிள்ளையின் பெரியம் மாவோ, பாட்டியோ பிள்ளையைத் தொட்டிலில் இட்டு என்ன பெயர் இட்டனரோ அந்தப் பெயரைச் சொல்லித் தாலாட்டுப்பாடித் தூங்கவைக்கிறார்கள். ராமெ, காளெ போன்ற பெயர்களை ஆண் குழந்தைகளுக்கும், பேலி, பர்மி போன்ற பெயர்களைப் பெண் குழத்தைகளுக்கும் சூட் டுவர். இப் பெயர்சூட்டு விழா குழந்தைபிறந்த ஏழாவது நாளில் நடைபெறும்.

**ஈமச்சடங்கு:** இருளர்கள் இறந்தவர்களைப் புதைக்கின் றனர். இருள இனத்தின் அனைத்து உட்பிரிவைச் சேர்ந் தவர்களுக்கும் தனித்தனியாகச் சமாதிகள் உள்ளன. சமா தியை 'கொப்பெ' என்று அழைக்கின்றனர். பண்டைக் காலத்தில் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் இறந்த வுடன் ஒரே குழியில் புதைக்கும் பழக்கம் இருந்தது. இப் பொழுது இப்பழக்கம் மாறி வருகிறது. இன்று தனித்தனிக்

குழிகளில் புதைக்கிருர்கள். சில ஊர்களிலுள்ள சமாதியில் பெண்கள் ஒரு பகுதியிலும் ஆண்கள் ஒரு பகுதியிலும் புதைக் கப்படுகின்றனர். சமாதியில் இறந்தவர் நினைவாக ஒரு கல் வைக்கப்படுகிறது. ஒவ்வொரு இனத்தைச் சார்ந்தவருக் கும் சமாதி இருக்கிறது. அவர்கள் எந்த ஊரில் வாழ்ந் தாலும் இறந்த சடலத்தை அவர்களுக்கு எந்த ஊரில் சமாதி இருக்கிறதோ அங்குதான் புதைக்க வேண்டும்.

இறந்தவர்களுக்கான சடங்குகள் மூன்று நிகழ்ச்சி களாக நடைபெறுகின்றன. இது ‘செத்ததற்கு மூன்று சீர்கள் செய்தல்’ என அழைக்கப்படும். சாவு தினத் தன்று நடைபெறும் சீர் முதல்சீர். இரண்டாவது சீர் 6 அல்லது 7 நாட்களுக்குப் பின் நடைபெறுகிறது. மூன்ரு வது சீர் இறந்தவருடைய ஆண்டு நிறைவைக் கொண் டாடும் விழா. இவ்விழாவை அவர்களுக்கு வாய்ப்பும் பணவசதியும் ஏற்படும்பொழுது ஓரிரண்டு ஆண்டுகள் கழித்துக்கூட நடத்துகிருர்கள். கணவனை இழந்த பெண் இந்த மூன்ரும் சீர் செய்தபின்தான் மறுமணம் செய்துகொள்ள முடியும்.

சாவுச்செய்தி உறவினர்களுக்குச் சொல்லி அனுப்ப படும். சாவுச் செய்தி கேட்டவுடன் உறவினர்கள் இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டு சாவு வீட்டிற்கு வரு கிருர்கள். மாமன், மைத்துனன், சம்மந்தி உறவு முறை யினர் தாம் கொண்டுவந்த புதுவேட்டி அல்லது துண்டை வீட்டின் கூரைமீது அல்லது சாவுக்குப் போடப்பட்டிருக் கும் பந்தல்மீது போடுகிருர்கள். அவ்வாறு போட்ட துணி ஒன்றிரண்டை சாவுக்குப் பயன்படுத்திவிட்டு மீதியுள்ள துணிகளைச் சாவு வீட்டுக்காரர்கள் பயன்படுத்துகிருர்கள். இழவு வீட்டில் நான்கு வாழை மரங்கள் நடுகிருர்கள். வீட்டிற்கு முன் வாசலில் கடப்பாரையைத் தலைகீழாக

நட்டு அதன்மேல் சிவப்புத் துண்டைக் கட்டுகிறார்கள். இறந்தவருடைய பையனது காலில் அல்லது ஈமச் சடங்கு செய்பவனுடைய காலில் சலங்கை கட்டுகிறார்கள். ஒரு முறத்தில் தினை, ஈர்கொலி, சீப்பு, சந்தனக்கட்டை ஆகியவற்றை வைக்கிறார்கள். ஜாத்தி, சடங்கு செய்பவனை, கடப்பாரையை மூன்று சுற்று சுற்றச் சொல்லி, பிணம் இருக்கும் வீட்டிற்குள் அழைத்துச் செல்கிறான். இதோடு முதல் சீரின் முதல் சடங்கு முடிகிறது. விவசாயச் சாமான்கள் இறந்தவன் பக்கத்தில் வைக்கப்படுகின்றன.

இரண்டாவது சடங்கு செய்யும்பொழுது விருந்தினர்கள் சடலத்தை மரக்கட்டிலில் தூக்கி வைக்கிறார்கள். மிளகாய், உலக்கை, மஞ்சள், தண்ணீர் சீயக்காய், ஆகியவை சடலத்தின் முன் வைக்கப் படுகின்றன. மஞ்சள் நீரால் சடலத்தின் முகத்தைக் கழுவுகிறார்கள். ஏழு சிறு குழிகள் வெட்டி கரையில் உள்ள புல்லை எடுத்து அக்குழியில் வைக்க வேண்டும். இந்த சமயத்தில் ஒரு பாடை தயாரிக்கப்படுகிறது. அது பச்சை மூங்கில்களால் ஏணி போன்று செய்யப்படுகிறது. இந்த பாடையில் கொஞ்சம் தினையை வைத்து உலக்கையை ஒரு கையில் பிடித்துக் குத்த வேண்டும். மஞ்சளை எடுத்து வைக்க வேண்டும். முதலில் இறந்தவருடைய மூத்த மகன் அல்லது சீர்செய்வதற்குரியவன் இறந்தவனுடைய கால்களை மஞ்சள் நீரால் கழுவ வேண்டும். பின்னர் சடலத்தின்மீது தினை அல்லது சாமை போடவேண்டும். மூத்த மகன் நெற்றியில் சந்தனப்பொட்டு இடவேண்டும். பின்பு இறத்தவரின் உடலில் வலப்பக்கத்தில் தினையைப் போடவேண்டும். இந்தச் சடங்கு முடிந்தவுடன் சடலத்தைப் பாடையில் வைத்துக் கட்டுகிறார்கள். இனி பீதி (வீதியில் நடப்பது) சடங்கு செய்கிறார்கள். நட்டிருந்த

நான்கு வாழைமரங்களை வெட்டி எரிகிறார்கள். மீண்டும் பழையபடி பிணத்தின் கால்களை மஞ்சள் நீரால் கழுவு கிறார்கள். அதன் உடலில் திணையைப் போடுகிறார்கள். இறந்தவனுடைய மனைவியின் தலைமுடியை அறுத்து ஜாத்தி சடலத்தின் வலது பக்கத்தில் வைக்கிறான். அதன் பின் னர், எல்லா அணிகலன்களையும் அவளிடமிருந்து கழற்றி விடுகிறார்கள். கழற்றிய அணிகலன்களையும் பிணத் தின் மார்பில் வலப் பக்கத்தில் போடுகிறார்கள். 'நீங்கள் குழந்தைகளை விட்டுவிட்டு இறந்து விட்டான்' என்று அஞ்சவேண்டாம் என்று ஜாத்தி ஆறுதல் கூறுகிறான். இந்தச் சமயத்தில் ஒருவன் ஆவேசமுற்று அந்த இறந் தவன் ஆவி பேசுவதுபோல் பேசுகிறான். இறந்தவர் களுடைய குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுகிறான். 'சாவைஎடு' என்று சாமி ஆடியவன் பணிந்தபின் எடுக்கிறார்கள். இந்தச் சடங்குகள் சாவு வீட்டின் வெளி முற்றத்தில் நடைபெறுகின்றன. பீதி சடங்கு வீட்டிற்கு வெளியில்தான் நடைபெறுகிறது. பிணத்தை எடுத்துப் புதைக்கும் வரை இசைக்கருவிகளை இசைக்கின்றனர். கருவி இசைக்கு ஏற்ப பெண்களும் ஆண்களும் ஆடுகிறார் கள். பின் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று அவர்களுக்கு உரிய பகுதியில் புதைக்கிறார்கள். பண்டைக் காலத் தில் சடலத்தை உட்கார்ந்திருக்கும் நிலையில் குழியில் வைத்துச் சோறு, விளக்கு, அவனுடைய அணிகலன்கள் அனைத்தும் அருகில் வைத்துப் புதைத்தார்கள் என்று இருளர்கள் கூறுகிறார்கள்.

சடலத்தைப் புதைத்த பின்னர் இறந்தவருடைய மக னின் தலைமுடியை மழிக்கிறார்கள். இவ்வாறு மழிக்கும் போது கிழக்கு நோக்கி அமர வேண்டும். தலையை மழித்த அவன் தலைக்குப் புதுத்துணியால் முக்காடு இட்டு கையில் ஒரு தடி கொடுத்து ஜாத்தி அவனை நடத்திச் செல்கிறான்.

பீதிச்சாத்திரம் செய்த இடத்தில் அந்தத் தடியால் மூன்று அடி அடித்துவிட்டு வீட்டிற்குள் அவர்கள் செல்கிருர்கள். உணவை மண்டியிட்டு எடுத்து வைக்க வேண்டும். அது அரிசியும் தினையும் கலந்து சமைத்த உணவு அந்த உணவை இருவரும் உண்ண வேண்டும். இத்துடன் முதல் சீர் முடிகிறது. இரண்டாவது சீர் சில நாட்கள் கழித்துச் செய்கிருர்கள். மூன்ருவது சீர் அவர்களுக்குப் பண வசதியும் வாய்ப்பும் ஏற்படும் பொழுது செய்கிருர்கள் மூன்ருவது சீர் செய்வதற்கு முதல் நாள் ஒரு கொளக (மரக்கால்) ஆமணக்கு வாங்கி எண்ணெய் எடுக்கிருர்கள். ஒரு கொளக தினை, ஒரு கொளக நெல் வாங்குகிருர்கள். விளக்கெண்ணெய்யையும் நல்லெண்ணெய்யையும் மூங்கிலால் செய்யப்பட்ட கோரக்கை என்ற பாத்திரத்தில் ஊற்றி வைக்கிருர்கள். முதல் இரண்டு சீர்களையும் செய்த ஜாத்தி அவன் மனைவி ஆகிய இருவருக்கும் உணவு படைக்கிருர்கள். மூன்றும் சீர் செய்யும் நாளன்று அனைவரும் ஆற்றுக்குச் சென்று குளித்து வருகிருர்கள். ஜாத்தியும் வீட்டுக்காரர்களும் புதுத்துணிகளை அணிகிருர்கள். இறந்தவனுக்குப் பிடித்தமான பலகாரங்களையும் பழங்களையும் எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்து எல்லோரும் சுடுகாட்டிற்குக் கட்டுச்சோறு கொண்டு செல்லுகிருர்கள். அனைவரும் சுடுகாட்டை அடைந்தவுடன் அவனைப் புதைத்த இடத்தில் ஒரு கல் வைக்கிருர்கள் அந்தக் கல்லின் மீது தாம் கொண்டுவந்த எண்ணெய்யை ஊற்றுகிருர்கள். பலாப் பழம், வாழைப்பழம், புட்டு, பக்கோடா, பஜ்ஜி இன்னும் பல பலகாரங்களைப் படைக்கிருர்கள் திரும்பி வந்து எல்லோரும் விருந்துண்கிருர்கள்.

முடிவுரை: இக்கட்டுரையில் நீலகிரி வாழ் இருளர்களுடைய வாழ்க்கை முறையைப் பற்றிப்பார்த்தோம். இதேபோல, கேரளம், மைசூர், தமிழ் நாட்டில் அட்டப்

பாடி, ஆனைமலை, செஞ்சிப் பகுதிகளில் வாழும் இருளர் களின் வாழ்க்கை முறையையும் ஆராய்ந்து நீலகிரி இரு ளர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பெரும் பயன் தரக்கூடிய தாக இருக்கும். இவர்களது எழுதா இலக்கியமாகிய நாட் டுப் பாடல்களையும் கதைகளையும் இவர்தம் மொழியையும் நுணுகி ஆராய்வது, இம் மக்களின் சமுதாய அமைப்பின் கட்டுக்கோப்பைத் தெரிந்து கொள்ளப் பெரிதும் உதவும். இவ்வகை ஆய்வை மேற்கொள்ள அரசு ஆவன செய்தல் வேண்டும்.

## Foot Notes

1. Diffloth, Gerard F: **The Irula language, A close Relative of Tamil**, Page 11 Ph. D. Dissertation Xerography copy University of California 1968.
2. A. A. D. Luiz: **Tribes of Kerala**, Page 52 Bharatiya Adimjati Sevak Sangh Link Road, Jhande-walan New Delhi 1962.
3. A. Mitra **Census of India**, 1961, Vol 1, India Part-II C (ii) Language tables Page lxxxvi
4. G. R. Damodaran **A Socio-Economic Survey of the tribes of the Nilgiri**, Page 16, 236. P. S. G. School of Social work Coimbatore-4 1962.
5. R. Perialwar **A Descriptive grammar of Irula dialect**, (Ph. D. Dissertation in Progress)
6. R. Perialwar **Irularum Icayum**, Aaraachi, October 1970. Vol-2 No. 1 Pages 93-96. Tinnelveli-2.
7. R. Perialwar **Irular tirumanam**, Aaraachi, December 1971, Vol 2 No. 4, Page 414-421 Tinnelveli-2.

**நன்றி**

இருளர்களைப் பற்றிய இக்கட்டுரையை எழுதுதற்குப் பல வகையிலும் உதவி செய்த பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம், திரு ந. குமாரசாமி ராசா, டாக்டர் S. நரசிம்மன், பி. இராமன், எ. பொன்னன், கே. காளன், காரமடை ஆகியோருக்கு என் நன்றி.

# 6. காணிக்காரன்

இரா. பாலகிருஷ்ணன், எம். ஏ.

6.0. மனிதன் தோன்றிய காலம் கணக்கிடற்கரியது. ஆனால் அவன் வாழ்ந்த முறை, அவனது பழக்க வழக்கங்கள் இவை யாவும் ஆராயப்பட்டுள்ளன. மனிதனின் உடலோடும், உயிரோடும் ஒன்றிக்கலந்து, மாற்றுதற்கரிதாய் மாறுதற்கு வலிதாய் விளங்குவது அவன் பேசும் மொழியும், பழக்கவழக்கங்களுமே. இவையிரண்டும் மாற்றாரின் கலப்பால்மாறுபடும்தன்மையுடையனவாயினும், அவற்றின் தனித்தன்மை எக்காலத்திலேனும், எவ்வகையிலேனும் முழுதும் மறையாது. தன்னை இன்னான் எனக்காட்ட, தன்னவரை இன்னவர் என வெளிப்படுத்த, பேசும் மொழியாலும், பழக்க வழக்கங்களாலுமே இயலும். இவ்வாறு தம் பேச்சாலும் பழக்க வழக்கங்களாலும் மாறுபட்டு, பழங்குடி மக்களின் பண்பைப் பின்பற்றி வாழுகின்ற இனத்தினர் பலர், தமிழகத்தின் காடுகளிலும், மலைகளிலும், குகைகளிலும் காணப்படுகின்றனர். இவர்களின் தன்மைகளை ஆராயின், பழந்திராவிடரின் சீரிய பண்பும், அவர்களது பழம்பெருமையும் தெளிவாதல் காணலாம்.

பழங்குடி மக்களின் வரிசையில் 'காணிக்காரன்' என்ற இனமும் ஒன்று. இவ்வினத்தினர் காணி என்று அழைக்கப்படுகின்றனர். தமிழில் கான் என்றால் காடு என்பது பொருள். காடுகளில் வாழும் இயல்புடையவர்களாயிருந்தமையால் காணி என்றழைக்கப்பட்டிருக்கவேண்டும். மற்றும் தமிழில் காணி என்றால் நில அளவைக்குறிக்கும். அதனால் தான் காணிக்காரன் என்பதற்கு நிலத்திற்கு உரிமையாளன்

என்றும் கூறப்படுகிறது. காணிக்காரர்கள் குமரி மாவட்டத்தில் கீரிப்பாறை, பேச்சிப்பாறை, கோதையாறு ஆகிய காட்டுப்பகுதிகளிலும், கேரளத்தின் தென் கோடியிலுள்ள நெய்யாற்றங்கரைக் காடுகளிலும் வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் மட்டும் சுமார் 4000 காணிக்காரர்கள் வாழ்கின்றனர். இவர்களின் பண்பாடும் மொழியும் தனித்தன்மை வாய்ந்தன.

6.1. பொது இயல்பு : காணிக்காரர்கள் கருமை நிறமும், குள்ளமான தோற்றமும் உடையவர்கள். தலை (skull) நீண்டும், நெற்றி அகலமாகவும், மூக்கு பரந்தும் இருக்கிறது. இவர்களது தலைமயிர் சுருள் சுருளாக அடர்த்தியாக உள்ளது.

ஆரம்ப காலத்தில் காடே உலகம், காட்டில் அடர்ந்து வளர்ந்துள்ள மரங்களே உறைவிடம், அம்மரங்களிலிருந்து கிடைக்கும் காய் கனிகளே உணவு, அங்கு உறையும் வனவிலங்குகளே உற்ற நண்பர்கள் என்று தங்கள் வாழ்வை அமைத்திருந்த இவர்கள், இப்பொழுது சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்ப மாற்றிவருகின்றனர். முதலில் இலைகளையும், தழைகளையும், மரப்பட்டைகளையும் ஆடையாக அணிந்தனர். இப்பொழுது வேட்டி முதலியவற்றை அணிகின்றனர். சிப்பிகளால் அழகு செய்யப்பட்ட பாசிமணி மாலைகளை ஆண்கள் தங்கள் கழுத்தில் அணிகின்றனர். பெண்களும் ஆண்களும் கடுக்கன் என்ற காதணியை வெள்ளியினாலோ, பித்தளையினாலோ செய்து அணிகின்றனர். பச்சைக் குத்திக் கொள்ளும் வழக்கம் இவர்களிடயே உள்ளது. நெற்றியில் கோபுர வடிவில் அல்லது பிறைமதி வடிவில் அல்லது புள்ளி வடிவில் பச்சைக்குத்திக் கொள்வதோடு, இடதுகை பெருவிரலின் மேற்பாகத்தில் தேள் வடிவிலும் பச்சைக்குத்திக்கொள்கின்றனர். இவை இக்

கால இளைய தலைமுறையினரிடம் காணப்படாவிடினும் முதியோர் பெரிதும் கடைப்பிடித்து வருகின்றனர்.

வன விலங்குகள் வாழும் காடுகளில் காணிக்காரர்கள் இருப்பதால், அவை துன்பம் தராத இடத்தில், மூங்கிலாலும் புல்லாலும் வேயப்பட்ட, சதுர வடிவமான குடில்களை அமைத்து வாழ்கின்றனர். கொடிய விலங்குகளின் தொல்லை அல்லது அம்மை நோய்போன்ற கொடிய நோய் அவர்களின் உறைவிடங்களில் வருமாயின் உடனே தங்களது இருப்பிடத்தை மாற்றிவிடுகின்றனர். தங்களில் யாருக்கேனும் அம்மை அல்லது காலரா கண்டு விட்டால் அனைவரும் அவ்விடத்தைக் காலி செய்துவிட்டு மற்றொரு இடத்தில் குடியேறிவிடுகின்றனர். போகுமுன் நோய் கண்டவனின் பக்கத்தில் சிறு பாத்திரமொன்றில் தண்ணீர் வைத்துவிட்டுச் செல்கின்றனர். அத்தண்ணீர்தான் அவனது உணவு. நோய் அதிகரித்து ஒருசில நாட்களில் மாண்டு போவதும் உண்டு. பிழைத்துக் கொண்டால், பின்னர் தன் கூட்டத்தினரைத் தேடிச் சேர்ந்துகொள்வான். ஒவ்வொரு இடத்திலும் 10 அல்லது 15 குடில்களே காணப்படுகின்றன. இவர்கள் வாழும் இடத்திற்கு காணிக்குடி அல்லது காணிப்பத்து என்று பெயர். ஒவ்வொரு காணிக்குடிக்கும் தாய் வழியில் பரம்பரைப் பரம்பரையாக வருகின்ற மூட்டுக் காணி என்றழைக்கப்படும் தலைவன் இருக்கிறான். மந்திரம் (magic) இவர்களது குலத்தொழிலாகையால் காணிக்குடி ஒவ்வொன்றிற்கும் பிலாத்தி என்றழைக்கப்படும் மந்திரவாதி மரியாதைக்குரியவனாய் இருக்கிறான். இவர்களின் சடங்குமுறை அனைத்தையும் பிலாத்தியும், மூட்டுக்காணியுமே முன்னின்று நடத்துகின்றனர்.

பெண்ணிடம் தவறாக நடப்பதை மன்னிக்க முடியாத குற்றமாகக் கருதுகின்றனர். அவ்வாறு நடந்துவிட்டால்

அவன் அப்பெண்ணை மணம் செய்து கொள்ளவேண்டும். இல்லையேல் அவ்விடத்தை விட்டுச்சென்றுவிடவேண்டும். இவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதில்லை. காணி என்ற முறையில் மிகவும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இவர்கள் புலையன், குறவன், வேடன் ஆகியோரை விரும்புவதில்லை. மற்றெவர் வரினும், அவர்களை முகமலர வரவேற்று அன்போடும் அடக்கத்தோடும் நடந்து, தன்னிடமிருக்கின்ற உணவைப் பகிர்ந்தளித்து மகிழ்கின்றனர்.

இவர்களது குடும்பம் இல்லம் எனப்படும். இது இரு பிரிவுகளையுடையது. தந்தை வழியில் அமைந்தவை அண்ணன் தம்பி இல்லம் எனவும், தாய்வழியில் அமைந்தவை மச்சம்பி இல்லம் எனவும் அழைக்கப்படும். காணிகளின் முதல் தாயாகிய அய்யப்பன் முத்திக்கு பெண்டிர் நிறைய பேர் இருந்தமையால் மணமகன் கிடைக்கவில்லையாம். அதனால் தன் அண்ணனிடம், காட்டிற்குச் சென்று வேட்டையாடிய மான் மாமிசத்தைப் பத்து காணிக்குடியிலுள்ள ஆடவர்க்குக் கொடுக்கும்படிக் கட்டளையிட, அவனும் அவ்வாறே செய்ய, மச்சம்பி இல்லம் என்ற முறை தோன்றியதாகக் கதை கூறுவர். இதனால் மான் மாமிசத்தை உண்ண ஆரம்பித்தனராம். மேலும் இவர்களின் முக்கிய உணவு அரிசி, தேன், கிழங்குவகைகள் போன்றவையாகும்.

இவர்கள் தமிழுக்கும், மலையாளத்திற்கும் தொடர்புடைய மொழியைப் பேசுகின்றனர். தமிழரோடு பேசும்போது தமிழும், மலையாளிகளோடு பேசும்போது மலையாளமும், வீட்டில் அவர்க்குரிய மொழியையும் பேசுவதால், இவர்கள் மும்மொழியறிந்தோர் என்றால் அது மிகையா

காது. மொழி பற்றித் தனியே ஆராய்ந்தால் தனிமொழியா, கிளைமொழியா என்பதை அறிய இயலும்.

காணிக்காரன் தன் பெயர்க்குப்பின் **காணி** என்ற சொல்லைச் சேர்த்தே கூறுகின்றான். பெண்களாயின் இச்சொல் சேர்க்கப்படுவதில்லை. ஆனால் பொதுவாக எல்லா பெயர்களும் காரணப்பெயர்களாக இருக்கின்றன. காட்டாக, பரப்பன் காணி-'பரந்த முகமுடையவன்'; சந்திரன்காணி-'மதி'; மார்த்தாண்டன்காணி-'சூரியன்'; முண்டன்காணி-'உடல் குறையுடையவன்'; நீலி-'நீலம்'; கரும்பி-'கருப்புநிறம்' என்பன நோக்கத்தக்கன. சில இடப்பெயர்களும் இவர்களின் பெயரால் வ்ழங்கப்படுகின்றன. பேச்சிப்பாறை என்ற இடம் **பேச்சி** என்னும் காணிக்குடிப் பெண்ணைக் குறிப்பதாகும். **கோதை** என்னும் பெண்ணின் பெயரடியாகப் பிறந்ததே கோதையாறு என்ற ஆற்றின் பெயர். இவ்வாறு பல பொது இயல்புகளைக் கொண்டு வாழ்பவர்கள் காணிக்குடி மக்கள்.

**6.2. பரம்பரைக் கதைகளும் வரலாறும்:** காணிக்காரர்களைப் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லையாயினும் பல்வேறு கதைகள் அவர்களிடையே நிலவுகின்றன. அகத்திய கூடத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் அகத்திய முனிவர்தான் தங்களது குரு எனவும், பலவகை மந்திரங்கள், மருந்து முறைகள் அனைத்தையும் கற்றுக் கொடுத்தவர் அகத்தியர்தான் எனவும் இவர்கள் நம்புகின்றனர். இதனால் எல்லாவித வழிபாட்டு முறைகளிலும் அகத்தியருக்கென தனியொரு இடம் ஒதுக்கப்படுகிறது. பழங்காலத்தில் மலைவேடன் என்றும், மலை அரையன் என்றும் அழைக்கப்பட்டார்களாம். இவர்கள் **அரையர்** என்ற மருந்துச் செடியின் காரணமாக, அகத்தியரால் **அரையன்** என அழைக்கப்பட்டனர் என்

பது ஒரு கதை. தங்கள்மேல் ஆதிக்கம் செலுத்திய அத்திங்கள் மன்னனுக்குத் திறையாகக் காணி–அதாவது காய், கனி, தேன் இவைகளைக் கொடுத்ததால், இவர்கள் காணி என்று அழைக்கப்பட்டார்கள் என்றும் கூறுவர். திருவிதாங்கூர் மன்னர் இவர்களை மலையரையன் என்று அழைத்த தாகப் பழங்கதையொன்று கூறுகிறது. ஆனால் கேரளாவிலுள்ள தொடுபுழாக் காடுகளில் வாழும் மலையரையனுக்கும், காணிக்காரனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

காணிக்காரர்களிடையே பயின்று வழங்கும் கதைகளில் 'இவர்கள் பாண்டிய நாட்டிலிருந்து வந்து, மேற்குத் தொடர்ச்சி மலையில் குடியேறிய மலைநாட்டு மன்னர்களின் வழிவந்தவர்கள்' என்று கூறப்படுகிறது.

'பாண்டிய நாட்டில் வீரநல்லி என்ற கோட்டையை வீரப்பன் அரையனும், சின்னூர்க் கோட்டையைச் சீதங்கன் அரையனும், அலந்தரைக் கோட்டையை ஆதிச்சன் அரையனும் தலைவர்களாக இருந்து ஆண்டு வந்தனர். ஒவ்வொருவருக்கும் 30 குடும்பங்கள் வீதம் 90 குடும்பங்கள் இவர்களின் கீழிருந்தன. முதல் இரண்டு தலைவர்களும் வேற்றிடம் செல்ல நினைத்து, தென்மேற்குத் திசை நோக்கிச் சென்றனர். அகத்திய கூடத்தை அடைந்ததும் அங்கே காணப்பட்ட கோதையாற்றின் எழில்மிகு வளத்தைக் கண்டு அங்கு உறையலாயினர். வீரப்பனின் ஆற்றலையறிந்த அத்திங்கள் மன்னன், அவனைக் கண்டு, அவன் ஆட்சிக்குட்பட்ட மக்களிடம் திறை வசூலிக்கும் பொறுப்பை அளித்தான். அத்துடன் வீரமார்த்தாண்ட அரையன் என்ற பட்டத்தையுங் கொடுத்தான். இவ்வாறு பெருமைப்படுத்தப்பட்ட வீரப்பன் காணிக்காரர்களின் ஒரே தலைவனாகக் கருதப்பட்டான். வீரமார்த்தாண்ட அரையன் என்ற பட்டமளிப்பு நிகழ்ச்சியை ஒரு விழாவாகக் கொண்டாடும் பொருட்டு, அண்டை நாட்டுத் தலைவர்களுக்கெல்லாம்

அழைப்பு விடுத்தான். அவர்களில் பாண்டிய நாட்டிலுள்ள ஆதிபாண்டி, மீதிபாண்டி, தலைப்பாண்டி என்பவர்கள் முக்கியமானவர்களாவர். அவ்வமயம் ஆதிபாண்டி, 'இவ் விழாவில் கலந்துகொள்ள வேண்டுமாயின் வீரமார்த்தாண் டன் தன் தங்கை கரிம்பாண்டியைத் தனக்குப் பரிசாகத் தரவேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தான். இத ஞல் ஆத்திரமடைந்த வீரமார்த்தாண்டன், ஆதிபாண்டிக் குப் புத்தி புகட்ட வேண்டுமென்றெண்ணி, தன் நாட்டி லிருந்து அவன் நாட்டிற்குள் பாயும் ஆற்றின் குறுக்கே அணைகட்டி நீரைத் தடுத்தான். வடிகின்ற ஊற்று நீரை யும் தடுக்க எண்ணி, ஒரு மந்திரவாதியின் வேண்டு கோளின்படி, தன் தங்கை கரிம்பாண்டியின் இரத்தத் தால் அணையைக் கறைபடியச் செய்தான்.

ஆற்றில் நீர் வறண்டது; நாட்டில் வளம் குன்றி யது; வறுமை தாண்டவமாடியது. வறுமை நீக்க பாண்டிய நாட்டுத் தலைவர்களனைவரும் ஒன்று கூடி, அத்திங்கள் மன்னனை நாடினர். அத்திங்கள் மன்னன் இவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு மத்துடிபிள்ளை என்பவரை அனுப்பி, யானைகளின் உதவியோடு அவ்வணையைத் தகர்த் தெறியக் கட்டளையிட்டான். ஆனால், சென்ற யானை களனைத்தையும் வீரமார்த்தாண்டன் கொன்று குவித்து விட்டான். இந்த அவமானம் தாங்காமல் மத்துடிபிள்ளை தற்கொலை செய்து கொண்டார். இந்நிகழ்ச்சி பாண்டி யத் தலைவர்களையெல்லாம் திடுக்கிடச் செய்தது. அதனுல் அத்திங்கள் மன்னனும், பாண்டியர்களும் ஒன்றுகூடி, வீரமார்த்தாண்டன் மேல் போர் தொடுத்தனர். இறுதி யில் வீரமார்த்தாண்டன் தோற்கடிக்கப்பட்டான். தோற் கடிக்கப்பட்ட காணிக்காரர்கள் செழிப்பு வாய்ந்த அடர்ந்த காடுகளில் மறைந்து வாழலாயினர்' இவர்கள்தான் இன்று

பேச்சிப்பாறைக் காடுகளிலும் நெய்யாற்றங்கரைக் காடுகளிலும் காணப்படும் காணிக்காரர்களாவர்.

பூவுலகில் மனிதன் தோன்றிய விதம், அவன் தொழில் செய்த முறை இவைகளைக் குறித்து இவர்களிடையே கதை ஒன்று உள்ளது. அதாவது, 'தேவலோகத்திலிருந்த பகவானும், பார்வதியும் பூலோகம் வந்தபொழுது நீர்ப் பரப்பே எங்கும் காணப்பட்டதாம். உடனே நீரை நீக்கி மலைகளையும், மண் மேடுகளையும், காடுகளையும் தோற்றுவித்து, கையில் ஒரு கனியை எடுத்து வலப்பக்கம் ஆணும், இடப்பக்கம் பெண்ணுமாகப் படைத்தாராம். இவர்களே உலக மக்களின் முதல் தாய் தந்தையராம். பின்னர் இவர்களின் நான்கு மக்களில் கருத்த உருவமுடையோரைக் காணிக்காரர்கள் என்றும்; கவர்ச்சி மிக்க நிறமுடையோரை அந்தணரென்றும்; சிவந்த நிற முடையோரைச் செட்டியென்றும்; பச்சை நிறமுடையோரைச் சூத்திரர் என்றும் அழைத்தனராம்.

நான்கு பிரிவுகளாக இருந்த மனிதகுலம், காலப்போக்கில் 56 இனங்களாகப் பிரிந்ததால் உலகில் பசியும், பஞ்சமும் பரவியதாம். இதனால் சிலர் வேட்டையாடி மிருகங்களையும், மற்றும் சிலர் காய்கனிகளையும் உண்ண ஆரம்பித்தனராம். எனினும் பஞ்சம் தீரவில்லை. பயிர் செய்தலை அறியாத மக்கள் நிலை பரிதாபத்திற்குரியதானது. இதனால் சிவனும் பார்வதியும் பறவை வடிவில் பூலோகம் புறப்பட்டு அங்கே நடப்பவைகளைக் கவனித்தனராம். அப்பொழுது பறக்கும் பாம்புகளிரண்டு, ஒன்றுக்கொன்று அன்புடனும், அரவணைப்புடனும் இருந்தபடி, மனிதனின் நிலை கண்டு பரிதாபப்பட்டனவாம். இதைக் கண்ணுற்ற சிவனும் பார்வதியும், கடற்கரைப் பகுதியில் பயிரிடுவதற்கேற்ற நிலமொன்றை ஏற்படுத்தி, அதில் பறையனையும்

புலையனையும் பயிர்த்தொழில் செய்ய ஏற்பாடு செய்தார்களாம்.

இச்செய்தி மலபார் மன்னனுக்கு எட்ட, ஏழு பைங்கிளிகளை அனுப்பி, பயிர்த்தொழில் பற்றி அறிந்துவரச் செய்தான். அக்கிளிகள் ஏழு நெற்கதிர்களை எடுத்துவர, பறையர்களை அழைத்து பயிரிட ஏற்பாடு செய்தான். பயிர்த்தொழிலில் அமோக விளைச்சல் கிடைத்தது. அதனால் களஞ்சியமொன்றை நிறுவி அவற்றைச் சேகரித்து வைத்தான். நெல், களஞ்சியத்திலிருப்பதால் எப்பயனும் இல்லை என்பதையுணர்ந்த மன்னன், அக்கிளிகள் ஏழையும் சமையற்கலை பற்றி அறிந்து வர மீண்டும் அனுப்பினான். அவை பறையரின் மனைவியர் சமைத்த 18வகை அரிசியை எடுத்து வந்தன. உடனே தன் சமையற்காரனை அழைத்து அவைபோல் சமைத்து உண்டான். நன்றாக உண்டு மகிழ்ந்தபின் கை கழுவிக் கொண்டிருக்கும்போது, கணையாழி (ring) கையிலிருந்து நழுவி, புழுதியில் புதைந்து கொண்டது. இதனால் மன்னன் மிகவும் சோர்வடைந்தான். இதையுணர்ந்த சிவனும் பார்வதியும் அக்கணையாழி விழுந்த இடத்தில் மூன்று விலைமதிப்பற்ற மரங்களை வளரச் செய்தார்களாம். அவை குங்கிலியம், சந்தனம், மூங்கில் என்பனவாகும்'.

இம்மூன்று மரங்களும் காணிக்காரர்களிடையே மிகவும் பயன்படும் மரங்களாக இருக்கின்றன. இவற்றைத் தங்களுக்காகவே இறைவன் தோற்றுவித்தார் என நம்புகின்றனர். மேலும் இவர்களிடையே வழங்கும் நாட்டுப் பாடல்கள் பல இவர்களின் வரலாற்றையும், பழக்க வழக்கங்களையும் சித்தரிப்பனவாக உள்ளன.

**6.3. மதமும் வழிபாடும்:** பொதுவாகப்பழங்குடி மக்களிடையே எம்மதமும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. காரணம் உலகில்

மனிதன் தோன்றியபொழுது மதம் தோன்றவில்லை. மனிதன் பிறக்கின்றான்; பின் சிறிது காலம் வாழ்கின்றான்; முடிவில் இறந்துபடுகின்றான். இறந்தவன் மீண்டும் வருவதில்லை. இந்நிகழ்ச்சி பழங்குடி மக்களின் மனத்தில் ஓர் அச்சத்தை உண்டாக்கியது. சாவுக்கு அஞ்சிய இவர்கள் இறந்தோரின் ஆத்மாவிற்கு வழிபாடுகள் நடத்தி வணங்கினர். இவ்வாறு தன்னை அச்சுறுத்துகின்ற அனைத்தையும் வணங்கினர்.

காணிக்காரர்கள் கடைப்பிடிக்கின்ற மதம், எம் மதம் என்று அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. முத்தி (முதியவள்), முத்தன் (முதியவன்), ஆகியோரை வணங்குகின்ற முறையால் இவர்கள் முன்னோரை வழிபடும் இயல்பினர் என்பதை அறியமுடிகிறது. மேலும் ஆவியுலகக் கோட்பாடும் மந்திரம், மாயம் இவைகளில் நம்பிக்கையும் உடையவர்களாக இருக்கின்றமையால், காணிக்காரர்கள் பழங்குடி மக்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், இவர்களிடையே வழங்கும் கதைகளில் வரும் சிவன், பார்வதி, சாத்தன், விஷ்ணு ஆகியோர் இந்துமத வழிபாட்டுக்குச் சான்றாகவுள்ளனர். எனினும் இந்துமதக் கோட்பாடுகள் அனைத்தையும் இவர்கள் கடைபிடிக்கின்றார்களா என்றால் இல்லை என்றே கூறவேண்டும். தமக்கே உரிய சில சட்டதிட்டக் கட்டுப்பாடு முறைகளையும் வழிபாட்டு வகைகளையும் ஏற்படுத்தி, அவற்றினின்று சிறிதளவேனும் மாறாமல், அன்றுபோல் இன்றும் கடைப்பிடித்து வரும் சிறப்பு தனித்தன்மை வாய்ந்தது.

**6.3.1. முத்தி:** காணிக்குடியின் காவல் தெய்வம் முத்தி. முத்தி என்றால் முதியவள் என்று பொருள்படும். ஆனால் இங்கு நிலமகளையே முத்தி என்று அழைக்கின்றனர். பயிர்த்தொழிலுக்கு நிலமே மூலகாரணமாகையால், நில

மகளை முத்தி எனும் தெய்வமாகக் கருதி விழாவெடுத்துச் சிறப்பிக்கின்றனர். முத்திக்கு எடுக்கப்படும் விழா முத்தி கொடுதி அல்லது பூ கொடுதி என்று அழைக்கப்படுகிறது.

**6.3.2. சாத்தன்:** மலையுறை தெய்வங்களுக்கெல்லாம் தலைமையானவன் சாத்தன். சாத்தன் (சாத்தா) தான் இன்று ஐயப்பன் (ஐயன்) என்று அழைக்கப்படுகின்ற தெய்வமென்று சிலர் கூறுவர். காணிக்காரர்கள் சாத்தனை மலையுறை தெய்வமாகக் கருதுவது போல், தமிழர் முருகனைக் குன்றுறைக் குமரனாக வழிபடுகின்றனர். சாத்தன்-முருகன் இருவருக்கும் ஒற்றுமை உண்டாவென ஆராயின் இவர்களின் பிறப்பில் வேறுபாடு தோன்றுகிறது. மோகினி வடிவில் வந்த விஷ்ணுவிற்கும், சிவனுக்கும் பிறந்தவன் சாத்தன். ஆனால் சிவனுக்கும் பார்வதிக்கும் பிறந்தவன் முருகன். உறையுமிடத்தால் ஒன்றாயினும், தன்மைகளால் மாறுபட்டுக் காணப்படுவது ஈண்டு நோக்கத்தக்கது.

**6.3.3. குட்டித்தெய்வங்கள்:** முக்கியமான தெய்வங்கள் மட்டுமின்றிக் குட்டித் தெய்வங்களும் வணங்கப்படுகின்றன. அவைகளில் காட்டுத் தேவைகள் (Sylvan deities) வேட்டைத் தெய்வமாகிய காத்திரவாணிமக்கள், ஆயிர வில்லி, மல்லன்தம்புரான், மாடன், மாதப்பெருமாள், கொட்டாரத்துத் தம்புரான், கீமலைத்தம்புரான் போன்றவை முக்கியமானவைகளாகும். இவைகளுள் கடைசி ஆறும் ஆண்தெய்வங்கள். ஆயிரவல்லி என்றால் ஆயிரம் வில்லையுடையவன் எனப் பொருள்படும். விழாக் காலங்களில் 12 நாணலை எடுத்து ஈட்டிபோல் கட்டி, குறிப்பிட்ட இடத்தில் நட்டுப் பழம், பூ, தேங்காய் ஆகியவைகளை வைத்து வணங்குகின்றனர். மல்லன் என்றால் மல்யுத்தக் காரன். தம்புரான் என்ற மல்லனைக் குறிப்பதே மல்லன் தம்புரான். பூ கொடுதி நடக்குங்கால் இவன் வணங்கப்

படுகின்றான். பயிர்களுக்கும் மற்றும் உயிரினங்களுக்கும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ வருகின்ற தீங்கு களைத் தீர்ப்போன் இந்த மல்லன் தம்புரான் என்று நம்பு கின்றனர்.

மாடன் என்ற தெய்வத்தைத் தாம் நடத்துகின்ற விழாக்கள் அனைத்திலும் வணங்குகின்றனர். மேற்பாகம் ஓரடிச் சதுரமும், கீழ்ப்பாகம் இரண்டடிச் சதுரமும் மொத் தம் இரண்டடி உயரமும் உடைய ஒரு மண்ணுருவத்தை அமைத்து மாடன் என்ற பெயரில் வழிபடுகின்றனர். இன்று நாஞ்சில் நாட்டு நாடார்களிடையேயும் இவ்வழிபாடு காணப்படுகிறது. இவர்கள் இதைச் சுடலைமாடன் என்ற பெயரால் வணங்குகின்றனர். இது மற்ற தெய்வங்களுக் கெல்லாம் காவல் தெய்வமாகக் கருதப்படுகிறது.

காணிக்காரர்களால் வணங்கப்படுகின்ற குட்டித் தெய் வங்களனைத்தும், ஒரு காலத்தில் சிறக்க வாழ்ந்து மடிந் தவர்கள் என்று கூறினால் அது வியப்பன்று. காணிக்குடி ஒவ்வொன்றிலும் மூட்டுக் காணியும், பிலாத்தியும் மரியா தைக்கும், வணக்கத்திற்கும் உரியவர்களாக இருக்கின்ற னர். வேற்றிடம் சென்றுவர நினைப்பவர்களும், ஏதேனும் வேலை செய்ய ஆரம்பிக்கின்றவர்களும் தமது மூட்டுக் காணியை முதன் முதலில் வணங்கவேண்டும். மூட்டுக் காணியின் தலையில் தம் இரு கைகளையும் வைத்து அதைத் தம் தலையில் வைத்துக் கொள்வர். இது அவர்களின் வணக்க முறை. மந்திரம் இவர்களின் குலத்தொழில் என்பதை முன் னர் கண்டோம். இதை மூன்று நிலைகளில் பயன் படுத்துகின்றனர். அவை, (1) பயிர்செய்தல், வேட்டை யாடுதல், தேனெடுத்தல் ஆகியவற்றில் பலன் தரவும்; (2) பிறப்பு, பூப்பெய்துதல், இறப்பு இவைகளில் பாது

காப்புத்தரவும்; (3) பகைவர்க்குத் துன்பம் கொடுக்கவும் என்பனவாம். மந்திரத்தை உச்சரித்து அதன் சக்தியை வெளிக் காட்டுகின்றவன் பிலாத்திஒருவனே யாவான். இவன் மந்திரவாதிக்கு மந்திரவாதியாகவும், வைத்தியனுக்கு வைத்தியனுகவும் காணிக்காரர்களிடையே விளங்குகின்ருன். விழாக் காலங்களில் தெய்வம், பிலாத்தியின் கனவில் அடுத்த பிலாத்தி இன்னுர் எனக் கூற, அதன்படிக் குறிப்பிட்டவனே அடுத்த பிலாத்தியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவன் தன் உடைமைகளையெல்லாம் துறந்து விட்டு, காட்டில் சென்று பிலாத்தியால் கற்றுத்தரப்பட்ட மந்திர வார்த்தைகளைக் கூறியபடி 41 நாட்கள் தவத்தில் ஈடுபடவேண்டும். 41 நாட்கள் சென்றதும் ஒரு சக்தி கைவரப் பெற்றவனுகவும், மருந்துச் செடிகளின் தன்மைகளை உணர்ந்தவனுகவும் மாறிவிடுகிருன். இப்படி அனைத்தையும் கற்றுக் கொடுத்து, பெறற்கரிய சக்தியை அளிப்பது முற்றுமுணர்ந்த மாமுனி அகத்தியர் என்று இவர்கள் நம்புகின்றனர். இவ்வாறு பல்வகையான் சிறக்க வாழ்ந்தோரே பிற்காலத்தில் வணக்கத்திற்குரியராயினர் எனக் கோடல் பொருத்தமுடையதாகும்.

அடுத்து ஞாயிறு வணக்கம் இன்றியமையாததாக உள்ளது. ஞாயிற்றை, இவ்வுலகைப் படைத்த பகவான் என்றும், தம்புரான் என்றும் அழைக்கின்றனர். எல்லா விதச் சடங்கு முறைகளிலும் ஞாயிறு வணக்கம் (சூரிய வணக்கம்) நடத்திய பின்னரே மற்ற செயல் முறைகளை ஆரம்பிக்கின்றனர். ஞாயிறு வணக்கத்திற்காகத் திறந்த வெளியில் வைத்து, அதிகாலை நேரத்தில் மண்பானையொன்றில் சமையல் செய்கின்றனர். பின்னர் ஒரு வாழையிலையில் சமைத்ததை வைத்து, ஞாயிற்றை நோக்கி வணங்குகின்றனர். இவ்வாறு சமையல் செய்வதைப் பொங்கலை

என்று அழைக்கின்றனர். வணங்கியபின் மருதப்பூவால் நீரெடுத்து ஞாயிற்றை நோக்கித் தெளிக்கின்றனர். இதற்கு நீரும் பூவும் கொடுத்தல் என்று பெயர். இதனால் இவர்கள் இயற்கையை வணங்கும் இயல்பினர் என்பது தெளிவு.

6.4. விழா : விழா பலவகைப்படும். இன்று ஆண்டு விழா, மணிவிழா, பிறந்தநாள் விழா என மனிதனுக்காக வும், அவனது ஆக்கப்பணிகளுக்காகவும் பல்வகை விழாக் கள் நடத்தப்படுகின்றன. இறைவனுக்காக நடத்தப்படும் விழாவைத் திருவிழா எனக்கூறுகின்றனர். ஆனால் பழங் கால மக்கள் மனிதனுக்கெனத் தனிவிழா நடத்தவில்லை. எவ்விழாவாயினும் அவை தெய்வங்களுக்காகவே அமைந் தன. மனிதனுக்கு விழாவெடுக்க நேரினும், அவனைத் தெய்வமாகக் கருதியே விழா நடத்தினர். காணிக்காரர் களும் இதற்கு விலக்கல்ல.

கோயில் கட்டி வழிபடும் வழக்கம் காணிக்காரர் களிடையே இல்லாமையால் விழா நடத்துவதற்குரிய நிரந்தரமான இடமும் இல்லை. இவ்விழாக்காலங்களில் மட்டும் சிறிய பந்தலொன்றைத் தற்காலிகமாக அமைத் துக்கொள்கின்றனர். தெய்வத்திற்கு அற்பணிக்கின்ற காணிக்கைப் பொருட்களைக் கொடுதி என்று அழைக்கின்ற னர். கொடுக்கப்படுவதால் கொடுதி என்றாயிற்று. பொருட் களைக் குறித்த கொடுதி அங்கு நடத்தப்படும் விழாவிற்கும் பெயராயிற்று. நெல்லை, குமரி மாவட்டங்களிலுள்ளோர் கிராம தேவதைகளுக்கு நடத்தும் விழாவை கொடை என்று அழைப்பது ஈண்டு நோக்கத்தக்கது. காணிக்காரர்கள் தமிழர் நடத்துவது போன்று சித்திரைத் திருவிழா, மார்கழித் திருவிழா எனத்தெய்வத்தைக் காரணமாக்கி நடத்துவதில்லை. ஆனால், தாம் செய்யப்போகின்ற தொழில் களையும் சடங்குகளையும் காரணமாக்கியே நடத்துகின்றனர்

அவற்றுள் மீனக்கொடுதி, பூ கொடுதி, குருக்கன்மார் கொடுதி என்பன முக்கியமானவையாகும்.

**6.4.1. மீனக்கொடுதி :** காட்டில் பயிர் செய்ய வேண்டு மாயின், காட்டை அழித்து நிலத்தைப் பண்படுத்த வேண்டும். காட்டை அழிப்பது பாவம் என்றுஇவர்கள் நம்புவதால், அப்பாவம் தம்மைப் பற்ருதவாறு இருக்கக் காட்டுத் தேவைகளுக்குக் கொடுதி கொடுக்கின்றனர். இதை மீனக்கொடுதி என்று அழைக்கின்றனர். பொது வாக (மீனம்) பெப்ரவரி - மார்ச் மாதங்களில் இக்கொடுதி நடத்தப்படுகிறது.

கொடுதி நடக்கின்ற அன்று அதிகாலையில் பயிரிடு வதற்காகத் தேர்ந்தெடுத்த இடத்திற்குச் சென்று பிலாத் தியும், மூட்டுடுக்காணியும் இன்னும் அறுவரும், ஞாயிறு வணக்கம் செய்வர். பின்னர் பிலாத்தி மூன்று வாழை இலை களில் சமைத்த உணவையும், ஐந்து கூவாச் செடி இலை களில் விதையையும், மற்றும் தேங்காய், பழம், பூ (பிச்சி) இவைகளையும் கிழக்குமுகமாகப் படைத்து வைப்பான். இதைப் **படையல்** என்று கூறுவர். கூவாச்செடி இலைகளில் வைக்கப்பட்டிருக்கும் விதை சிவன், சாத்தன், ஆயிர வல்லி, மாடன், முத்தன்மார் ஆகியோரின் அர்ப்பணமாகக் கருதப்படும். பின் அதன் முன் ஒரு குழி எடுத்து அதில் நெருப்பிட்டு வணங்குவர். இச்செய்கையைக் **குளிரு பிடித்தல்** என்பர். அதாவது மன்னிப்புக்கோரும் செய்கை என்பது பொருள். இறுதியில் தம்மிடமிருக்கின்ற வெட்டுக் கத்திகளையெல்லாம் அந்த நெருப்பிடையிட்டுத் தூய்மைப் படுத்திய பின், எந்தெந்த நிலத்தை யார்யார் பண்படுத்த வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவர். அதற்காகப் பிலாத்தி சிறிது விதையை எடுத்து மூட்டுக்காணிக்கும், மற்ற அறுவருக்கும் கொடுப்பான். அவ்வெழுவரும் தங்களிட

மிருக்கின்ற விதையை எண்ணி, இரட்டை எண்ணுகை இருப் பின் தத்தமக்கென்று உறுதி செய்த நிலத்தைப் பண்படுத்து வர். அவ்வாறில்லையேல் வேற்றிடமொன்றைத் தேர்ந் தெடுத்து அங்குப் பயிரிடுவதின் பொருட்டுப் பண்படுத் துவர்.

இவ்வாறு நடக்கின்ற விழாவில் எவ்வித ஆட்டமும் பாட்டும் இரா. தாம் செய்யப்போகின்ற (காட்டை அழிக் கின்ற) பாவத்தை மன்னித்தலின் பொருட்டுக் கொடுக்கப் படும் கொடுதியாகையால் அமைதியுடன் நடத்துவர்.

**6.4.2. பூ கொடுதி (முத்திக்கொடுதி) :** கொடுதிகளிலெல் லாம் மிக்க சிறப்போடும், ஆரவாரத்தோடும் நடத்தப்படும் ஒரே விழா இந்தப் பூ கொடுதி ஆகும். தமிழர் அறுவடை நந் நாளை பொங்கல் திருநாளாகக் கொண்டாடுவது போல்; கொடவர் புத்தரிமங்கல எனக் கொண்டாடுவது போல்; இவர்களும் அறுவடையானதும் அம் மகிழ்ச்சியை விழா வெடுத்துக் கொண்டாடுகின்றனர். இக்கொடுதி பொது வாகக் கன்னி (செப்டம்பர் - அக்டோபர்) மாதத்தில் நடைபெறும்.

கொடுதி நடக்கின்ற அன்று அதிகாலையில், காணிக் குடியில் உள்ள அனைவரும் தம் குடும்பங்களுடன் மூட்டுக் காணியின் வீட்டிற்குச் சென்று ஞாயிறு வணக்கம் செய்வர். பின்னர் அறுவடையான நிலத்தின் பக்கத்தே சிறிய பந்தலொன்றைக்கட்டி, கொண்டு சென்ற பொருட் களை அங்கு வைப்பர். அங்கு குளித்துவிட்டு வந்த இளைஞர் கள் ஏழுபடி நெல்லில் பாதியை அரிசிமாவாகவும், மீதியை அவலாகவும் இடிப்பர். பிலாத்தி பூசை செய்ய ஆரம் பிப்பான். அப்பொழுது மூட்டுக்காணியும் மற்ற மூவரும் சாற்றுப் பாட்டு என்ற பாட்டை இசையுடன் பாட ஆரம் பிப்பர். இசை மீட்டக் கொக்கரை என்ற இசைக்கருவி

யைப் பயன்படுத்துகின்றனர். இக்கருவியை மீட்டும்போது பயபக்தியோடு இருக்கின்றனர். இங்கு பாடப்படும் பாட்டு நிலமகளைப்போற்றவும், நிலத்திலே வளமை குன்றாது வளரும் பயிர்கள் நிறைந்த விளைச்சல் தரவும் பாடப்படுகின்றது.

இக்கொடுதியின் உச்சக்கட்டம் பகல் பன்னிரெண்டு மணியாகும். அப்பொழுது பிலாத்தி அகிற்புகை காட்ட அனைவரும் குரவை ஒலி எழுப்பி ஆரவாரப்படுத்துவர். அந்நேரம் மூட்டுக்காணி மருள் பெற்று ஆடிச் சில அருள் வாக்குகளைக் கூறுவான். இது வெளிச்சப்பாடு என்று அழைக்கப்படும். குமரி மாவட்டத்தில் விழாக்களில் ஆடும் ஆட்டத்தைச் சாமி ஆட்டம் என்றும்; அருள்வாக்குச் சொல்வதைச் சாமி கணக்குச் சொல்லுதல் என்றும் கூறப்படுவது ஈண்டு நோக்கற்குரியது. இவ்வாறு தம் குறை வேண்டி நிற்பார்க்கு நிறைவுபெற அருள்வாக்குக் கொடுத்தபடி சுமார் ஒரு மணிநேரம் ஆட்டம் நடக்கும். ஆட்டம் முடியும் நேரத்தில் படைத்து வைக்கப்பட்டிருக்கும் அவல், பழம், தேங்காய் இவைகளை அனைவர்க்கும் பகிர்ந்தளிப்பர். இத்துடன் கொடுதி முடிவு பெறும்.

**6.4.3. குருக்கன்மார் கொடுதி :** வேட்டைக்குச் செல்வோர் குருக்கன்மார் அல்லது காத்திரமக்கள் என்ற தேவதைகளை வணங்குகின்றனர். வேட்டைக்குச் செல்கின்ற வழியில் எவ்விதத் தொல்லைகளும் இல்லாமல், வெற்றி பெற்றுத் திரும்பவேண்டுமென்று வணங்குகின்றனர். அதற்காக அதிகாலையில் ஞாயிறு வணக்கத்தை முடித்துக் கொண்டு, அடர்ந்த காட்டினுள் சென்று பூசை செய்வர். வழிபாடு முடிந்ததும் இரண்டடி சதுரத்தில் குழியெடுத்து, அதில் நெருப்பிட்டு, தங்கள் ஆயுதங்களை அதன் முன் வைத்து வணங்குவர். பின்னர் பிலாத்தி மந்திரமொன்றை

ஓதி அவ்வாயுதங்களை அவரவர் கையில் எடுத்துக் கொடுப்பான். இச்சடங்கு **செல்லாப்பிள்ளைக்குப் பூ வளர்த்தல்** என்று அழைக்கப்படும். இக்கொடுதியில் பாட்டு, ஆட்டம் ஏதும் இரா.

6.4.4. காணிக்காரர்களிடையே அனைவரும் பங்கு பெறுகின்ற, யாவராலும் போற்றப்படுகின்ற மற்றொரு கொடுதி இன்று பழக்கத்திலிருக்கிறது. இக்கொடுதியை எப்படியும் நடத்தவேண்டுமென்ற கட்டுப்பாடு கிடையாது. ஆனால், காலக்கேட்டால் மழையின்றி நிலம் வறண்டாலோ, கொடிய நோயால் மக்கள் துன்புற்றாலோ, மற்றும் தொல்லைகள் இவர்கள் எல்லைக்குள் ஏற்பட்டாலோ அவைகளை நீக்குதலின் பொருட்டு அனைவரும் கூடி, தம்புரான் சாத்தன் ஆகிய தெய்வங்களுக்குச் சிறப்பான முறையில் கொடுதி கொடுத்து வழிபடுகின்றனர்.

முதலில் பல்வேறு இடத்திலுமுள்ள பிலாத்தியும், மூட்டுக்காணியும் ஒன்று கூடி, கொடுதி நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வர். அதற்காகத் தென்னை ஓலையால் எட்டுக் கால்களைக் கொண்ட பந்தல் ஒன்றை ஏற்படுத்தி, இளம் தென்னை ஓலைகளாலும், வாழைக் குலைகளாலும், கமுகம் பூக்களாலும் அலங்கரித்து வைப்பர். பந்தலின் மேற்குப் பாகத்தில் குடில் ஒன்றைக் கிழக்கு நோக்கிக் கட்டி, தெய்வத்திற்குரிய உடை, ஆயுதம் அனைத்தையும் வைப்பர். பந்தலின் நடுவே தெட்டிப் பூவையும், கமுகம் பூவையும் இரண்டடி உயரத்தில் குவித்து வைத்திருப்பர்.

பின்னர் பிலாத்தி குடிலின் முன்னால் ஏழு வாழை இலைகளில் நெல், சோறு, இளநீர், கள், வெற்றிலை, பழம், பூ ஆகிய அனைத்தையும் முறையே சாத்தன், ஆயிரவில்லி, மல்லன் தம்புரான், மாடன், மாதப்பெருமாள், வில்லி

ராசா, முத்தன்மார் ஆகிய தெய்வங்களுக்குப் படைத்து வைப்பான். அப்பொழுது மூட்டுக்காணியும், மற்று மூவரும் சேர்ந்து சாற்றுப்பாட்டு, மாதப்பெருமாள் பாட்டு, வில்லிராசா கதை ஆகியவற்றை ஒவ்வொன்ருகப் பாடிய வண்ணமிருப்பர். சுமார் 12 மணியளவில் அகிற்புகை காட்ட, மூன்று வெடிகளை வெடிப்பர். கூட்டத்தில் ஒரே ஆரவாரமாக இருக்கும். அப்பொழுது குடிசையினுள் ளிருந்து மருள்பெற்ற பிலாத்தி, தலைமயிரைத் தொங்க விட்டபடி, வாயில் நுரை தெரியும்படி, பயங்கரத் தோற்றத்துடன் வெளிவந்து ஆடுவான். இதைத் துள்ளல் என்று கூறுவர். இதற்கிடையில் பார்த்துக்கொண்டிருப் போரில் சிலர் மருள் பெற்று ஆடுவர்.

மாலை இரண்டுமணியளவில் மூன்றடி உயரத்திற்கு விறகினை அடுக்கி நெருப்பிடுவர். அது இரண்டுமணி நேரம் எரிந்தபின் பிலாத்தி அதன்மேல் நின்று ஆடுவான். கால்மணி நேரம் ஆடியபின் அங்கிருக்கும் பூக்குவியலைத் தன்மேல் சொரிந்துகொண்டு, அருள்வாக்குச் சொல்லத் தலைப்படுவான். அப்பொழுது அங்கு நிற்கும் காணிச் சிறு வர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனி பெயரிட்டு அழைப் பான். பின்னர் இச்சிறுவர்கள் அப்புதிய பெயராலேயே அழைக்கப்படுவர்.

கொடுதியின் இறுதியில் மூட்டுக்காணி ஒரு சேவலின் தலையை அறுத்துவிட்டுப் பிலாத்தியிடம் கொடுப்பான். அவன் அறுபட்ட இடத்தை வாயில் வைத்து இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பான். உறிஞ்சிக் குடித்ததும் அவன் கால் கை தடுமாறிக் கீழே விழுவான். உடனே கொடுதி கொடுத்ததின் பலன் கிடைத்துவிட்டதென உணர்ந்து, அனைவரும் ஆரவாரக் களிப்பெய்துவர். கொடுதி இவ்வாறு முடிய, அங்கு படைக்கப்பட்டிருக்கும் பொருட்களையெல் லாம் அனைவர்க்கும் பகிர்ந்தளிப்பர்.

**6.5. தொழில் :**

**6.5.1. பயிரிடுதல் :** காணிக்காரர்கள் ஆண்டுக்கொரு முறை நெற்பயிர் செய்கின்றனர். மீனக் கொடுதி கொடுத்து நிலத்தைத் தேர்ந்தெடுத்தபின், பண்படுத்த ஆரம்பிப்பர். இவர்களிடம் கலப்பை போன்ற கருவிகள் இல்லை. மம் மாட்டி (மண்வெட்டி) என்ற கருவியால் மண்ணைப் பண் படுத்துகின்றனர். மூன்று நாட்கள் இவ்வாறு செய்தபின் மலை நெல்லை விதைக்கின்றனர். இது ஆறு மாதப் பயிர்.

மூன்று மாதம் சென்றபின் பெண்கள் களைஎடுக்க ஆரம்பிக்கின்றனர். கதிர்வரும் நாள்முதல் அறுவடை யாகும் வரை அனைவரும் தெய்வத்தை நினைத்து வணங்க ஆரம்பிக்கின்றனர். இவர்கள் மழையையே நம்பி இருப்ப தால் மிருகங்களாலோ, பிறவற்றுலோ தீங்கு நேராம லிருக்கவே வழிபாடு செய்கின்றனர். அறுவடை நாளில் பெண்களே அதிகமாக வேலை செய்கின்றனர். நெற்பயிர் மட்டுமன்றி வாழை, மரவள்ளிக்கிழங்கு, மற்றும் கள் தயாரிக்கத் தென்னை, கஞ்சாச்செடி ஆகியவைகளை தங்கள் இருப்பிடங்களைச் சுற்றிப் பயிரிடுகின்றனர்.

**6.5.2. வேட்டையாடுதல் :** காத்திரமக்கள் என்ற வேட்டைத் தேவதையை வணங்கிவிட்டு 20 மைல், 30 மைல் வரைச் சென்று இவர்கள் வேட்டையாடுகின் றனர். செல்லும்போது அரசனே அல்லது அந்தணனே எதிர்ப்பட்டால் அபசகுனமாகக் கருதப்படுகிறது. புலி, மான், பன்றி, முள்ளம்பன்றி, காட்டு மாடுகள் போன்ற விலங்குகளையும்; கொக்கு, குயில், கிளி, காட்டுக்கோழி போன்ற பறவைகளையும் வேட்டையாடி உண்கின்றனர். இரண்டு அல்லது மூன்று நாட்கள்வரை காட்டிலே தங்கி வேட்டையாடும் பழக்கம் இவர்களுக்கு உண்டு.

**6.5.3. தேன் எடுத்தல்:** மூட்டுக்காணியின் முன்னிலையில் தெய்வ வணக்கம் செய்துவிட்டு, இரண்டு அல்லது மூன்று பேராகச் சேர்ந்து தேனெடுக்கச் செல்கின்றனர். தேனீ எழுப்புகின்ற ஒலியைக்கொண்டு, அவை இருக்குமிடத்தை அறிந்தபின், பஞ்சில் நெருப்பிட்டுப் புகையச்செய்து தேன டையை எடுத்துவிடுகின்றனர். துணியாலோ அல்லது சல்லடையாலோ அதைப் பிழிந்து, தேன் வேறு அடை வேருக எடுக்கின்றனர்.

இவர்கள் நெருப்பு உண்டாக்கும் முறை ஆராய்ச்சிக் குரியது. சுமார் 6 அங்குல நீளமுடைய மூங்கிலின் ஒரு முனையில் சிறு துவாரமொன்றை ஏற்படுத்தி, அதனுள் காட்டுப் பஞ்சைத் திணிக்கின்றனர். பின் துவாரமிருக்கும் இடத்தில் சிறு கல் அல்லது இரும்புத்துண்டு ஒன்றை வைத்து மற்ருெரு கல்லால் உரசுகின்றனர். அப்பொழுது ஏற்படுகின்ற தீப்பொறி உள்ளிருக்கும் பஞ்சில் பரவ, நெருப்பு உண்டாகிறது.

## 6.6. சமூகப் பழக்கவழக்கங்கள் :

**6.6.1. பிறப்பு :** ஒரு பெண் கர்ப்பவதியானுல், முதல் ஆறுமாதம் வரை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி இருக் கின்ருள். ஏழாம் மாதத்தில் அவளது குடிசையின் முன்னர் ஏழு பானைகளை வைத்துச் சோறு சமைக்கின்றனர். சோறு வெந்துவரும் வேளையில் அப்பெண் ஏழு பானைகளையும் தொட்டு வணங்குகின்ருள். இப்பானைகள் ஏழும் பேறு காலத்தில் காக்கின்ற மருத்துவ முத்திமார் என்ற தெய்வங் களைக் குறிக்கும். இதைப் பொங்கலை என்று அழைக் கின்றனர்.

கர்ப்பவதி பேறு காலத்தில் தனிக் குடிசை யில் இருப்பாள். ஆண் குழந்தை பிறந்தால் குரவை

ஒலியும், பெண் குழந்தை பிறந்தால் ஒலி எழுப்பாமலும் இருப்பர். குழந்தை பிறந்ததுமுதல் 11 நாட்கள்வரை, மற்றெவரும் அவளைப் பார்க்கக்கூடாது. இதைத் தீட்டு என்று கூறுவர்.

**6.6.2.** மெச்சூடு: முதல் மாதவிடாயை மெச்சூடு என்று அழைக்கின்றனர். மாதவிடாய் கண்டதும் அப்பெண்ணைத் தனியான குடிசையில் வைக்கின்றனர். செய்தியறிந்து வருகின்றவர்களுக்கு அரிசிமாவால் செய்த பணியாரத்தைக் கொடுத்து வரவேற்கின்றனர். முதல் மாதவிடாய்க்கு ஏழு நாளும், மற்ற மாதவிடாய்க்கு நான்கு நாளும் தீட்டைக் கடைப்பிடிக்கின்றனர். அவ்வமயம் ஆண்கள் இவர்கள் பக்கத்தில் செல்லமாட்டார்கள்.

**6.6.3.** திருமணம்: பழங்காலத்தில் காணிக்காரர்களிடையே பால்யமணம் வழக்கத்தில் இருந்ததாகக் கூறுகின்றனர். ஆனால் இன்று அகமணம், புறமணம் என்ற இரு முறைகளையே கடைப்பிடிக்கின்றனர்.

திருமணம் நடத்த முதன்முதலில் பையன் வீட்டாரே எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். பெண்வீட்டிற்குப் பையனின் தந்தையும், தாய்மாமனும் வாக்குவச்சி (நிச்சயதாம்பூலம்) நடத்த வந்ததும் விளிகாணி* அங்குள்ள பிலாத்தி, மூட்டுக்காணி அனைவரையும் அழைத்து வருகின்றான். யாவரும் வந்ததும், புதிய பரம்பு நிலத்திற்குச் சென்று கிழக்கு முகமாக தேங்காய், நெல், பழம், பூ, வெற்றிலை இவைகளை 21 படுக்கையாகப்போட்டு வணங்குகின்றனர். பின்னர் பையன் வீட்டார் கொண்டுவந்திருக்கும் வெற்றிலை, பாக்கு இவைகளை அனைவருக்கும் கொடுத்ததும், பிலாத்தி திருமணநாளைக் குறிக்கின்றான். இவர்களிடையே வரிசை கொடுக்கும் வழக்கம் இல்லை.

* அனைவரையும் அழைத்து வருவதால் இப்பெயர் பெற்றான்.

மணநாளுக்கு முந்தியநாள் வந்த விருந்தினர்க்கு பையன் வீட்டில் நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. அன்று மாலையில் பையனின் நாத்தனு (அக்காள்/தங்கை) ஒரு புதிய வேட்டி, வெற்றிலை, பாக்கு இவைகளைக் கட்டியெடுத்து பையன், மற்றும் உறவினர்கள் புடைசூழப் பெண்வீட்டிற்குச் செல்வாள். மணநாளின் அதிகாலையில் அவ்விடத்துப் பிலாத்தி அனைவருடன் ஞாயிறு வணக்கத்தை முடித்த பின், முகூர்த்தம் நடத்த வேண்டி ஏழு வாழையிலைகளில் அவல், தேங்காய், பழம், பூ இவைகளைப் பந்தலினுள் கிழக்கு நோக்கிப் படைத்து வைப்பான். அப்பொழுது பையனின் நாத்தனு பெண்ணை அழைத்துவந்து பையனருகில் நிறுத்த, பிலாத்தி சில மந்திர வார்த்தைகளைக் கூறிக்கொண்டே இருப்பான். இதை ஒடுக்கம் என்பர். பின்னர் அவள் கொண்டுவந்த புதிய வேட்டியைப் பெண்ணிற்கு உடுத்துகின்ருள். இதனை முகூர்த்தம் என்று கூறுகின்றனர்.

முகூர்த்தம் முடிந்ததும், மணமகனும், மணமகளும், பெற்ருேர், பிலாத்தி, மூட்டுக்காணி ஆகியோரிடம் ஆசி பெற்று அமர்வர். அப்பொழுது,

**அப்பிதம் உள்ள கணபதி மாரே**
**வலதுகாலு நரம்பெ கைதொய்தாம் போலும்**
**இட்டாரச் சங்கிலி இட்டாரப் போல,**
**எடுத்தாரச் சங்கிலி எடுத்தாரப் போல,**
**ஆற்ருேடு மேப்படை சென்னுரப் போல,**
**வெருக்க சக்கையிட்டுக் கீறிவெச்சாரப் போல,**
**சக்கெ கொண்டு சக்கரெ யாக்கி,**
**சக்கரெ கொண்டு தேனு ஆக்கி,**
**தேனு கொண்டு பாலு ஆக்கி,**
**பாலு கொண்டு படியெ தெறந்து,**
**தேனு கொண்டு திண்ணெ மொய்வி,**
**வடக்கு வடக்கென்னி**

ஒற்றெ கொம்பன் மதகரி யானெ
எடத்தெ கொம்பு கொண்டு குத்தி,
வலத்தெ கொம்பு கொண்டு அகற்றி
மத்தாயப் பொறத்துக் கேற்றிக்கொண்டு வென்னெ,
வெலெ மதியாதெ கன்னி தெரவியம்
இப்பந்தலி கூடிய ஆளுகளெ,
அப்பா, சிற்றப்பா காரணமாரெ,
வில்லிகளெ, வாளிகளெ,
இனமே சனமே! இனயக்க பேருகளெ,
ஈ கன்னி தெரவியம் இப்பந்தலி வெச்சா!

என்ற திருமணப் பாட்டைப் பாடிக்கொண்டிருப்பர். பாட்டு முடிந்ததும் அனைவர்க்கும் விருந்து கொடுப்பர்.

**6.6.4. இறப்பு:** இறப்பு இவ்வுலகத்து உயிர்கள் அனைத்திற்கும் பொது. ஆனால் இறந்தபின் செய்யப்படுகின்ற சடங்கு முறைகள் இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம், மதத்திற்கு மதம் மாறுபடுகின்றது. காணிக்காரர்கள் இறப்பு சம்பந்தமாகச் செய்கின்ற சடங்கு முறைகள் நோக்கத்தக்கன.

யாரேனும் வயது முதிர்ச்சியாலோ, அல்லது உடல்நலக் குறைவாலோ (அம்மை, காலரா என்ற இரண்டு நோயையும் தவிர) உயிர்க்கு ஊசலாடிக் கொண்டிருந்தால், பிலாத்தியும் மூட்டுக்காணியும் அங்குச் சென்று சாற்றுப் பாட்டு பாடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வர். அப்பொழுது பிலாத்தி மருள் பெற்று ஆடி, உயிருடன் போராடிக் கொண்டிருப்பவன் பிழைப்பான் அல்லது பிழைக்கமாட்டான் என்பதை உணர்ந்து, பிழைத்துக் கொள்வான் எனத் தெரிந்தால் உடல் நலம் பெறும் வரைச் சாற்றுப்பாட்டைப் பாடிக்கொண்டிருப்பர். இறந்துவிடுவான் என அறிந்தால் முதலில் அவன் தலைமயிரை வெட்டிக் குடுமிவெட்டு மந்திரம் என்ற சடங்கைச் செய்வர்.

இறப்புச் செய்தியை விளிகாணி அனைவருக்கும் அறிவிக்க, சுற்றத்தார் அனைவரும் வந்தவுடன் பிணத்தைக் குளிப்பாட்டி, வீட்டின்முன் கிழக்கே காலும், மேற்கே தலையுமாக, தென்னை ஓலையில் கிடத்துவர். பின்னர் கள், கஞ்சா, தேங்காய், அரிசி இவற்றை அதன் தலைப் பக்கத்தில் வைத்து ஒப்பாரி வைப்பாரும் உண்டு, அமைதியாக இருப்பாரும் உண்டு. சிறிது நேரங்கழித்து வாய்க்கியரிசி போட்டபடி அனைவரும் அதைச் சுற்றிவருவர். இது இறந்தவரின் இறுதிப் பயணம் தொடங்கப் போகிறது என்பதற்கு அடையாளமாகும்.

இறந்தவனின் வீட்டிற்கு வடமேற்குத் திசையில், மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் குழி வெட்டிப் புதைத்து அவ்விடத்தில் மண்மேடு ஒன்றை ஏற்படுத்துகின்றனர். புதைக்கும் பொழுது தலை மேற்கும், கால் கிழக்கேயும் இருத்தல் வேண்டும். அப்பொழுது அங்கு பெண்கள் எவரும் செல்லக்கூடாது. இவ்வாறு புதைத்து விட்டு அவரவர் இல்லங்களுக்குத் திரும்பும்போது, குளித்து விட்டுச் செல்லவேண்டும். இதைப் புலைகுளி என்று கூறுகின்றனர். இவர்கள் சாவுத்தீட்டை ஏழுநாட்கள் வரைக் கடைப்பிடிக்கின்றனர். அவ்வேழு நாட்களும் நிலத்தில் விளையும் பொருட்கள் எதையும் உண்ணமாட்டார்கள். அவ்வாறு உண்டால் வனவிலங்குகளால் பயிர்களுக்குச் சேதம் ஏற்படும் என நம்புகின்றனர்.

பேச்சிப்பாறைக் காடுகளில் வாழும் சில காணிக்காரர்கள் பிணத்தை எரிக்கின்றனர். எரிக்கும்போது இறந்தவரின் மூத்த மகன், அல்லது மூத்த மகளின் கணவன் எரியூட்டவேண்டும். எரித்த ஏழாம்நாள் அதன் சாம்பலை பக்கத்து நீரோடையில் கலக்குகின்றனர்.

ஒருவர் இறந்தால் அவரது சொத்துக்களின் உரிமை மனைவிக்குக் கிடையாது. இறந்த ஏழாம் நாளே சொத்துக்களை ஆண்மக்களுக்கும், உடன்பிறந்தவனின் ஆண்மக்களுக்கும் பிரித்துக் கொடுக்கின்றனர். மனைவி தம் பிள்ளைகளுடனிருந்தே வாழவேண்டும். இவர்களிடையே விதவை மணமோ, இரண்டாம் மணமோ இல்லை.

6.7. இதுவரைக் கூறியவற்றால் காணிக்காரர்களின் இயல்பும், அவர்கள் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்ற பழக்க வழக்கங்களும் விரித்துரைக்கப்பட்டன. இன்று தமிழக அரசின் சில ஆக்கப்பணிகளால் இவர்களின் வாழ்க்கை பெரிதும் முன்னேறி வருகிறது. இன்னும் அரசினர் உதவிகள் பல செய்து ஊக்குவர் என்பதில் ஐயமில்லை.

## நன்றியுரை

இக்கட்டுரையை எழுத ஆக்கமும், ஊக்கமும் அளித்த எனது பேராசிரியர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கும், டாக்டர் கே. குசாலப்ப கௌடா அவர்களுக்கும், டாக்டர் செ. வை. சண்முகம் அவர்களுக்கும், என் உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பல்வகைகளிலும் கட்டுரை எழுத கருத்துகள் தந்துதவிய சு. சக்திவேலுக்கும் (ஆராய்ச்சி மாணவர், மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்), காணிக்காரர்களை நேரில் கண்டறிய உதவிய குமரி மாவட்ட காட்டிலாகாவினர்க்கும், நண்பர் C. சுவாமிநாதனுக்கும் (பண்டாரவிளை, கடையல், குமரி மாவட்டம்) என் அன்புகலந்த நன்றி உரித்தாகுக.

## SELECT BIBLIOGRAPHY

Agesthialingom, S. 1970 **Field Notes on Kanikkar** Annamalai University.

Luiz, A. A. D. 1961 **Tribes of Kerala**, Trivandrum.

Thurston, E. 1909 **Caste and Tribes of Southern India**, Madras